# வடக்கே ஒரு புதையல்!




நான் வடக்கன் குளம் கிராமத்துக்குப் போன போது காலச்சக்கரத்தில் திரையோதசி திதி ஓடிக் கொண்டிருந்தது. அமுதம் கடைவதற்காக தேவர்கள் முயற்சித்த போது இவ்வேளையில் தான் விஷமானது பொங்கிப் பிரவாகித்தது. அந்த மகாசிவன் பெரும் கருணையோடு அவ்வளவு விஷத்தையும்- பிறருக்கு ஒரு பாதகமும் ஏற்பட்டு விடாதபடி தானே உண்டு விழுங்கப் பார்த்தார். பார்த்துக் கொண்டிருந்த பார்வதி தேவியார் உடனேயே மகாசிவன் மார்புக்கு மேல் கண்டத்தில் கை வைத்து அந்த விஷம் சிவன் வயிற்றில் இறங்கிப் பரவாதவாறு தடுத்து விட்டாள்.

அந்த நொடி மகாசிவன் நீலகண்டன் ஆனார். இது புராணம். ஆனாலும் திரையோதசி திதிக்கு விஷ குணம் தான் பிரதானம். இவ்வேளை சிவச் சிந்தனை மிக முக்கியம்.

நானு 'சிவசிவ' என்று சிந்தித்தபடியே வடக்கன்குளத்தை நோக்கினேன். ஜமீன்தார் ராஜேஸ்வரபூபதி புதிதாய் உருவாக்கியுள்ள ஒரு ஊர் இது. அவரது அரண்மனையும் அதன் மாடத்து விளக்குகளும் அந்த அந்தி சந்திவேளையில் பளிச்சென்று தெரிந்தன.

அரண்மனைக்கு ஈசான்யத்தில் ஒரு சிறு குன்று. ஒரு இரண்டு பனைமர உயரமும் மூன்று நான்கு ஏக்கர் விஸ்தீரணமும் கொண்டிருக்கும் நிலையில் அது கண்ணில் பட்டது.

ஊருக்கு ஈசான்யத்தில் அரண்மனை.

அரண்மனை ஈசான்யத்தில் குன்று...



அடடா... வடக்கன் குளம் இப்படி ஒரு வாஸ்து சக்தி இல்லாத இடமாகவா இருக்க வேண்டும்?

-வாஸ்து நிபுணர் பிரம்மானந்த சாஸ்திரி

## 1922–வடக்கன் குளம்

புழுதி பறக்க வந்தபடி இருந்தது ஜமீன்தார் ராஜேஸ்வர பூபதியின் சாரட் வண்டி.

வெள்ளைநிறத்தில் ஒரு குதிரை- கறுப்பு நிறத்தில் ஒரு குதிரை. இரண்டுமே நல்ல ஜாதிக் குதிரைகள். பிடரி முடியைச் சிரைத்தால் ஒரு மூட்டை தேறும். அப்படி ஒரு செழிப்பு.

குளம்படி போடும் சப்தம் வடக்கன் குளம் முழுக்க கேட்டது. வீட்டுக்கு வீடு எட்டிப்பார்த்தார்கள்.

சாரட்டின் இரு பக்கத்திலும் பட்டுத் திரைச் சீலை போடப்பட்டிருந்தது. சிவப்பு நிறம்.

சாரட் ஓட்டத்தின் இடையே அந்த திரைச் சீலைகள் பக்கவாட்டில் பறப்பது ஏதோ கொடிபறப்பது போல இருந்தது.

கீழைத் தெருவுக்குள் சாரட் பிரவேசித்த போது வாசலில் பெரிதாக கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். ஊர்க் கோயிலான சிவன் கோயில் சாஸ்திரிகளின் மகள் சம்பா.

குளம்படி சப்தம் கேட்கவும் நிமிர்ந்து பார்த்தாள்!

உடனேயே கோலமாவு பாத்திரத்தை அப்படியே போட்டு விட்டு வீட்டுக்குள் ஓடினாள்.

சம்பாவுக்கு பதினெட்டு வயசாகிறது. எட்டு வயசிலேயே கல்யாணமாகிவிட்டது. அவள் கழுத்தில் தாலி கட்டியவன் அவளது அத்தை பையன் சுந்திரமூர்த்தி.

இப்பொழுது பர்மாவில் நல்ல வேலையில் இருக்கிறான்.

அவன் வருகைக்காகத்தான் அவள் காத்துக் கொண்டிருக்கிறாள்.

இன்னமும் கன்னிமைகூட கழியவில்லை.

கல்யாணமாகியும் கன்னியாக உள்ள அவள் மேல் ஜமீன்தாருக்கும் ஒரு கண்.

கோயிலுக்கு வரும்போதெல்லாம் கண்ணாலேயே அவளைப் பார்த்து சுருட்டி விழுங்குவார்.

சரியான காமாந்தகப் பேர்வழி. அதுதான் சாரட் கண்ணில் படவும் சம்பா விழுந்தடித்துக் கொண்டு உள்ளே ஓடினாள். உள்ளே அவள் தாயான பார்வதிக்கே அவள் வந்த வேகம் பகீர் என்றது.

“என்னடி சம்பா... எதுக்கு இப்படி ஓடிவரே...?”

“அம்மாடி... வெளிய ஜமீன்தார் சாரட்...“ அவள் சொல்லி முடிக்க வாசலில், கோலத்தின் மேலேயே சாரட் ஹே... ஹே.. என்று தேங்கி நின்றது.

உள்ளிருந்து ஷெர்வானி உடுப்பில் ராஜேஸ்வர பூபதியும் இறங்கினார்.

“அய்யய்யோ...” அடி வயிறு அமுங்க பதறினாள். பார்வதி அப்படியே புடவை முந்தியால் கழுத்துவரை மூடிக்கொண்டு,

“வாங்கோ... வாங்கோ...” என்றபடியே ஓடிவந்து அவரையும் வரவேற்றாள். வழக்கமான பிராம்மண வீடு. ஒருபுறம் கல்உரல், இன்னொரு புறம் குதிர். ஒருபக்கம் கட்டில், சுவரில் முறம் தொங்கிக் கொண்டிருந்தது. மையத்தில் திறப்பு உள்ள முற்றம். சாஸ்திரிகள் அமர்ந்து ஜாதகம் ஜோசியம் பார்க்கும் போது பயன்படுத்தும் கருந்தேக்கு மேஜை ஒரு புறம். அதன் மேல் பழைய பஞ்சாங்கம். அப்படியே ‘நமது இந்தியா’ என்னும் பத்திரிகை; சுதேசமித்திரன் பத்திரிகை.



ஜமீன்தார் ஒரு பார்வை பார்த்து முடித்தார்.

பார்வதி உடம்பில் மெலிசான பதட்டம்.

உக்காருங்கோ... பெரியவா நிக்கறேளே... என்றாள் சற்றே நாக்கு குழற.

“சாஸ்திரிகள் இல்லையோ....?”

“அவர்... கோயில்லன்னா இப்ப இருப்பார்.”

“ஓ... வாசல்ல கோலம் போட்டுண்டு இருந்த அந்த பாவாடை தாவணிப் பொண்ணு யாரு?”

“அது... அது...”

“என்னஅது இதுன்னு தடுமாறிண்டு நான் என்ன பேயா பிசாசா... எதுக்கு என்னைப் பார்த்துட்டு அப்படி ஓடி உள்ள நுழையணும்?”

“அது வேற ஒண்ணுமில்ல. அவளுக்கு இந்த குதிரைகள்... யானை... அப்படி இப்படின்னா பயம்...”

“ஓ... அது சம்பாதானே.”

“சம்பா... ஆமாம் சம்பாதான்.”

“இப்ப எங்க...? கூப்பிடுங்கோ.”

“கூப்பிட்றேனே... சம்பா...” பார்வதி குரல் கொடுக்க சம்பாவும் மழைப்புறா போல ஒருவித முடக்கத்துடன் மருட்சியுடன் எட்டிப் பார்த்தாள்.

நல்ல விளைந்த கிழங்காட்டம் வளர்ச்சி. சிவந்த நிறம். இடுப்பைத்தாண்டி குஞ்சரத்துடன் அலைபாயும் கூந்தல். குனிந்த தலை.

“என்ன சம்பா... எதுக்கு ஓடினே...? என்னக்கண்டா அப்படி என்ன பயம்?” ஜமீன்தார் ஆரம்பித்தார்.

சம்பாவிடம் மௌனம்.

"பெரியவங்க கேட்டா பதில் சொல்லணும். அதுலையும் நான் இந்த ஊருக்கு ராஜா மாதிரி. உன் வீடு தேடி வேற வந்துருக்கேன். என் எதிர்க்க இப்படி பயந்து நின்னா நல்லாவா இருக்கு..."

"அது... அது..."

"எது?"

"இல்ல... வந்து..."

"என்ன இல்ல வந்து... இப்ப நீ என் கூட சாரட் வண்டில வர்றே. ஒரு தடவை பயணம் பண்ணினா குதிரை பயமெல்லாம் போயே போயிடும்... வா..."

"அய்யோ..." அவள் பதறிவிட்டாள்.

ராஜேஸ்வரபூபதி விடுவதாக இல்லை. பாய்ந்து அவள் கைகளைப் பற்றினார். சம்பாவுக்கு அந்த நொடியே தன் வாழ்க்கை முடிந்து விட்டது போலத்தான் தோன்றியது.

"ஐயோ ஜமீன்தார்வாள். வேண்டாம் அவ கல்யாணமான பொண்ணு." இடையில் உச்ச பட்ச ஸ்தாயியில் அலறிப் பார்த்தாள் பார்வதி. பிரயோஜனம் இல்லை.

"அட வான்னா... வந்து பார். அப்பதான் பயம் தெளியும்..." என்றபடியே இழுத்துச்சென்று சாரட்டில் ஏற்றினார். வீதியே வேடிக்கை பார்த்தது. பின்னாலேயே ஓடினாள் பார்வதி. பயனில்லை. சாரட் புறப்பட்டு விட்டது.

"அய்யோ... அய்யோ... யாராவது வந்து இந்த அநியாயத்தைக் கேளுங்களேன்..." பார்வதி அலறிப் பார்த்தாள்... ஊஹும் பயனில்லை.

எல்லாக் காலங்களிலும் சமூகத்திற்கு ஒரே குணம்தான். பொதுவான விஷயங்களில் அது வேடிக்கை பார்க்கும். 'நமக்கெதுக்கு வம்பு' என்று கதவைத் தாழிட்டுக் கொள்ளும். ஆனால் கால் காசுக்குப் பெறாத விஷயத்தில் ஒன்றுபடும்.



அன்றும் அப்படித்தான் நடந்தது.

விஷயம் சிவன் கோயிலில் இருக்கும் சாஸ்திரிகளின் காதுக்குப் போனபோது கதி கலங்கிப் போய்விட்டார்.

"ஈஸ்வரா... என்ன இது சோதனை..." என்று கண் கலங்கியபடியே போட்டது போட்டபடி இருக்க ஜமீன் நோக்கி ஓடினார். ஆனால், இவர் அங்கே போய் சேர்ந்தபோது சம்பாவின் மானம் முக்காலே மூணு வீசம் போய் முடிந்திருந்தது.

"அப்பா..." என்று அரை நிர்வாணத்தில் பிராண்டப்பட்ட நகக் காயங்களுடன் ஓடிவந்து சாஸ்திரிகளைக் கட்டிக் கொண்டாள் சம்பா. எதிரில் தடிதடியாய் ஜமீன்தாரின் கைத்தடிகள்.

"சாமி... கூட்டிக்கிட்டு போங்க. வாய வெச்சுகிட்டு சும்மா இருந்தா ஜமீன்ல இருந்தே அரிசி பருப்பெல்லாம் வீடுவந்து சேரும். இல்ல வாக்கரிசிதான்..." என்று அவர்களில் ஒருவன் தோரணையாகச் சொன்னான்.

சாஸ்திரிகளுக்கு காரி உமிழலாம் போல இருந்தது. ஆனால் உமிழத் திராணியில்லை. ஏன் என்றால் காரி உமிழ்ந்த ஒருவனின் நாக்கை அங்கேயே வைத்து அறுத்து விட்ட கதை அவருக்குத் தெரியும்.

எனவே பயம் அவரிடம் அந்த நிலையிலும் எச்சரிக்கையாக இருக்கும்படி பார்த்துக்கொண்டது.

வீடு திரும்பும்போது வீதியே பார்த்தது. 'உச்சு உச்சு' கொட்டியது. சாஸ்திரிகள் இடிந்தது மட்டுமல்ல. இறுகியும் போயிருந்தார். அவர் எதிரிலேயே ஒருவர்தான் மாட்டு வண்டியில் சாமான் செட்டுகளுடன் ஆடுமாடுகளைப் பிடித்துக் கொண்டு நடந்தபடி இருந்தார். வண்டியில் அவரது மகள் ஒரு போர்வையால் தன்னை மறைத்துக் கொண்டிருந்தாள்.

அவர் கண்கள் சாஸ்திரிகளைப் பார்க்கவும் கலங்கி விட்டது.

"சாமி... நடந்த அநியாயத்தைக் கேள்விப்பட்டேன். நாமெல்லாம் இளைச்ச மக்க...! ஜமீன்காருக்கு வெள்ளைக்கார கலெக்டர்ல இருந்து மத்தியில் இருக்கறவங்க வரை காவடி தூக்கறாங்க. எல்லாம் பணம் படுத்தற பாடு. தெரியாத்தனமா எனக்கும் அழகா ஒரு பொம்பளப் புள்ளையை ஆண்டவன் கொடுத்துட்டான். அவளைக் காப்பாத்தி கரை சேக்கணும்னா இந்த ஊர்ல இருந்துகிட்டு ஒண்ணும் பண்ண முடியாது. அதான் கண்காணாத இடத்துக்குப் போய்க்கிட்டிருக்கேன்." -என்று அவர் சொல்லவும் சாஸ்திரிகளும் தனக்கு அப்படி தோன்றவில்லையே என்றுதான் வருத்தமேற்பட்டது!



ஒரு ஊரோ இல்லை ஒரு வீடோ சற்சதுரமாகவோ இல்லை நீள்சதுரமாகவோ திசை முக்குகள் வளராமல் சரியாக இருக்கவேண்டும்... மீறி வளர்ந்திருந்தால் வடகிழக்கு சற்று நீண்டும், பருத்தும் இருக்கலாம். வேறு முக்குகள் நீண்டு வளர்ந்திருந்தால் அது ஊரையும் சரி வீட்டையும் சரி... பெரிய அளவில் பாதிக்கும்.

மழை பெய்யும்போது ஊரே குளிர்ந்து விடுகிறது.

இந்த குளிர் எல்லோரையும் ஒரே மாதிரித ன் தாக்கும். ஆனால் உடல் வாகுக்கு ஏற்ப சிலரை இந்த குளிர் பெரிய அளவில் தாக்கும். சிலரை ஒன்றும் செய்யாது. சிலருக்கு இப்படியே குளிருடன் இருக்கமாட்டோமா என்று கூடத் தோன்றும்.

திசை முக்குகளால் பாதிக்கப்பட்ட ஊரில் இருப்பவர்களையும் அந்த பாதிப்பு சக்தி ஒவ்வொரு நொடியும் தாக்கிக் கொண்டுதான் இருக்கிறது.



ஆனால், அதை பிறக்கும் போதுள்ள ஜாதக அமைப்பிற்கு ஏற்ப சிலர் உடனடியாகவும், சிலர் தாமதமாகவும், சிலர் நல்ல விதமாகவும், சிலர் கெட்ட விதமாகவும் உணர்கிறார்கள். எது எப்படி இருப்பினும் ஒரு மனிதன் தான் வாழும் ஊராலும், தான் வாழும் வீட்டாலும் பஞ்ச பூத சக்தியால் நொடிக்கு நொடி நன்மைக்கும் தீமைக்கும் உள்ளானபடியே இருக்கிறான்.

இதில் அணுவளவு பொய்யுமில்லை.

இதுதான் பிரபஞ்ச விஞ்ஞானம்

-வாஸ்து நிபுணர் பிரம்மானந்த சாஸ்திரி

## 2005–வடக்கன் குளம்

வடக்கன் குளத்துக்குள் தனது மாருதி ஆல்டோ மூலம் நுழைந்திருந்தான் ராமகிருஷ்ணன். ஊர் எல்லையிலேயே பெரிய பெயர்ப் பலகை வரவேற்றது.

அவன் வழக்கமாகப் பார்க்கும் கிராமமாக வடக்கன்குளம் இல்லை. திரும்பின பக்கமெல்லாம் தார்ரோடும், சிமெண்ட் ரோடும் ஆச்சரியமூட்டியது. அங்கங்கே டிராக்டர்களில் அறுக்கப்பட்ட கதிர்கட்டுகள் பயணித்தபடி இருந்தன. வீடுகள் பார்க்க மிக லட்சணமாக இருந்தன. எல்லோர் வீட்டிலுமே ஒரு சிறு தோட்டமாவது இருந்தது. ஒரு கொய்யா மரம், ஒரு வாழைமரம், ஒரு அகத்தி அப்புறம் மல்லிகைக்கொடி, செம்பருத்தி என்று பூச்செடிகள்... வீட்டு முன்னால் பஞ்சாயத்து குழாய் கனெக்ஷன் இருந்து, பைப் ஒழுகாமல் பித்தளை மூக்குடன் திருடப்படாமலும்- இருந்தது.

ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டே காரைச் செலுத்தினான் ராமகிருஷ்ணன். கூடவே அவன் அத்தை பெண் வசுமதி. அவள் சுடிதார் உடுப்பில் ஐந்து திரி குத்துவிளக்காட்டம் பளிச்சென்று இருந்தாள்.

"ராம்... ஊர் பார்க்க நீட்டா இல்ல...?"

"ஆமாம் வசு... எனக்கும் ஒரே ஆச்சரியமாதான் இருக்கு. 'உன்னால் முடியும் தம்பி'ன்னு கே.பி.யோட படம் பார்த்திருக்கியா நீ...?"

"உம்... கமல் கூட அதுல சீர்திருத்தவாதியா வருவாரே..."

"எக்ஸாக்ட்லி... அப்படி இங்க யாரோ இருக்கணும்னு நினைக்கறேன்." ராமகிருஷ்ணன் தன் யூகத்தை வார்த்தைப் படுத்தினான். ஆமோதிக்கிற மாதிரி ஒரு பால்காரன் ஒரு மாட்டை ஒரு கையிலும் இன்னொரு கையில் செல் போனுமாகவும் பேசிக் கொண்டே போய்க் கொண்டிருந்தான்.

"இந்த செல்போன் வந்தாலும் வந்தது... இப்படி சீரழியக் கூடாதுப்பா" என்றாள் வசு.

"டோண்ட் சேலைக் திஸ். இது வளர்ச்சி. செல்போனை ராயல் பீப்பிள்ஸ் தான் பயன்படுத்தணும்னு என்ன எதாவது ரூலா? இதுதான் ரியல் டெமாக்ரடிக்...!"

"ஏய்... அதுக்கும் ஒரு அளவு இருக்கு. இது உனக்கே ஓவரா தெரியல?"

அவர்கள் இருவருமே இப்படித்தான். எல்லா விஷயத்திலும் வெட்டிக் கொள்வார்கள். ஆனாலும் ஒருவர் மேல் ஒருவருக்கு பயங்கர ஈர்ப்பு.

காரை ஸ்லோவா செலுத்தியபடி இருந்த ராமகிருஷ்ணன் மெல்ல ஓரம் கட்டி வெற்றிலையை மடித்துப் போட்டபடி நடந்து கொண்டிருந்த ஒரு கிராமத்துப் பெரிசை அழைத்தான்.

"பெரியவரே..."

"என்னப்பு...?"

"அப்புவா... என் பேர் ராமகிருஷ்ணன்."

"சரி அதுக்கென்ன இப்போ..."

"இல்ல அப்புன்னீங்களே... அதுக்காக சொன்னேன்."



"வயசுப் பசங்கள என்ன மாதிரி வயந்தோளியாளுங்க அம்பா அப்புன்னு தான் கூப்புடுதோம். நீங்க விசயத்துக்கு வாங்க..."

"இல்ல... இங்க பஞ்சநாத சாஸ்திரிகள்ங்கறவரோட வீடு எங்க இருக்கு தெரியுமா?"

"அய்யரு வீடா..."

"ஆமாம்..."

"அக்கரகாரம் பக்கம் போங்க. இடிஞ்சு போய் குத்துயிரும் கொலை உயிருமா ஒரு வீடு... அந்த தெருவிலையே அது ஒரு வீடுதான் அப்படி இருக்கும். அதான்."

"தேங்க்ஸ்..."

"என்னா சொன்னீங்க?"

"தேங்கஸ்னேன்..."

"அது சரி. நன்றின்னு அழகா தமிழ்ல சொல்லலாம் இல்லியா?" வெற்றிலை பெருசு அடுத்த வெற்றிலைக்கு மாறிக் கொண்டே ஒரு போடு போட்டுவிட்டு, "அப்பு எதுக்கு அய்யரு வீட்டை பத்தி விசாரிக்கிறீங்க?" என்றார்.

"ராம்... இந்த ஆளுக்கு குறும்பைப் பாரு. வயசானவன் கறத வயந்தோளிங்கறான், அன்பை அம்புங்கறான். தேங்க்ஸை மட்டும் நன்றின்னு நாம சொல்லணுமாம். விடாதே பிடி..." காதோரமாய் கொஞ்சம் கனல் கக்கினாள் வசுமதி.

"சும்மா இரு... அது வந்துய்யா... நாங்க சாஸ்திரிகளோட கொள்ளுப் பேரப்பசங்க..." என்றான் ராமகிருஷ்ணன். பெருசு முகத்தில் உடனே ஒரு அசாதாரண மாறுதல்.

"அய்யரு சாமி பேரமக்களா நீங்க...?"

"ஆமாம். எங்க தாத்தாவை உங்களுக்குத் தெரியுமா?"

"சரிதான். உங்கதாத்தா கோயில்ல பூசாரியா இருந்தப்ப நான்தானே சாமி ஊருக்குள்ள வரைல தீப்பந்தம் பிடிப்பேன்."

அவர் கண்களிலும் அந்த பக்கம் போலவே ஒருவித ஒளி. ராமகிருஷ்ணனுக்கும் அந்த நொடியே அவர்மேல் ஒரு மரியாதையும் பற்றுதலும் ஏற்பட்டுவிட்டது.

"அய்யா உங்க பேரு?"

"நொண்டிச்சாமிங்க..."

"நொண்டிச்சாமியா... இப்படி ஒரு பேரா?"

"அட என்ன அப்பு நீங்க. கெராமத்துப் பக்கம் ரமேஷு சுரேசுன்னா பேரு வெப்பாக? அதுலையும் நான்லாம் சுதந்திரம் வர்றதுக்கு முந்தி பொறந்த கட்டை. அப்பல்லாம் ராமசாமி, கிருஷ்ணசாமின்னு அய்யமார் பேரை வெப்பாங்க. எங்க இதுலல்லாம் தாத்தன் பேர் பேரனுக்கு. என்தாத்தன் பேரும் நொண்டிச்சாமிதான்."

"ரொம்ப சந்தோஷம் மிஸ்டர் நொண்டிச்சாமி. உங்ககிட்ட நானும் நிறைய பேசணும். எனக்கு என் தாத்தா சம்பந்தப்பட்ட எல்லாரையும் பாக்கணும் பேசணும்னு ஆசை. அதான் சென்னைல இருந்து வந்துருக்கேன்..."

"எனக்கும் நம்ம சாமி பேரனைப் பார்த்துல ரொம்ப சந்தோஷம். அனேகமா நீங்க நம் அய்யர் சாமியோட பெரிய மகன் வயத்து பேரனா இருக்கணும். உங்க தாத்தா பேர் விஸ்வநாதன் தானே?"

"ஆமா... கரெக்டா சொல்லிட்டீங்கே."

"ஏன் சொல்லாம, உங்க தாத்தா என் பள்ளிக்கூட தோழன்."

"அடிசக்கைன்னானாம்...."



"அது சரி தம்பி... இப்ப ஒத்த அய்யமார் வீடு கூட இல்லையே... எங்க தங்குவீங்க?" - நொண்டிச்சாமி அக்கறையாகக் கேட்டார்.

"அதான் தெரியல. கோயிலுக்குன்னு ஒரு கல்யாண மண்டபமும் அந்த மண்டபத்துல ஒரு ஏ.சி. ரூமும் இருக்கு தாமே?"

"அட ஆமாம். அப்ப நீங்க நம்ம பஞ்சாயத்தார் ஜவஹர் தம்பியைப் போய் பாருங்க... ரொம்ப நல்ல தம்பி அது. அதுதான் இந்த ஊரையே மாத்திகிட்டு வருது. இது சிங்கப் பூர் மாதிரி. இங்க யாராச்சும் குப்பை கிப்பை போட்டா பஞ்சாயத்துல தெருக் குப்பையை அள்ள உட்ருவாங்க."

"பனிஷ்மெண்ட்டா..."

"அது என்னா மெண்ட்டோ... ஊர் சுத்தமா இருக்கணும். எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கணும்னு அந்த புள்ள நினைக்குது; சொல்லுது. சொன்ன மாதிரியே செய்யவும் செய்யுது."

"நொண்டிச்சாமி சொன்னதை வைத்து பார்த்த போது வடக்கன்குளம் ஒரு வித்யாசமான கிராமமாக இருப்பதை ராமகிருஷ்ணனால் அனுமானிக்க முடிந்தது. கூடவேதன் கொள்ளுத் தாத்தாவான பஞ்சநாத சாஸ்திரிகள் 'தப்பித்தவறிக் கூட யாரும் வடக்கன் குளம் பக்கம் மட்டும் போய்விடக் கூடாது' என்று அவரது ஒரு கடிதத்தில் எழுதியிருந்த வரிகளும் ஞாபகம் வந்தது.

நொண்டிச்சாமியிடம் இருந்து விடை பெற்றுக் கொண்ட ராமகிருஷ்ணன் தாத்தாவின் கடிதவரிகளை அசை போட்டபடியே காரை இயக்கத் தொடங்கினான்.

"என்ன ராம்... என்ன யோசனை?"

"இல்ல... தாத்தாவோட லெட்டர் ஞாபகம் வந்தது.... அதான்."

"அது எப்படிப்பா நான் நினைக்கறதையே நீயும் நினைக்கறே."

"புளுகாதே. இதுதான் சாக்குன்னு என்கிட்ட பிட்ட போடாதே."

"இல்ல ராம். சத்யமா நான் தாத்தாவோட லெட்டரைத் தான் நினைச்சேன். தாத்தா இந்த வடக்கன் குளம் பத்தி எழுதினதுக்கும் இந்த ஊருக்கும் நிறையவே வித்யாசம் இருக்கு."

"அதுதான் எனக்கும் ஆச்சரியமா இருக்கு... ஊரைப் பார்த்தா எவ்வளவு நீட்டா இருக்கு பார். ஒரு வளர்ச்சி எல்லார்கிட்டேயும் தெரியறது. ஒரு மெச்சூரிட்டியும் இருக்கு."

கார் ஓடியபடியே இருந்தது. சாதாரணமாக கிராமத்துப் புறம் கார்களில் போனால் ஒரு பார்வை இருக்கும். ஆனால் இங்கே அப்படி யாரும் பார்ப்பது போலவே தெரியவில்லை.

எப்படியும் பத்து நாய்கள், ஏழெட்டு மாடுகள் குறுக்கே வந்து பிரேக் போடும்படியும் நேர்ந்திருக்கும்.

ஆனால் அதெல்லாம் எதுவும் இல்லை.

பெரும்பாலும் எல்லா வீடுகளிலும் முல்லைக் கொடி பரவி கலீர் என்று பூத்திருந்த நிலையில் ஒருவித வாசனை வேறு.

யாரையும் கேட்காமலே பஞ்சாயத்து தலைவர் ஜவஹர் வீட்டையும்- போர்டை வைத்தே கண்டு பிடிக்க முடிந்தது.

காரை நிறுத்திவிட்டு வசுமதியும் ராமகிருஷ்ணனும் இறங்கினார்கள். வீட்டு முன்னால் இருவருடன் ஜவஹரே பேசிக் கொண்டிருந்தான். தோரணையும் பேச்சின் தெளிவும் அவன்தான் தலைவர் என்று ராமகிருஷ்ணனுக்கும் உணர்த்தியது.



"அந்த சுடுகாட்டு போர்டுமேல பக்கத்து மரக்கிளை வளர்ந்து பரவி மறைச்சிட்டிருக்கு. அதை அப்படியே எடுத்து விடுங்க. மரத்தை வெட்டிடாதீங்க. நம்ம அய்யனார் கோயில் முகப்பு பல்பு பீஸ் போயிருக்கு. அதைக் கழட்டிட்டு புது பல்பு மாட்டிடுங்க. பழைய பல்பை குப்பை தொட்டியில் பார்த்து போடுங்க. எங்கையாவது தூக்கி போட்டு யார் காலையாவது குத்திவைக்கப் போகுது..."

ஜவஹர் மிக பொறுப்புடன் பேசியபடி இருந்தான். கேட்டவர்களிடமும் நல்ல தலையாட்டல்.

"வணக்கம்"- ராமகிருஷ்ணன் ஊடே குரல் கொடுக்க ஜவஹரும் திரும்பினான். உடனேயே வேகமானான்.

"வணக்கம் வணக்கம். வெளியூர்ல இருந்து வர்றீங்களோ?"

"ஆமாம். என் பேர் ராம கிருஷ்ணன்."

"சந்தோஷம். வாங்க உள்ற போய் உட்கார்ந்து பேசுவோம்." -ஜவஹர் பேச்சோடு உள்ளே சென்றான். அவர்களும் பின் தொடர்ந்தனர்.

ஒரு சிறிய ஹால். அதில் ஒரு நாற்காலி. நீண்ட மர பெஞ்சு இரண்டு. அதன் பின் ஒரு கட்டில். அதில் ஒரு பாய் விரிக்கப்பட்டிருந்தது.

கட்டிலில் ஜவஹர் அமர்ந்து கொள்ள, ராமகிருஷ்ணனும் வசுமதியும் மரபெஞ்சில் அமர்ந்து கொண்டனர்.

"சொல்லுங்க... நான் என்ன செய்யணும்? என்ன விஷயமா இந்த ஊருக்கு வந்திருக்கீங்க?"

ஜவஹரிடம் இதமான ஆரம்பம்.

"முதல்ல உங்களுக்கு என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள். இந்த கிராமம் ரொம்ப சுத்தமா இருக்கு. மக்களும் பரபரப்பாக ஒரு வேலை பார்த்தபடிதான் இருக்காங்க. ஒரு ஒழுங்கும் கட்டுப்பாடும் இருக்கு."

"ரொம்ப நன்றி. நீங்க விஷயத்துக்கு வாங்க."

"எனக்கு ஒரு விதத்துல இதுதான் சொந்த ஊர்."

"அப்படியா...!"

"என் தாத்தா பஞ்சநாத சாஸ்திரிகளோட ஊர் இது."

"அட... நீங்க நம்ம கோயில் அய்யர் குடும்பமா?"

"ஆமாம். தாத்தாவுக்குப் பிறகு என் அப்பா, சித்தப்பான்னு எல்லாரும் இந்த ஊரே வேண்டாம்னு கிளம்பிட்டாங்க. நாங்களும் பட்டணத்துலயே பொறந்து அங்கேயே படிச்சு வளர்ந்து ஆளாயிட்டோம். எப்பவாவது வடக்கன் குளம்னு பேச்சவரும்."

"சொல்லுங்க சொல்லுங்க."

"சரி எங்க பெரியவங்களோட பூர்வீகம் எப்படித்தான் இருக்கும்ன்னு பாக்கத்தான் இப்ப நானும் வசுவும் வந்துருக் கோம்..."

"அப்படியே எங்க பூர்வீக வீட்டையும் பார்த்து அதை சரி செய்ய முடியுமான்னும் பாக்கப் போறோம்."

"அப்படியா?" ஜவஹர் அப்படியா என்று கேட்டதில் ஆயிரம் மடங்கு அழுத்தம். ராமகிருஷ்ணனுக்குப் புரிந்தது.

"இந்த விஷயத்துல உங்களால எதாவது உதவ முடியுமா?"

"எப்படின்னு சொல்லுங்க."

"நாங்க சில நாள் இங்க தங்கணும்."

"அதுல ஒண்ணும் பிரச்சினை இல்ல."

"அப்படியே எங்க வீட்டா லேண்ட் ஸ்கேப், அதாவது நீள அகலம் பற்றின தகவல் உங்க பஞ்சாயத்து சர்வே ரிக்கார்ட்ஸ்ல இருக்கும். அதைப் பார்த்துச் சொல்லணும்."

"நிச்சயமா அதுவும் பெரிய விஷயம் இல்ல."

"இது போதும்"



"ஆமா... இப்ப அந்த வீட்டை சீர் பண்ணி என்ன செய்யப் போறீங்க?"

"நாங்களே கூட நிரந்தரமா இங்க தங்கலாம். ஒரு பூர்வீக வீடு பழுதடைஞ்சு கிடக்குதேங்கற ஆதங்கம்தான்."

"ஆனா..."

"என்ன ஆனா...?"

"இல்ல... அத எப்படி சொல்றதுன்னுதான் தெரியல."

"எதுக்கு இந்த பீடிகை? சும்மா சொல்லுங்க."

"உங்க பூர்வீக வீட்டுல ஆவி நடமாட்டம் இருக்கறதாவும் அங்க யாருமே போறதில்லேங்கறதும் உங்களுக்குத் தெரியுமா?"

"ஆவியா... எங்க வீட்லயா?"

"ஆமாம்... இப்பவும் சிரிப்பு சப்தம், அழுகை சப்தம் அப்புறம் கால்சலங்கை சப்தம்னு பலவித சப்தங்கள் கேக்கறதா சொல்றாங்க."

"அப்படியா..."

"ஆமாம்... ஆனால் நான் இதை நம்பல. இந்த ஊர்ல நான் எவ்வளவோ விஷங்களைச் சரி செய்துட்டேன். ஆனா இந்த விஷயத்தை மட்டும் என்னால ஒண்ணும் பண்ண முடியல. உங்க பூர்வீக வீடாவது பரவால்ல... ஜமீன் மாளிகைதான் இந்த கிராமத்தோட பெரிய புதிர்."

"ஜமீன் மாளிகையா?"

"ஆமாம்... ஒரு காலத்துல இந்த ஊர்ல ஜமீன் ஆட்சி தானே? இப்ப தானே அரசாங்க பஞ்சாயத்து..."

"அந்த மாளிகை இந்த ஊர்லயா இருக்கு?"

"பின்ன... ஊர்லயே பெரிய கட்டடம் ஜமீன் கட்டடம் தான். ஆனா இப்ப சுற்றி முள் வளர்ந்து பாழ்பட்டு போய்க் கிடக்கு..."

"ஜமீன் குடும்பத்த சேர்ந்தவங்க யாரும் இல்லையா?" ராமகிருஷ்ணனின் கேள்வியைக் கத்தரித்தது வாசலில் ஒரு பிச்சைக்காரனின் குரல்.

"அய்யா பசிக்குதுங்க. சாப்பிட ஏதாவது இருந்தா போடுங்க." ஜவஹரும் எழுந்து சென்று டேபிள் மேல் கிடந்த சில வாழைப் பழங்கள் மற்றும் ஆரஞ்சுப் பழங்களை எடுத்துக்கொண்டு சென்று அந்த நபரிடம் கொடுத்துவிட்டு திரும்பி வந்தான்.

ராமகிருஷ்ணனுக்குள் ஜவஹர் மேலும் விசுவரூபம் எடுத்தது போல இருந்தது.

"என்னவோ கேட்டீங்களே."

"இல்ல ஜமீன் குடுப்பத்த சேர்ந்தவங்க யாருமே இல்லையான்னு கேட்டேன்."

"இப்ப பிச்சை எடுத்தாரே ஒருத்தர்...."

"ஆமாம்."

"அவர்தான் அந்த குடும்பத்து மிச்சம்."

ஜவஹர் சொல்லவும் கன்னத்தில் ஓங்கி அறைந்தது போல இருந்தது.

"என்னால நம்ப முடியலை."

"என்னாலையும்தான்..."

"எப்படி இப்படி?"

"அதான் காலம்... எனக்குத் தெரிஞ்சு நாங்கல்லாம் தலையெடுத்த பிறகு தான் இந்த ஊர் மாறியிருக்கு. எங்கப்பா காலத்துல கூட ஊர்ல ஒரே அடக்கு முறைதான். மொத்தத்துல ஜமீன் குடும்பம் ஒழிஞ்ச பிறகுதான் ஊரே சுபிட்சமடைய ஆரம்பிச்சது. அதுக்குக் காரணமா தென்மேற்கு பக்கமா எங்க ஊருக்குன்னு ஒரு தண்ணீர் தொட்டி கட்டியிருக்கோம். அதைச் சொல்வாங்க..."



ஜவஹர் பேச்சில் கொஞ்சம் வாஸ்துவும் எட்டிப் பார்த்தது.

"நல்லது... நாங்க கொஞ்சநாள் இங்கதான் தங்கப் போறோம். எங்க வீடு எங்க இருக்குன்னு கொஞ்சம் யாரை யாவது விட்டு காட்ட முடியுமா?"

ராமகிருஷ்ணன் தயங்கியபடி எழுந்தான்.

"காட்றேன். நானே கூட நேர்ல வரேன். ஆனா நீங்க அங்க தங்க முடியாதே."

"தெரியும். ஏதோ கல்யாண மண்டபம் ஒண்ணு இருக்கற தாவும் அதுல ஒரு ஏ.சி. ரூம் இருக்கறதாவும் கேள்விப் பட்டேன்.

"உண்மைதான். ஆனா அதுல ஒரு முக்கியமான அரசாங்க அதிகாரி தங்கியிருக்காரு. அதான் யோசிக்கிறேன்."

"வேற லாட்ஜ் எதாவது..."

"அவ்வளவு தூரம்லாம் இன்னும் இந்த ஊர் முன்னேறலை."

"அப்ப நாங்க தங்க முடியாதா...?"

"உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா இங்க என் கூடவே தங்கிக்கலாம்."

ஜவஹர் சொன்னது ராமகிருஷ்ணனை நெகிழ்த்துவிட்டது ஜவஹரும் உடனேயே அந்த வீட்டில் ஒரு அறையைக் காட்டி "இங்க நீங்க தங்கிக்கலாம். இந்த மரபீரோவுல நீங்க உங்க துணிமணிகளை வெச்சுக்கலாம்." என்றான்.

சந்தித்து ஒரு அரை மணிகூட ஆகவில்லை. ஆனால் ஜவஹர் காட்டிய தாராளம் இருவரையும் வியப்பில் போட்டு புதைத்தது.

"என்ன பாக்கறீங்க?"

"இல்ல... நீங்க இவ்வளவு சீக்கிரமா எங்களுக்கு ஒரு உதவியை ரொம்ப தாராளமா செய்வீங்கன்னு நாங்க எதிர் பார்க்கவே இல்லை."

"இதுல என்ன இருக்கு. நீங்களும் இந்த ஊர் வாரிசு. நானும் இந்த ஊர். பரஸ்பரம் உதவிக்கறோம் அவ்வளவு தான்."

ஜவஹர்பதிலோடு வெளியே புறப்படும் ஆயத்தமும் காட்டினான். அந்த நொடி ஒரு வெடி வெடிக்கும் சப்தம் கேட்டது. வசுமதி காதைப் பொத்திக் கொண்டாள்.

"என்ன சப்தம்?"

"எங்க ஊர் மலைக்கரட்டுல வெடி வெச்சிருக்காங்க. முன்ன ஒரு காலத்துல பெரிய மலை இருந்ததாம். இப்ப அங்கே திட்டுத் திட்டா குளம்தான் இருக்கு."

ஜவஹர் படு கேஷுவலாக சொல்லிவிட்டுச் செல்ல வசுமதியும், ராமகிருஷ்ணனும் ஒருவரை ஒருவர் ஆச்சரியத் துடன் பார்த்துக் கொண்டனர்.



**வா**சஸ்தல பலம் என்பதே வாஸ்து பலம் என்றானது. இந்த மண்ணை, இதில் உள்ள பொருட்களை ஜடமாகப் பார்ப்பதே மனித இயல்பு. ஆனால் உண்மையில் மனிதன்தான் ஜடத்தை விட உறுதி குறைந்தவன். நொடிக்கு நொடி மாறிக் கொண்டே இருப்பவன். தன் பலத்தை இழந்து பலவீனமாகிக் கொண்டிருப்பவனும் இவன்தான். இவன் ஜடமென்று கருதுபவை தான் இவனுக்குத் தேவையான சர்வத்தையும் தந்தபடி இருக்கிறது. எதுவும் ஆகாயத்தில் இருந்து விழவில்லை.

பூமிதான் மனிதனைவிட மேலான சக்தி. அது ஒவ்வொரு உயிரையும் அவன் இருக்குமிடத்துக்கு ஏற்ப



ஆட்டிப் படைக்கிறது. கூர்ந்து கவனித்தால் இதை அற்புத மாக உணர முடியும். ஒருவர் வசிக்கும் வீடு இதற்குச் சான்று கூறும்.

ஒரு வீட்டின் சுவர்ப்பூச்சிலே இருந்து திட்டு, திண்ணை வரை மாடம், பிறைவரை ஒவ்வொன்றுக்கும் ஒரு சக்தி இருக்கிறது. அது பெரிதாக இருந்தால் ஒருவித சக்தி, சிறிதாக இருந்தால் ஒருவித சக்தி.

சுவரில் எங்கே ஆணி அடிக்க வேண்டும் என்பது கூட மிக முக்கியம் காய்ச்சலில் கிடந்த ஒருவரை மாத்திரை மருந்தின் துணை இன்றி வீட்டில் சில விஷயங்களை மாற்றி வைப்பதன் மூலமே குணப்படுத்திவிட முடியும். ஆனால் அதற்கு ஒரு மனிதனுக்கு பிரபஞ்ச ஞானமும், அனுபவ அறிவும் ஏராளமாக வேண்டும்.

ஒருவீட்டில் சதா சண்டைதான். துளிக்கூட நிம்மதி இல்லை. அந்த வீட்டில் ஈசான்யத்தில் ஒரு அடுப்பு இருந்து அதில் எப்பொழுதும் தணல் இருந்தபடி இருந்தது. அந்த அடுப்பை அக்னிமூலைக்கு மாற்றி, ஈசான்யத்தில் தண்ணீர் தெளிக்கவும் குடும்ப உறுப்பினர்கள் மனதில் உடனேயே சாந்தி பரவி ஒருவரோடொருவர் இணக்கம் காட்டிக் கொண் டனர். வீடு என்பது நம்மால் கட்டப்பட்ட நமக்கு நிழல் தரும் ஒன்று என்று மட்டும் எண்ணிவிட வேண்டாம். அதுதான் நம்மைக் கொண்டு தன்னை வடிவமைத்துக் கொண்டது. பின் தன் விருப்பத்துக்கு ஏற்ப நம்மை ஆட்டியும் வைக் கிறது. இந்த உண்மையை உணரும் மனிதன்தான் வீட்டு சக்தியைத் தன் மகிழ்ச்சிக்குரியதாக மாற்றிக் கொள்வான்.

-வாஸ்துஞானி பிரம்மானந்த சாஸ்திரி

## 1922–வடக்கன்குளம்

**எ**து நடக்கக் கூடாதோ, அது நடந்து விட்டது! வீட்டு உத்தரத்தில் சம்பாதூக்கில் தொங்கிக் கொண்டிருந்தாள். பால்ய வயதில் அவளுக்கு நடந்த திருமணத்திற்காக வாங்கி யிருந்த சிகப்பு நிற முகூர்த்தப் புடவையே அவள் வரையில் தூக்குக் கயிறாகி விட்டிருந்தது.

வெளியே தண்ணீர் எடுக்க குளம் வரை போயிருந்த பார்வதி உள்ளே நுழையவும் நடுக்கூடத்தில் சம்பாவின்

உடம்பு கொடியில் காய்ந்து தொங்கும் புடலங்காய் போல தொங்கிக் கொண்டிருந்தது.

அந்த நொடி தண்ணீர்க் குடத்தைப் போட்டுவிட்டு பார்வதி அலறிய அலறல், சிவன்கோயிலில் சாஸ்திரிகள் காது வரைக்கும் கேட்டது. அவரும் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடிவந்தார். சம்பாவைப் பார்த்துவிட்டு மயங்கியும் விழுந்தார். ஊரே திரளத் தொடங்கியது. ஒருவர் முகத்தில் கூட சுரத்தில்லை. எல்லோரும் மனசுக்குள் ஜமீன்தார் ராஜேஸ்வர பூபதியைக் கட்டி வைத்து நார்நாராக உரித்தார்கள். ஆனால் வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை.

ராஜேஸ்வர பூபதிக்கும் தகவல் போனது.

பூபதி அப்போது வெள்ளைக்கார துரை ஒருவருடன், அவர் லண்டனில் இருந்து கொண்டு வந்திருந்த மதுவை ருசிபார்த்துக் கொண்டிருந்தார்.

சம்பா தூக்கில் தொங்கி உயிரைவிட்டு விட்டாள் என்று தன்னிடம் சொன்ன வேலைக்காரன் மருதனின் முகத்தில் மதுவை வாயாலே கொப்பளித்து உமிழ்ந்தார்.

"அவ செத்துப் போனதை ஏண்டா என்கிட்ட வந்து சொல்றே? அப்படியே அவ செத்தாதான் என்ன... நல்லா என்கிட்ட அனுபவிச்சிட்டு தானே செத்திருக்கா...? ஒரு ஜமீன்தார் அவளைத் தொட்டு அனுபவிக்க அவ கொடுத்து வெச்சிருக்கணும் தெரியுமா...?" என்று போட்டார் ஒரு போடு. மருதன் முகத்தைத் துடைத்துக்கொண்டு அப்படியே முதுகை வளைத்து ஒரு கும்பிடும் போட்டுவிட்டு விலகிக் கொண்டான்.

அது பெரிய மாளிகை. எட்டுக்கல் விஸ்தீரணம். ஒரு கல்லுக்கு ஐநூறு சதுரத்தில் கட்டடங்கள். உள்ளிருந்து வெளியே செல்லவே நெடுநேரம் பிடிக்கும். ஒரு வீதி



வழியாக நடந்து போய்க் கொண்டிருப்பது போலவும் தோன்றும். குமைச்சலுடன் நடத்தபடியே இருந்த மருதனுக்கும் அப்படித்தான் இருந்தது. வழியில் நைருதி பாகத்தில் மச்சிலே ஒரு அறை இருந்து அதற்கு வளைவுப்படிகள் கட்டப்பட்டிருந்தன. அந்தப் படியருகே வந்தபோது பலமாக ஒரு இருமல் சப்தம் இவன் காதில் விழுந்தது. காதைத் திருகும் இருமல் சப்தம்... அண்ணாந்து பார்த்தான் மருதன்.

லஸ்தர் விளக்குகள் தொங்கிக் கொண்டிருக்க, அவற்றின் மேல் சூரிய ஒளி பட்டுத் தெறித்தவாறே இருந்தது.

அவனுக்குத் தெரிந்து விட்டது. மேலே இருமிக் கொண்டிருப்பது ஜமீன்தார் ராஜேஸ்வர பூபதியின் பாட்டியான பாண்டிமாதேவியார் என்பது. கிட்டத்தட்ட எண்பது வயதாகிறது. தள்ளாத முதுமை- மிகவும் ஆசாரமான பழக்க வழக்கங்கள் வேறு. எனவே பாண்டிமாதேவியை நைருதி மச்சு அறையில் தாதிகளுடன் போட்டு அடைத்து விட்டார் ஜமீன்தார்.

பாண்டிமாதேவிக்கு நல்ல மனசு. நீதி நியாய நெறி மேல் மிகுந்த நம்பிக்கை உடையவர். ஆனால் அவளைப் போல அவரது கணவரான ஏகாம்பரேஸ்வர பூபதியார் நினைக்க வில்லை. அனுபவிப்பதற்குத்தான் வாழ்க்கை என்பது அவரது சித்தாந்தம். 'புண்ணியம் செய்தவர்கள் மேல்தட்டில் பிறக்கிறார்கள். பாவம் செய்தவர்கள் வயல்காட்டில் பிறக்கிறார்கள்' என்று அடிக்கடி கூறுவார். இதனால் அவர் போட்டஆட்டத்துக்கும் ஒரு அளவில்லை. ஏழைகள் பலரை வயிறெரிய விட்டதன் பயன் பாண்டிமாதேவியின் மகனான விஸ்வநாத பூபதியும், அவர் மனைவி சாரங்கதாராவும் காசி யாத்திரை போனபோது அப்படியே கங்கை ஆற்றோடு போய் விட்டார்கள். முதலில் வெள்ளத்தில் சாரங்கதாரா இழுக்கப் பட்டு அவளைக் காப்பாற்ற விஸ்வநாத பூபதி முயன்றதில் அவரும் உள்விழுந்து போயே போய் விட்டார்கள்.

அந்தச் சம்பவம் ஜமீன்தார் ஏகாம்பரேஸ்வர பூபதியையும் மாரடைப்பு வடிவில் உயிரை வாங்கிவிட்டது. மிக மோச மான வேளையிலும் ஒரு நல்ல வேளையாக விஸ்வநாத பூபதியின் ஒரே மகனான ராஜேஸ்வரபூபதி தாய் தந்தையுடன் காசிக்குப் போகாமல் பாட்டி பாண்டிமாதேவியுடன் தங்கி விட்டான். அதனால் ஜமீன் வம்சம் மொட்டையாகாமல் தப்பியது.

ஆனால், இப்போது பாண்டிமாதேவி, ராஜேஸ்வர பூபதியும் கங்கையுடன் போயிருக்கக் கூடாதா என்று தான் எண்ணுகிறாள். காரணம்... அவனது அட்டகாசங்கள்! அதுவே அவள் உடம்பை உருக்கிவிட்டது. சதா இருமல், நெஞ்சுவலி என்று கிடக்கிறாள். ராஜேஸ்வர பூபதியைப் பார்க்கும் போதெல்லாம் 'தப்பு செய்யாதே, ஒழுங்காயிரு' என்று கூறத் தவறுவதில்லை. ராஜேஸ்வர பூபதிக்கு பாட்டியின் உபன்யாசம் பிடிக்கவில்லை. பார்த்தார்... நைருதி மச்சில் ஒரு தாதியின் துணையோடு தூக்கிப் போட்டு விட்டார்.

தாதிக்கும் உத்தரவு...

"பாட்டி எதற்காகவும் வெளியே வரக்கூடாது... ரொம்ப வும் கத்தினால் குடிக்கிற பழரசத்தில் மதுவைக் கலந்து கொடுத்துவிடு. போதையிலேயே கிடக்கட்டும்..."

இதனால் பாட்டி இப்போது ஒரு குடிகாரி கூட... குடிதான் தன்னைக் குடிப்பவரைக் குடிக்க வைத்தே கொல்லுமே...? பாட்டி பாண்டிமாதேவியையும் அது! குடிக்காக தவிக்க விடுகிறது.

முன்பு மதுவைக் கண்ணால் பார்ப்பது கூட பாவம் என்று சொன்ன பாட்டி, இப்போது சதா மதுவில்தான் கிடக்கிறாள். எப்படியோ தொல்லை இல்லாமல் இருந்தால் சரி என்று ஜமீன்தாரும் நினைக்கிறார்.



அவர் தொல்லைக்கு மது மருந்தாகிவிட்டது... ஊருக்கு எது மருந்தாகப் போகிறது?

நைருதி மச்சுப்பாகத்தை அண்ணாந்து பார்த்தபடி இருந்த மருதனுக்குள் அந்தக் கேள்விதான் எழும்பியது.

நெடுநேரம் பார்த்துக் கொண்டே நின்றான்.

பிறகு என்ன நினைத்தானோ... வளைவான மாடிப்படி யில் மெல்ல கால் வைத்து பாட்டி பாண்டிமாதேவியைப் பார்க்கும் ஆசையுடன் மேலேறத் தொடங்கினான்.

உச்சிப்படியை அடைந்து மச்சு அறைக் கதவருகே போய் நின்றபோது பாட்டி மது பாட்டிலுக்குள் தண்ணீர் விட்டு அதைக் குலுக்கியபடி இருந்தாள். அவனுக்கு அதைப் பார்க்கவும் நெஞ்சையடைத்தது.

எப்படி இருந்தவள்.... இப்படி ஆகிவிட்டாளே...!

பிரமித்துப் போய் நின்றான். கீழே பெண்டுல கெடிகாரம் மணி 12 என்பதற்கேற்ப சப்தம் போட அதைக் கேட்டு கோட்டை மணி அடிப்பவன் ஜமீன் மாளிகையின் நடுத் தலை பாகத்தில் பொருத்தப்பட்டிருந்த ஊர் மணியை அடிக்க ஆரம்பித்திருந்தான்.

ஊருக்கு அந்த சப்தம் தான் 'காலம் சொல்லி'

மச்சு அறையில் இருந்தபடியே கோட்டை மணி அடிப்ப வன் புஜபலத்தோடு சங்கிலியை வலிந்து அந்த காண்டா மணியை ஒலிப்பதை அவனும் பார்த்தான்.

அடுத்து சிவன் கோயிலில் உச்சிக்கால பூஜைக்கான மணி சப்தமும் கேட்கும். ஆனால் அன்று கேட்கவில்லை. எப்படிக் கேட்க முடியும்?

மணி சப்தமும் ஒருவாறு ஓய்ந்து ஒரு மாதிரி அமைதி பரவியது. உள்ளேயிருந்த தாதி, பாட்டியின் பஞ்சு மெத்தை யில் படுத்திருந்தாள். பாட்டிக்கு தனது பாய், தலையணை யைக் கொடுத்து விட்டாள்.

எல்லா இடங்களிலும் வலுத்ததே ஜெயிக்கிறது. இளைத்தால் ஆட்டி வைக்கப்படுவோம்.

மருதனுக்கு அப்படித்தான் தோன்றியது. அது சற்று வேதனையாகவும் உருவெடுத்தது. மெல்ல அறைக்குள் காலை வைத்தான். மணி சப்தம் கேட்டு கண்விழித்திருந்த தாதியும் அவனைப் பார்த்து அதிர்ந்தாள்.

"இது என்னடி கொடுமை... ராணிக்குப் பாய்... உனக்கு மெத்தையா?"

"அது வந்து மருதா..."

"எதுடி?"

"இல்ல... இந்தக் கிழவி குடிச்சுவிட்டு வாந்தி எடுத்து பட்டு மெத்தையை ஒரு வழி பண்ணிடிச்சு அதான்..."

"அதுக்காக நீ ஏறி மேல படுத்துக்குவியா?"

"சரி. இப்ப அதுக்கு என்ன? நீ யார் என்னைக் கேள்வி கேட்க?" அவளிடம் கொஞ்சம் தைரியம் வெளிப்பட்டது.

மருதனுக்கு கன்னத்தில் அவள் அறைந்தது போல இருந்தது.

"ஏய்... என்ன? நான் ஆம்பள... தப்பு பண்ணிட்டு எதுக்கறியா?"

"பெரிய ஆம்பள... நான் ஜமீன்தாருக்கே பயப்படலை, உனக்குத்தானா பயப்படப் போறேன்...?"

அவள் எந்த தைரியத்தில் பேசுகிறாள் என்பது அவனுக்குப் புரிந்து விட்டது. ஜமீன்தார் வரும்போது அவள் ஒரு மாதிரி பார்ப்பதும் சிரிப்பதும் அவரை அவளுக்குள் விழ வைத்து விட்டது.

"ஏய்... அந்த ஆள் ஒரு பொம்பள பொறுக்கி. அதனால அவனுக்கு நீ மயங்கலாம். உன்கிட்ட அவன் மயங்கலாம். நான் அப்படி இல்லை. நறுக்கிப்பிடுவேன்." என்றான்.



அவளுக்கும் முகம் சிவந்து விட்டது. "இரு, இப்பவே போய் ஜமீன்தார் கிட்ட சொல்றேன்." என்று கிளம்பினாள்.

பாட்டி பாண்டிமாதேவியோ அரை போதையில் நடப்பதை எல்லாம் ஒரு சிறு குழந்தை போலத்தான் பார்த்தபடி இருந்தாள்.

"ராணிம்மா... என்ன பாக்கறீங்க? உங்க பேரனோட அட்டகாசத்தைத் தாங்க முடியலம்மா... நீங்க இங்க இப்படியா இருக்கணும்? என்னம்மா இது கோலம்?"

மருதன் பாட்டி முன் மண்டியிட்டான். பாட்டி கோணவாயால் ஒரு சுழிப்பு சுழித்தாள்.

"நான் பேசறது காதுல விழலையா?" அவன் கத்திப் பார்த்தான். ஊஹும். அதேசமயம் பலர்மாடிப் படிகளில் ஏறிவரும் சப்தம் கேட்டது.

தாதிதான் அடியாட்களைக் கூட்டி வந்திருக்க வேண்டும். அந்த நொடி உணர்ச்சிவசப்பட்டு விட்டோம் என்பதை உணர்ந்த கொண்டவன் அப்படியே பட்டு மெத்தை கட்டிலுக்கு அடியில் போய் சுருண்டு கொண்டான்.

பாட்டி சிரித்தபடியேதான் இருந்தாள். கோட்டுவாயில் ஒழுகல் வேறு... திபுதிபு வென்று வந்தவர்களில் தாதி மட்டுமல்ல, ஜமீன்தாரும் இருந்ததுதான் ஆச்சரியம்.

வேகமாக மூச்சிரைக்க வந்திருந்த ஜமீன்தார் புஸ்புஸ் என்று பெருமூச்சோடு சுற்றிச் சுற்றிப் பார்த்தார்.

"எங்க செல்லக்கிளி அவன்? எங்க போய்ட்டான்?" என்று கூடவந்த தாதியிடம் கேட்க, " அவன் ஓடிப் போயிருப்பான்..." என்றாள் அவளும்.

"டேய்... போங்கடா... போய் அந்த நாயைப் பிடிச்சு இழுத்துட்டு வாங்க. அவன் இன்னும் சிலமணி நேரத்துல என் காலடில வந்து விழணும்" என்று நரம்பு புடைக்க கத்தினான் ராஜேஸ்வர பூபதி.

அவர்களும் திரும்பி ஓடினார்கள். ஜமீன்தார் பார்வை பாட்டிமேல் சென்றது.

"கிழவியால தொல்லையில்லையே?"

"அதெல்லாம் எதுவும் இல்லை. ஆனா போதை தெளிஞ்சிட்டா பெருசா அழறாங்க. என்னைப் பாவியாக்கிட்டீங்க, பாவியாக்கிட்டீங்க' ன்னு ஓடிப்போய் மேல இருந்து கீழ குதிச்சு தற்கொலை செய்துக்கல்லாம் பாக்கறாங்க..."

"பாத்து செல்லக்கிளி... கிழவியை அப்படி சாக விட்டுடாதே..."

"ஏன் ராஜா... இப்படி குடிபோதைல வெச்சிருக்கிறதுக்கு போய்த்தான் சேரட்டுமே..."

"அடிபோடி பைத்தியக்காரி. கிழவிக்குத்தான் கஜானா அறை ரகசியம் தெரியும். அதைத் தெரிஞ்சுக்கற வரை கிழவி உயிரோட இருக்கணும்."

"என்னது... கஜானா அறையா?"

"ஆமாம். இந்த ஜமீன் சொத்தும், தங்கமும், வைரமும், கஜானா அறைலதான் இருக்கு. அதோட சாவியும் அதுக்குப் போற வழியும் கிழவிக்குத்தான் தெரியும்."

"இதை நீங்க முந்தியே சொல்லியிருந்தா, இவங்ககிட்ட நான் கேட்டுப் பார்த்துருப்பேன்..."

"செல்லக்கிளி... அந்த ரகசியம் எனக்கு மட்டும்தான் தெரியணும். எனக்கு மட்டும் தெரிஞ்சாலே போதும். உனக்கு நான் அதிக இடம் கொடுத்துட்டேன். அதான் என் எதிர் லேயே நீ இப்படியெல்லாம் பேசறே..."

ஜமீன்தாரிடம் சட்டென்று அந்த மூர்க்ககுணம் தொற்றிக் கொண்டு ஒரு உசுப்பும் உசுப்பியது.

தாதி ஆடிப் போனாள்.



பாட்டி பைத்தியக்காரி போல அரை போதையில் தண்ணியைக் குடித்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்த ராஜேஸ்வர பூபதிக்கு சட்டென்று என்ன தோன்றியதோ...

"செல்லக்கிளி! நீ இனி இங்க இருக்காதே. என்கூட என் அறைக்கு வந்துடு. நான் பாட்டிக்கு வேற ஒருத்தியை தாதியா போட்டுக்கறேன்..." என்றார்.

அவள் முகத்தில் அதிர்ச்சியும் ஏமாற்றமும் ஒருசேர ஓடியது.

"சரி... இனியும் நீ இங்க இருக்க வேண்டாம். என்கூட கிளம்பு" ஜமீன்தார் திரும்பி நடக்கத் தொடங்கினார். அவளும் வேறு வழியின்றி பின்தொடர்ந்தாள்.

அறையில் இப்பொழுது பாட்டி மட்டும் தானிருந்தாள். மெல்ல மருதன் கட்டிலுக்கு அடியில் இருந்து வெளியே வந்தான். ஒட்டு மொத்தமாக கலங்கிப் போயிருந்தான்.

பாட்டி பாண்டிமாதேவியை மிக பரிதாபமாகப் பார்த்தான்.

எப்படி இருந்தவள்... இன்று பேரனாலேயே ஒவ்வொரு நாளும் கேவலப்பட்டுக் கொண்டிருக்கிறாள்! மருதனுக்கு துக்கத்தில் தொண்டை அடைபட்டது. கூடவே தன்னைத் தேடிச் சென்றிருக்கும் ஜமீன் வேலையாட்களை எண்ணிப் பார்த்தவனுக்கு அங்கே இருப்பது பெரிய ஆபத்தாகத் தோன்றியது.

ஒரு துக்க செய்தியைச் சொல்லவந்த தன் வாழ்க்கை இப்படி ஒரேயடியாக திரும்பி தன்னையும் துக்கத்தில் பிடித்துத்தள்ளும் என்பதை அவன் கற்பனை செய்துகூட பார்த்திருக்கவில்லை.

வேறு வழியின்றி ஓடத் தொடங்கினான்.




ஒரு மனிதனின் வெற்றி தோல்விகளுக்கு மூன்று விஷயங்களே காரணிகளாக உள்ளன. இதைத் தவிர்த்து வேறு எந்த காரணிகளும் ஒரு மனிதனின் வெற்றி தோல்விகளில் முக்கியப் பங்கு வகிக்கவே முடியாது.

முதல் காரணி அவனது பாவபுண்ணியங்கள். அடுத்த காரணி அவன் எந்த தாய் தந்தைக்கு மகனாக/ மகளாக பிறக்கிறான் என்பது. மூன்றாவது அவன் எந்த ஊரில், எப்படிப்பட்ட மனையில், அந்த மனையின் எந்த பாகத்தில் பிறக்கிறான் என்பது. இந்த மூன்று காரணிகளில் அவன் பாவ புண்ணியங்கள் என்பவை நடந்து முடிந்தவை. அவன் தாய் தந்தை யார் என்பதும் முடிந்து விட்ட ஒன்று.

அவன் வசம் உள்ள ஒரே காரணி அவன் பிறந்த இடமும் அதன் சக்தியுமாகும். அதை மட்டும் அவன் தெரிந்து கொள்ள முடிந்தால், அதற்கேற்ப அவன் தான் வாழும் இடத்தை நிர்ணயம் செய்துகொள்ள முடியும். வாழும் இடத்தைத் தெரிந்து கொள்ளும்முன் ஊரைப் பற்றியும் அதன் பஞ்சபூத சக்தியையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு ஊருக்கு வடகிழக்கில் வற்றாத நதியோ, குளமோ இருந்து தென்மேற்கில் பெரிய மலையும் இருக்க சரியான சதுர அமைப்பில் அந்த ஊரும் இருந்து விட்டால் அந்த ஊரில் நிச்சயம் பிச்சைக்காரர்களோ, கடன்காரர்களோ இருக்கவே மாட்டார்கள்.

அந்த ஊர் அப்படிப்பட்டவர்களைத் தன்னிடம் அனுமதிக் கவே அனுமதிக்காது. அந்த ஊரில் உள்ள வீடுகளும் ஊரை ஒத்தி எடுத்தது போல தென்மேற்கில் உயர்ந்து வளரும் மரங்களுடன், வடகிழக்கில் வீட்டுக்கான கிணறு (அ) நீர் ஆதாரத்தைக் கொண்டு இருந்தால் அந்த வீட்டில் வாழ்ப வர்கள் மிகவும் மனநிறைவோடுதான் இருப்பார்கள்.

இதுவே மாறிப்போனால், அந்த ஊரை ஆண்டவனால் கூட காப்பாற்ற முடியாது. ஊரின் தலைமகன் என்று கருதப்படும் நபர் ஊரையே சுடுகாடாக்கி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்.



*ஒரு மனிதனின் மனதை மாற்றுவதில் மண்ணுக்கும் அது சார்ந்த திசைகளுக்கும் அவ்வளவு சக்தி உள்ளது. நான் வடக்கன்குளத்தைப் பார்த்தபோது இந்த உண்மையே எனக்குப் புலனாகியது.*

*இந்த ஊர் தலைமகன் அசுரகுணம் கொண்டவனாகத் தான் இருப்பான். இது நிச்சயம்!*

*-வாஸ்து ஞானி பிரம்மான்நத சரஸ்வதி*

## 2005–வடக்கன்குளம்

**வ**டக்கனகுளம் அக்ரஹாரமே தலைகீழாக மாறிவிட்டிருந்தது. சொப்புச் சொப்பாய் பெரிய பெரிய சிமெண்ட் திண்ணையுடன் இருந்த வீடுகள் எல்லாமே உருமாறி சென்ட்ரிங் வீடுகளாகி விட்டிருந்தன. முன்னாலே தோட்டமும், மூங்கில் வேலி என்பதெல்லாம் மாறி முள்கம்பி வேலி, காம்பவுண்ட் வால் என்கிற காலமாற்றம்.

அவ்வளவு வீடுகளுக்கும் நடுவில் சாஸ்திரிகளின் மனை மட்டும் அப்படியேதான் இருந்தது. கூரைமுழுக்க பூசணிக் கொடி பரவி, அது காய்ந்து சருகுகள் பரவியிருந்தன. முன் கூரை அப்படியே சரிந்து தரைதட்டிக் கிடந்தது. இதனால் உள்ளே நுழைய வழியே இல்லை பக்கவாட்டிலும் புதர்கள் மண்டிக் கிடந்தன. இந்தப் பக்கம் ஐம்பது மீட்டருக்கும் அந்தப் பக்கம் ஐம்பது மீட்டருக்கும் காடாக கிடந்தது.

அந்த வீட்டின் முன்நின்று பார்த்தபடி இருந்த ராமகிருஷ்ணனும், வசுமதியும் தங்கள் பூர்வீக வீட்டின் நிலையைப் பார்த்து கொஞ்சம் மருண்டு போயிருந்தார்கள். கூடவே தான் இருந்தான் ஜவஹர்.

"எனக்குத் தெரிஞ்சு இருபது வருஷமா இப்படித்தான் இருக்கு. இதைச் சுத்தப்படுத்தி வெச்சுக்கறதுல அர்த்தமில்லை. இந்த புதர்கள் ஒருவகைல இந்த வீட்டுக்கு பாதுகாப்பா இருக்கறதா தான் நான் நினைக்கிறேன்." என்ற

ஜவஹர், "உள்ள போகணும்னா கொல்லைப்புறம் உள்ள கதவு வழியாகப் போகலாம். ஆனா..." என்று இழுத்தான்.

"என்ன ஆனா...?"

"உள்ளதுஷ்டசக்தி இருக்கறதா பேசிக்கறாங்க..."

"ஆவி இருக்குங்கறதைத்தான் துஷ்ட சத்தின்னு கொஞ்சம் பாலீஷா சொல்றீங்களோ?" வசுமதி தனது இனிய குரலில் ஜவஹரை ஊடுருவினாள். பதிலுக்கு ஜவஹர் சிரித்துவிட்டு, "நான் இந்த ஆவி புகையையெல்லாம் நம்பறதில்ல..." என்றான்.

"அப்ப நீங்க உள்ற போய் பார்த்திருக்கீங்களா?"

"பாத்து என்ன பண்ணப் போறேன்?"

"சாதாரணமா ஒரு வீடோ, இடமோ காலியா கிடந்தா அதை ஆக்ரமிக்கிறதுதானே நம்ம பழக்கம். அப்படி இங்க யாரும் ஆக்ரமிச்ச மாதிரி தெரியலியே. ஆச்சரியமா இருக்கு."

"இது வடக்கன்குளம். ஜமீன் ஆட்சி நடந்தவரைல இந்த ஊரைப் போல ஒரு மோசமான ஊர் கிடையாது. ஆனா இப்ப இந்த ஊரைப் போல நல்ல ஒரு எக்ஸாம்பிளும் கிடையாது. இருந்தாலும் இந்த ஊர்லையும் அப்பப்ப சில அசம்பாவிதங்கள் நடக்கறதத்தான் என்னால் ஜீரணிக்க முடியல..." ஜவஹர் பெருமைப் பட்டுக்கொள்வது போல ஆரம்பித்து சோகத்தில் வந்து முடித்தான்.

"அசம்பாவிதங்கள்னா...?"

"அசம்பாவிதம்னா சாதாரண அசம்பாவிதம் இல்ல... கேட்டா பகீர்னு இருக்கும்."

"பீடிகை போதும். விஷயத்துக்கு வாங்க..."

"நான் வந்துடுவேன். ஆனா நீங்க பயப்படலாம்..."



"மிஸ்டர் ஜவஹர்! ஏன் இப்படி பீடிகை போடறீங்க? பயப்படற அளவுக்கு அப்படி என்ன அசம்பாவிதம்? என்ன தலையையா வாங்கிடுவாங்க?"

ராமகிருஷ்ணன் பயமின்றி சாதாரணமாக கேட்டதற்கு, "எக்ஸாட்லி..." என்கிற ஜவஹரின் பதில் விருட்டென்று வசுமதியைத் திரும்ப வைத்தது.

"என்ன சொல்றீங்க...?"

"தலையையா வாங்கிடுவாங்க"ன்னு கேட்டீங்கல்ல. ஆமாம். தலைதான் போகும்னு சொன்னேன்..."

"தலை போகும்னா?"

"வெட்டப்படும். தலை எங்க போச்சுன்னே தெரியாம எவ்வளவு முண்டங்கள் இந்த ஊரை சுத்திக் கிடந்துருக்கு தெரியுமா?"

"மைகாட். அப்புறம்?"

"அப்புறமென்ன? போலீஸ் வரும். நாய் வரும். அது ஜமீன் பங்களாவை நோக்கி ஓடும். அங்க இருக்கற ஜமீன் தார் ராஜேஸ்வர பூபதி சமாதிகிட்ட போய் நிக்கும். அவ்வளவுதான். போலீசும் ராஜேஸ்வர பூபதியோட ஆவியை யெல்லாம் கைது செய்ய முடியாதுன்னு திரும்பிப் போயிடும்."

"இது என்ன முட்டாள்தனம்? கொலைகாரன் அந்தச் சமாதி கிட்டபோய் கொஞ்சநேரம் அங்க நின்னுருக்கலாம். இல்லையா?"

"அப்படி நின்னுருந்தா, அதுக்குப் பிறகு அவன் அங்க இருந்து வேற எங்கையாவது போயிருக்கணும் இல்லையா?"

"நிச்சயமா. வந்தவழியேகூட திரும்பிப் போயிருக்கலாம்."

"உங்களுக்கு இந்த ஊர் கதை தெரியல. அதனாலதான் இப்படி கேக்கறீங்க?"

"அது என்ன கதை?"

"சொல்றேன். நீங்க முதல்ல உள்ள போய்ட்டு வாங்க எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு..." என்று ஜவஹர் புதர்களுக்குள் ஒரு வழியைக் காண்பித்தான். ராமகிருஷ்ணனும் வசுமதியும் அதற்குள் நுழைந்தனர். சரியான முட்புதர். வசுமதியின் சுடிதாரை நார்நாராக கிழிக்கப் பார்த்தது. துப்பட்டாவைத் தூக்கி தோள்மேல் போட்டுக் கொண்டு பரதத்தில் முத்திரை பிடிப்பவள் போல பார்த்துப் பார்த்து காலை வைத்து நடந்தாள்

"வசு, பார்த்து வா..."

"என்ன பேத்தல் இது ராம். பாக்காம எப்படி நடந்துவர முடியும்?"

"ஒரு வார்த்தைக்குச் சொன்னா கிண்டலா?"

"மீனிங்லெஸ்ஸா எப்ப யார் பேசினாலும் எனக்குக் கோபம் வருங்கறது உனக்குத் தெரியாதா?"

"என்னமோ பெரிய தெய்விக கொள்கை மாதிரி சொல்லிக்கிறியே..."

இருவரும் இளமைக்கேயுரிய உரசல்களுடன் அடி அடியாக எடுத்து வைத்து நடந்தனர். கொல்லைக் கதவும் கண்ணில் பட்டது. பெரிய படாக் மரக் கதவு. கொல்லைக் கதவாக இருந்தபோதிலும் அதிலும் நிறைய வேலைப்பாடுகள் முன்கூரையில் ஓடுகள் உதிர்ந்து அங்கங்கே துவாரங்கள். பல இடங்களில் நூலாம்படைகள். ஒரு சிறு இஞ்சித் துண்டு போல நூலாம்படை நடுவில் சிலந்திகள்.

ராமகிருஷ்ணன் மெல்ல நூலாம் படைகளை அறுத்துக் கொண்டு கதவருகே போய் நின்றான். அவனுக்கு பல அடி பின்னால் வசுமதி நின்று கொண்டாள்.

ராமகிருஷ்ணனும் கதவில் கை வைத்துத் தள்ள முயன்றான். ஆனால் உள்ளே தாழிடப்பட்டது. போல துளிகூட



அசைய மறுத்தது. வலுவாகத் தள்ள முயன்றான். ஊஹூம்... இறுகிப் போயிருந்தது. கதவைத் தள்ளியதன் எதிரொலியாக தலைக்கு மேலே இருந்து ஒருசில நாட்டு ஓடுகள் உதிர்ந்து விழுந்தன. அப்படியே லேசான புழுதியும் கிளம்பியது.

"பார்த்து ராம்." என்று வசுமதியும் அலறினாள். அந்த நொடி அவளது செல்ஃபோனிலும் சிணுங்கல்.

"ஒன் மினிட் ராம்... "என்றவள் வெகுவேகமாகத் திரும்பிச் சென்று செல்ஃபோனில் யாருடனோ பேசிவிட்டுத் திரும்பி வந்தாள். அதற்குள் அந்த ஓட்டு துவாரம் வழியாக கைவிட்டு உள்ளே தாழ்ப்பாளைத் திறப்பதில் மும்முரமாக இருந்தான் ராமகிருஷ்ணன்.

அவன் மேலெல்லாம் புழுதி படிந்து பார்க்கவே கோமாளி போல ஆகிவிட்டான். அவளுக்கும் சிரிப்பு வந்து விட்டது.

அந்த சூழலிலும் கலீரென்று சிரித்தாள். அவன்சட்டை செய்யவில்லை. அவனுக்கு உள்ளே நுழைவது ஒன்றே குறியாக இருந்தது. அவளும் சிரித்து முடித்தாள். ஆனால் அதன்பிறகு சிரிப்பு தொடர்ந்தது தான் ஆச்சரியம். அவள் திகைப்புடன் பார்த்தாள். சிரிப்பு தொடர்ந்தது. ராமகிருஷ்ணன் வரையில் அவள்தான் சிரிப்பதாக நினைத்துக் கொண்டான். அவளுக்கோ அது தன் சிரிப்பின் எதிரொலியா, இல்லை வேறு யாராவதா என்கிற குழப்பம். கண்ணிரண்டும் மருண்டு விட்டது.

"ராம்! உள்ற யாரோ இருக்கா... பாரு, சிரிப்பு சத்தத்தை..." என்றாள் படு அவசரமாக.

"டோன்ட் பீ சில்லி... சிரிச்சது நீ. அப்படியே பிளேட்டை மாத்தி என்னை பயமுறுத்தப் பார்க்கறியா?" என்று தாழ்ப்பாளையும் தள்ளி முடித்து கதவையும் ஒருவழியாகத் திறந்

தான். கதவும் ஏராளமான தூசுதும்பை உதிர்த்தபடி திறந்து கொண்டது. உள்ளேயோ ஆச்சரியம் காத்திருந்தது.

நீண்ட முற்றவெளி... தண்ணீர் விட்டு கழுவி விட்டது போல் அது படுசுத்தமாகக் காட்சியளித்தது. மெலிதாக தசாங்க வாசம் வேறு. ராமகிருஷ்ணனும் வசுமதியும் தங்களை மறந்து அந்தக் காட்சியைப் பார்த்து வியந்து போய் நின்றனர்.

"ராம்..."

"உம்..."

"உள்ற யாரோ இருக்கா மாதிரி தெரியறது."

"ஆமாம். எவ்வளவு நீட்டா இருக்கு பார்..."

"ஆனா உள்ள போக வழியே இல்லை. யார் போயிருப்பா?"

"வா போய்ப் பார்க்கலாம். இங்கேயே நின்னு என்னைக் கேள்வி கேட்காதே..."

இருவரும் பேச்சோடு பேச்சாக உள்ளே நுழைந்தனர். வெளியே அவர்கள் பார்த்த காட்சிக்கும் உள்ளே பார்க்கும் காட்சிக்கும் சம்பந்தமே இல்லை. உள்ளே படு நீட்டாக இருந்தது. யாரோ குடும்பம் நடத்துவது போல் அவ்வளவு தூய்மை. பூஜை அறையில் ஸ்வாமி படங்களுக்குப் பூ போட்டு பூஜை கூட நடந்திருந்தது. பஞ்சதிரி குத்துவிளக்கும் பிரமாதமாக எரிந்தபடி...

சமையற்கட்டிலும் அடுப்பில் சாம்பல் இருந்தது. மேலே ஒரு பித்தளை வட்டில்.

"ராம்... என்ன ராம் இது? நம்ம வீட்ல யார் இப்படி நமக்கே தெரியாம இருக்காங்க...?"

"முண்டம். உன்னை மாதிரி நானும் இப்பதானே இங்க வந்துருக்கேன். எனக்கு மட்டும் என்ன தெரியும்?"



"இப்படிக் கேட்டா ஒரு யூகத்துல புத்தி வேலை செஞ்சு ஏதாவது ஒரு பதிலைக் கண்டுபிடிக்கும். அதுக்குத்தான் இப்படி கேக்கறது. நீயும் என்கிட்ட கேட்பே, அப்ப உன்னை ஒரு தடவைக்கு நாலு தடவை முண்டம்னு சொல்லிட்டேன் பாரு..." வசுமதி சூழலின் பயங்கரத்தை உணராமல் அவனோடு மல்லுக்கு நின்றாள். அவன் பார்வையோ அந்த வீட்டின் உட்புறத்தை அங்குலம் அங்குலமாக அளப்பதில் தான் குறியாக இருந்தது.

"என்ன பெரிய ஸ்பைன்னு நினைப்பா? மௌனமா நோட்டம் போடறே?"

"தொணதொணங்காம நீயும் கவனி. அந்த ஆவி கண்ணுல கிண்ணுல பட்டா மயங்கிடாம எனக்கும் காட்டு..."

"ஆவியா?"

"மிஸ்டர் ஜவஹர் அப்படித்தானே சொன்னார்..."

"அப்ப நீ ஆவி இருக்குன்னு நம்பறியா ராம்...?"

"வசு... கொஞ்சம் பேசாம இரு. நானே குழம்பிப் போய் இருக்கேன். இது பேசற நேரம் இல்ல..."

ராமகிருஷ்ணன் அவள் வாயை அடைத்துவிட்டு அந்த வீட்டின் உள்பாகம் முழுக்க சுற்றிவரத் தொடங்கினான். சுவரில் பஞ்சநாத சாஸ்திரிகளின் படம்! சிறிது நேரம் நின்று கூர்ந்து கவனித்தான்.

ஊர் சிவன் கோயிலையும் பெயிண்ட் செய்து மாட்டியிருந்தனர். பெயிண்ட்டிங்கில் சிவன் கோயிலுக்கு வடப் பக்கத்தில் ஒரு பெரிய மலை தெரிந்தது. வசுமதி அந்த ஓவியத்தைக் கூர்ந்து கவனித்தாள். ஓவியத்தில் சம்பா என்று கையெழுத்திடப்பட்டிருந்தது.

"ராம்... சம்பான்னு பேர் போட்டிருக்கு. இது அத்தை பாட்டி சம்பா தானே?" வசுமதியின் கேள்விக்கு, "ஆமாம். அது நானே தான்" என்று ஒரு பெண் குரல் பதிலாகக்

கேட்டது. பொளேரென்று பிடரியில் அடிபட்டது போல விதிர்த்துப் போனாள் வசுமதி.

"ராம்... இப்ப யார் 'நான்தான்'னு சொன்னது. நீயும் கேட்டதானே?" என்று அவனை நெருங்கி ஒண்டிக் கொண்டு நின்றாள்.

"யெஸ்... ஐ ஆல்ஸோ ஹியர்ட். ஹூ ஈஸ் திஸ்? யார் இப்ப குரல் கொடுத்தது?" ராமகிருஷ்ணன் சற்று கிலி மேலிட திருப்பிக் கேட்டான்.

பதிலில்லை. ஆனால் அழுகுரல் மட்டும் ஒரு சன்னமான விசும்பலுடன் பதிலாக கேட்கத் தொடங்கியது.

"ராம்..."

"உஸ். பயப்படாதே. சம்படி, யாரோ உள்ற இருக்கா..."

"இருந்தா கண்ணுக்குத் தெரியணுமே...?"

இருவரிடமும் இப்பொழுது முன்பிருந்த தைரியம் இல்லை. ஒருவரை ஒருவர் உரசிக்கொண்டு நின்றனர்.

"நான் சம்பா அத்தைப்பாட்டிதான். பயப்படாதேள்..." என்று திரும்பவும் ஒரு குரல் அவ்வேளையில் ஒலிக்கவும் இருவருக்கும் சப்தநாடியும் நொறுங்கிவிட்டது.

"ராம்... பயமா இருக்குப்பா. வா, போயிடலாம்..." என்று வசுமதியும் ஓடுவதற்குத் தயாரானாள்.

"இரு வசு. இவ்வளவுதானா உன் தைரியம்? ஏ அத்தைப் பாட்டி.. எங்கே இருக்கே நீ?" ராமகிருஷ்ணன் துணிந்து எதிர்கேள்வி கேட்டான்.

"உன் எதிர்லயே இருக்கேன். என்னைத் தெரியலியா உனக்கு?" என்று உடனேயே பதில் வந்து அவனை மேலும் கிலி கொள்ள வைத்தது.

"எதிர்லயா... எதிர்லயா...?" அவனும், பதில் கேள்வி யுடன் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். சற்றுத்தள்ளி நெல் கொட்டி



வைக்கும் குதிர்தான் கண்ணில் பட்டது. வெளியே சாணியை மெழுகிப் பூசி அதன்மேல் சந்தனத்தில் பட்டை தீட்டி நடுவில் ஒரு குங்குமப் பொட்டும் வைத்திருந்தது.

ராம் மெல்ல நடந்தபடியே அந்த குதிர் அருகே சென்று அதன் மேல் மோதினான். அதுவும் அவன் மோதியதால் நடுங்கியது.

"குதிருக்குள்ள என்ன இருக்குன்னு பாரு..." என்று திரும்பவும் சம்பாபாட்டியின் குரல்.

"ராம்... வா போயிடலாம். நாம கேள்விப்பட்டது. சென்னல பிரசன்னத்துல வந்தது எல்லாமே நிஜம். இனியும் இங்க இருந்தா ஆபத்து. வா, போய்டலாம்..."

வசுமதி அலறினாள். ராமகிருஷ்ணனுக்கும் ஓடிவிடலாம் போல்தான் தோன்றியது. ஆனால் குதிருக்குள் என்ன இருக் கிறது என்று ஒரு பார்வை பார்த்துவிட எண்ணியவன் 'ஹூப்' என்று எகிறி, குதிரின் வாய்ப்பகுதியைக் கையால் பிடித்துக் கொண்டு அப்படியே எம்பி உள்ளே பார்த்தான்.

உள்ளே... ஐயோ!




**வ**டக்கன்குளத்தைப் பொறுத்தவரை என் அனுமானம் துளிகூட பொய்யாகவில்லை. ஊரில் ஜமீன் ஆட்சிதான்... வடக்கன்குளமே ஜமீனை நம்பித்தான் கிடக்கிறது. ஊரைச் சுற்றியுள்ள வயல்வெளிகளும் தோப்புகளும் மொத்தமாக ஜமீனுக்குச் சொந்தம். அந்த நிலத்தில் வேலை செய்தால் தான் மற்றவர்களுக்கு கூலி கிடைக்கும். கூலி கூட பணமாக இல்லை. நெல்லாகவும் காய்கறியாகவும் தான் அவர் களுக்குக் கூலி வழங்கப்பட்டது.

ஒரு வகையில் இந்த மண்ணில் பிறந்த இவர்கள் பெரும்பாவிகள். இந்த ஜமீன்தாரிடம் வந்து மாட்டிக்

கொண்டு விட்டவர்களை வேறு என்னவென்று சொல்வது? ஜமீன்தாரிணியான பாண்டிமாதேவியாரைச் சந்தித்தபோது அவர்கள் மட்டும் விதிவிலக்காக இருப்பதை உணர்ந்தேன். அதற்குக் காரணமும் ஊர்தான்!

ஈசான்யத்தில் ஒரு மலை இருந்து ஊரின் நற்சக்திக்கே இடமில்லாதபடி செய்துவிட்டது. ஆனாலும் அந்த மலைக்கு கீழே ஒரு வற்றாத சுனை இருந்தது. அதில் நீர் பெருகி வழிந்து கொண்டே இருந்தது. அந்தச் சுனையின் சக்திதான் பாண்டிமாதேவியாரை நல்ல புத்தியோடு வைத்துள்ளது. சுனையை அடைத்துவிட்டால் ஜமீன்தாரிணி பாண்டிமா தேவியார் கூட மனம் மாறி பேரன் ராஜேஸ்வர பூபதிபோல தவறு செய்யக் கூடும்.

அதேபோல ஊரின் சிவாலயத்தில் ஆலத்துக்கென்று விருட்சமே இல்லை. ஒரு வில்வமரமாவது கோயிலில் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் கோயில் மண்ணில் சக்தி வேர்பிடிக்க முடியும். இதை எல்லாம் எடுத்துச் சொல்லத்தான் என்னை இந்த ஊருக்கு இறைவன் அனுப்பி வைத்தானோ?

-வாஸ்து ஞானி பிரம்மானந்த சாஸ்திரி

## 1922–வடக்கன்குளம்

**ம**லைக்கரட்டின் மேல் ராட்சஸன் போல திண்டு திண்டாக பாறைகள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டு கிடக்க இடைவெளியில் குகை போல இடைவெளி. தற்போது தன்னைத் தேடுபவர்களிடம் இருந்து தப்பிக்க அந்தக் குகைதான் சரியான இடம் என்று அதனுள் நுழைந்திருந்தான் மருதன். அவ்வப்போது அவன் அந்தக் குகைக்கு வந்து போவது உண்டு. எப்பொழுது கள் இறக்கினாலும் கள்ளுப் பானையுடன் மாலை வேளையில் வந்து குகையில் ஒடுங்கி விடுவான். பச்சைக் கள்ளுக்கு போதை அதிகம். குடித்தால் தலையைச் சுற்றி விழ வேண்டியிருக்கும். அப்படி விழுந்தால் எழுந்திருக்க ஒரு நாளுக்கு மேல் கூட ஆகலாம். அப்படி கிடப்பதற்கு குகைதான் தோதான இடம்.



அப்படிப்பட்ட இடம் இன்று, தான் ஒளிந்து கொள்ளவும் பயன்படப் போவதை எண்ணி அங்கே நுழைந்தவனுக்கு தூக்கிவாரிப் போட்டது. உள்ளே தாடியும் மீசையுமாக ஒருவர் சாமியார் கோலத்தில் கண்ணில் பட்டார். கண்களை மூடிக்கொண்டு தவக்கோலத்தில் இருந்த அவரைப் பார்க்கவும் மருதனுக்கு முதலில் திகைப்பாக இருந்தாலும், கையெடுத்துக் கும்பிட வேண்டும் என்றும் தோன்றியதுதான் ஆச்சரியம்.

அதன்படியே கைகளைக் குவித்து வணங்கியவன், இனிதான் அங்கே தங்கியிருப்பது நல்லதல்ல என்று உணர்ந்தவன் போல் திரும்பி நடக்கத் தொடங்க, சுச்சிதமாக அவரும் கண் விழித்தார்.

"நில்லுப்பா..." என்று அவனைத் தடுக்கவும் செய்தார். அவனும் திரும்பினான். அவர் முகத்தில் புன்னகையுடன் அவனைப் பார்த்தார்.

"சாமி..."

"நீ யாருப்பா? இங்கே வந்தே... என்னைப் பார்த்து கும்பிட்டே... நீ பாட்டுக்கும் போறியே...?"

"சாமி! நான் உங்களைப் பார்த்துக் கும்பிட்டது உங்களுக்குத் தெரியுமா?"

"கும்பிட்ட உன்னை வெறும் கையோட அனுப்பக் கூடாதுன்னு தானே கூப்பிட்டேன்..."

"கண்ணு மூடிக்கிட்டிருந்த உங்களுக்கு நான் கும்பிட்டது எப்படி சாமி தெரியும்?"

"மனக்கண் திறந்திருக்கறவங்களுக்கு புறக்கண் இருந்தாலும் ஒண்ணுதான், இல்லாவிட்டாலும் ஒண்ணுதான்."

"மனக்கண்ணா? அப்படின்னா...?"

"அதுசரி... நீ ஒரு விவசாயக் குடி. உனக்கு மனக் கண்ணுன்னா என்னன்னு தெரியும்... அதவிடு! நீ இந்த மலையடிவாரத்து ஊரைச் சேர்ந்தவனா?"

"ஆமாம் சாமி. நீங்க எந்த ஊரு?"

"நான் ஒரு பரதேசி. எனக்கு இந்த பூமிப்பந்துல இந்த ஊருன்னு கிடையாது. எல்லா ஊருமே என் ஊர்தான்."

"பொறந்த ஊர்ன்னு ஒண்ணு இருக்குமே சாமி..."

"அதுதான் தெரியல. என்னைப் பெத்தவ, நான் பொறந்த உடனேயே கண்ணை மூடிட்டா. பிஞ்சுக் குழந்தையான நான் பல கை மாறி வளர்ந்தேன். யாருக்கும் என் சொந்த ஊர் எதுன்னு தெரியல. இருந்தாலும் நான் அசராம என் சொந்த ஊரைத் தேடி புறப்பட்டுட்டேன். ஒவ்வொரு ஊராப் போய் பாக்கறேன். ஆனா என் ஊரா அது இல்லை."

"உங்க ஊர் எதுன்னு உங்களுக்கே தெரியல. அப்புறம் எப்படி நீங்க உங்க ஊரைக் கண்டு பிடிப்பீங்க...?"

"அது ரொம்ப சுலபம். எப்பவும் நாம பிறந்த ஊருக்குப் போகும் போது மட்டும் எந்தவித எண்ணங்கள் உதவியும் இல்லாம மனசு தானா நிரம்பி வழியும். ரொம்ப லேசாயிடும் சந்தோஷமா இருக்கும். அதை வெச்சே இதுதான் நான்பிறந்த ஊர்னு கண்டுபிடிச்சிடுவேன்."

"நீங்க சொல்றத என்னால கொஞ்சம்கூட நம்ப முடியலை சாமி..."

"வேண்டாம். நீ நம்பி எனக்கென்ன ஆகணும்?"

"என்ன சாமி இப்படி சொல்லிட்டீங்க? அது எப்படி புரிஞ்சுக்க முடியும்னு ஆதாரத்தோட சொல்லுங்க..."

"ஆதாரம் சொன்னாதான் நீ நம்புவியா?"

"அப்படிக்கூட வெச்சுக்குங்களேன்..."



"அப்ப நீ நம்பாம உன் எண்ணப்படியே இரு. அதுல ஒரு பிழையும் இல்லை..."

"இல்ல சாமி. நான் காரணத்தோடதான் ஆதாரம் கேட்கறேன்..."

"என்ன காரணம்?"

"இல்ல... இந்த மண்ணுலதான் நான் பொறந்தேன். நீங்க சொன்னபடி பார்த்தா நான் இங்க சந்தோசமா இருக்கணும்னு. ஆனா நான் அப்படி இல்லை. இப்பகூட உயிருக்குப் பயந்து தான் இந்த குகைக்குள்ள நுழைஞ்சிருக்கேன். இதுக்கு என்ன சொல்றீங்க?"

மருதனின் கேள்வியிலிருந்த நியாயம் அந்த சன்யாசியை நெம்பி நிமிர்த்தியது.

"இப்பவும் சொல்றேன். இந்த மண்தான் உன் மண்ணுன்னா அது உன்னைக் கைவிடாது. மண் இட்ட மட்டும் எப்பவும் அலட்சியம் கூடாது. இதைக் கடவுளா உன்னால பார்க்க முடிஞ்சா, இதுவும் உன்னை தன் கருணையான குழந்தை போல பார்க்கும். மண்ணுக்கு எப்பவும் ஏமாற்றத் தெரியாது. இதுக்கு பொறுமையும் அதிகம் சக்தியும் அதிகம்..."

"என்னென்னவோ சொல்றீங்க. நாங்க ஏன் இந்த மண்ணைக் கேவலமா நினைக்கறோம்? இது எங்களுக்கு சோறுபோட பூமி. ஆனா இது எங்களை எப்பவும் தினக் கூலியாத்தான் வெச்சிருக்கு. நான் மட்டும் இல்லை. இந்த ஊரே என்னை மாதிரி அழுதுகிட்டு தான் இருக்கு. இந்த மண்ணுதான் தாய்னா எங்களை இப்படி அழ விடுமா?"

மருதன் நெகிழ்ச்சியோடு தன் கேள்வியை வைத்தான். அவர் முகத்தில் ஒரு மர்மச் சிரிப்பு.

"சொல்லுங்க சாமி... எங்க ஜமீன்தாரால நாங்க எவ்வளவு கஷ்டப்படறோம் தெரியுமா சாமி?" என்று அவன் தொடரவும்

அவரும் உடனடியாக, "நெருப்போட பணி என்ன?" என்று கேட்டார்.

"சுடறது..."

"தண்ணியோட வேலை?"

"தாகம் போக்கறது அதுக்கென்ன இப்போ?"

"இப்படி ஒவ்வொண்ணுக்கும் ஒரு கடமை இருக்குல்ல?"

"நீங்க என்ன சொல்றீங்க...?"

"அதாவது நிலம்கறது பஞ்சபூதங்களும் ஒண்ணா சேர்ந்த ஒரு விஷயம். அது எப்படி இருந்தா நல்லது செய்யும், எப்படி இருந்தா தீமை செய்யும்னும் இருக்கு..."

"நிலம் கெட்டதுகூட பண்ணுமா?"

"ஏன் பண்ணாது? வெய்யில் அடிச்சு அவ்வளவு பயிரும் கருகிப் போனா அது கெடுதல் தானே?"

"ஓ... நீங்க அப்படி வர்றீங்களா?"

"உன் ஊர்லையும் அது மனித மனசுக்கு எதிராதான் இருக்கு. கஷ்டப்படணும். அழியணுங்கற விதி உள்ளவங்க தான் இந்த ஊர்ல பிறப்பாங்க. உங்களைத் தண்டிக்கறதும் உங்க ராஜாவாதான் இருப்பார். காரணம் இந்த மலை..."

"இந்த மலையா...?"

"இதே மலைதான்..."

"அது எப்படி சாமி?"

"வடகிழக்கு மூலைல இந்த மலை இருக்கு. வடகிழக்கு இடமான இங்க பள்ளம் இருந்து அதுல பிரபஞ்ச விசை சக்தி பொங்கி வழியணும். ஆனா அந்த சக்தி இங்க பொங்க முடியாதபடி மலை தடுத்துக்கிட்டு இருக்கு. இதோ இந்த மலைக்கு இந்தப் பக்கம் இருக்கற ஊரைப் போய்ப்பார். இந்த ஊர் நீ கேட்காமலே சந்தோஷத்தைத் தரும். அதுமட்டுமல்ல, உன்னை அது நல்லவிதமாவாவது காக்கும். ஏன்னா...



இந்த மலைக்கு முன்பக்கம் வடகிழக்கு திசை உருவானா பின்பக்கம் அதுவே நைருதியாகி பலத்தைத் தருது..."

"சாமி... நீங்க என்னென்னவோ சொல்றீங்க... அதெல்லாம் எனக்குப் புரியலீங்க. எனக்கு தெளிவா ஒரு பதிலைச் சொல்லுங்க. நாங்க ஜமீன்தார்கிட்ட கஷ்டப்பட்டுக்கிட்டே தான் இருப்போமா... இல்லை நல்லவிதமா வாழ்வோமா?"

"இப்ப அது சாத்யமில்லை... நீ இந்த ஊருக்கு அதாவது வடக்குன்குளத்துக்கு வடகிழக்குப்புறம் மலைக்கு அப்பால இருக்கிற இந்த தெற்குப்பட்டியோட வாசியாயிரு. உன் வாழ்க்கை அப்படியே மாறிப்போயிடும்."

"நீங்க வேற சாமி... என்னை ஜமீன்தாரோ அடியாட்கள் தேடிக்கிட்டு இருக்காங்க. எப்ப என்ன நடக்கும்னு தெரியல. இதுல நீங்க அந்த ஊருக்கு போன்னு சொல்றீங்க. அங்க போனா மட்டும் விட்றுவாங்களா?"

"இதோ பார்... நான் மண் பாஷை தெரிஞ்சவன். நான் சொல்றதைக் கேள். எந்த மண் காப்பாத்தும், எது கைவிடும்னு அந்தந்த மண்ணோட நெத்தியில் எழுதி ஒட்டியிருக்குப்பா. தெற்குப்பட்டிக்கு நீ போனா வாழ்ந்தே தீருவே..."

"நான் மட்டும் வாழந்தா போதாது சாமி. என் ஊர் வாழணும். எல்லாத்துக்கும் மேலா எங்க ஜமீன்தாரிணி அம்மாவும் வாழணும். அவங்க இப்ப எவ்வளவு மோசமா இருக்காங்க தெரியுமா?"

"உன்னால முடிஞ்சா அவங்களையும் அங்க கூட்டிக்கிட்டு போ. அவங்களும் வாழ்ந்துடுவாங்க..."

"எல்லாம் சரி சாமி. மனுஷங்கள்ள தான் நல்லவன். கெட்டவன்னா மண்ணுலையுமாசாமி?"

"நீ என்ன கேக்கறேன்னு புரியுது. மண்ணுல நல்லது கெட்டதுன்னே கிடையாது. அது எல்லா இடத்துலையும் ஒண்ணுபோல ஒரே சக்தியாதான் இருக்கு. அந்த மண் மேல

வாழற மனிதனாலதான் திசை உருவாகுது. நீ எந்தப்பக்கம் பாக்கறியோ, அதற்கேற்பதானே திசைகள் உனக்கு நாலா பக்கமும் அமையுது. உனக்கு எதிர்ல ஒருத்தர் வரும்போது உன்திசை அவர் பார்க்கற திசையா மாறிடுது. அவர் திசை நீ பாக்கற திசையாயிடுது. இதுலதான் சக்தியோட சிதறலும். அதை நாம எவ்வளவு தூரம் எடுத்துக்கறோம். நம்மால எவ்வளவு தூரம் எடுத்துக்க முடியுதுங்கறதுலதான் இன்ப துன்பங்களும் உருவாகுது. மண்ணானது உனக்குன்னு தனியா இன்பத்தையோ, துன்பத்தையோ வெச்சிருந்து தரலை. நீ எடுத்துக்கறே பார்... அங்கதான் இருக்கு சூட்சமம்..."

"மண்ணுல இருந்து அரிசி, பருப்பை எடுக்க முடியும். நல்லது கெட்டதை எப்படி சாமி எடுக்கறது?"

"எல்லா கேள்விக்கும் இந்த ஒரு சந்திப்புல உனக்கு விடை கிடைச்சிடாது. போகப்போக நீ எல்லாத்தையும் புரிஞ்சுக்குவே. உனக்கு நான், எனக்குத் தெரிஞ்ச எல்லாத்தையும் உபதேசிப்பேன். எனக்கே கூட இந்த வடக்கன் குளத்தைப் பார்க்கும் போது பரிதாபமாக இருக்கு. வலைக்குள்ள மாட்டிக்கிட்ட புறாங்களைப் போல நான் இந்த ஊர் மக்களைப் பாக்கறேன். வலையை அறுத்து விட்டுட்டாலே போதும் இவங்கள்ளாம் காலத்தால தப்பிச்சிடுவாங்க..."

"நீங்க என்னென்னவோ சொல்றீங்க சாமி. எனக்கு அதையெல்லாம் விளங்கிக்கற சக்தி இல்லை. ஆனா நீங்க நல்லது செய்வீங்கன்னு மட்டும் நல்லா தெரியுது..."

"உன் நம்பிக்கையை நினைச்சு நான் சந்தோஷப்படறேன். உன் ஜமீன்தாரிணியம்மா பத்தி சொன்னே இல்லையா?"

"ஆமாம் சாமி. அவங்களைப் பாத்தா ஔவையாரைப் பாக்கற மாதிரி இருக்கும். ஆனா இன்னிக்கு அவங்க இருக்கற நிலை ரொம்ப கொடுமை சாமி..."



"தெரியும் அப்பனே. நெருப்புக்குப் பக்கத்துல நின்னுகிட்டு சுடுதுன்னு சொல்ற மாதிரி இங்க இருந்துக்கிட்டு நீங்கல்லாம் கஷ்டப்படறீங்க. இந்த ஊர் மனிதர்கள் வசிக்கத் தகுதியான ஊர் இல்ல. ஆகையால நெருப்பை விட்டு விலகிட்ற மாதிரி விலகறதுதான் ஒரே தீர்வு. அதுக்கு நான் வழி சொல்றேன். முதல்ல அவங்கள எப்படியாவது தெற்குப் பட்டிக்குக் கூட்டிகிட்டு போ. மற்றதெல்லாம் தானா நடக்கும்..."

"அது சரி சாமி... இப்ப நான் திரும்ப ஜமீன் மாளிகைக்குள்ள நுழையணும்னா அது அவ்வளவு சுலபமில்லை சாமி. எவ்வளவு கஷ்டப்பட்டு தப்பி வந்துருக்கேன் தெரியுமா?"

"இங்க கிட்ட வா..."

"எதுக்கு சாமி...?"

"வா அப்பனே..."

அவர் அழைக்க, அவன் அருகே சென்றான். அவர் கட்டை விரலைக் காட்டினார். அதில் கருப்பாக மை. அதைக்கொண்டு அவர் அவனது புருவத்தை மையாக்கினார்.

"என்னசாமி இதுமை... ஏதாவது மாய மந்திரங்களா?"

"கொஞ்சம் அப்படித்தான். இந்த மை உன் புருவத்துல இருக்கறவரை நீ யார் கண்ணுலயும் படமாட்டே. மீறி பட்டாலும் யாரும் உன்னைப் பார்த்ததாவே காட்டிக்க மாட்டாங்க. இப்ப உனக்கு திருப்தியா?"

"நிஜமாவா சாமி...?"

"நான் எதுக்குப் பொய் சொல்லணும்? போய் நல்லபடியா வா அப்பனே..."

அவர் ஆசிகூறி அனுப்பி வைத்தார். அவனும் ஒரு புதுத்தெம்பு பெற்றவன் போல புறப்பட்டான். அவர் அவன் விலகவும் சிரித்தார். அப்படியே முணுமுணுத்தார்.

மையிடம் எதுவுமில்லை. 'அது என்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது' என்கிற உன் நினைப்பிடம் தான் எல்லாமே உள்ளது...!




நீங்கள் எங்கே குடி இருந்தாலும் சரி, உங்கள் குடியிருப்பின் ஈசான்யத்தில் தான் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலமும், உங்களின் எதிர்காலமும் ஒளிந்துள்ளது என்பதை உணருங்கள். ஈசான்ய பாகம் (வடகிழக்கு மூலை) எப்பொழுதும் தூய்மையாக, துளியும் குப்பையின்றி இருக்க வேண்டும். இங்கே சிலர் பூஜை அறைகள் அமைக் கிறார்கள். ஒரு வகையில் இது தவறு. ஏன் என்றால் சுவாமி முன் தீபம் எரியும். தீப நெருப்பு அக்னிக்கு உரியது. ஈசான்யம் சில்லென்ற தன்மை கொண்டது. அதை இந்த தீபச்சுடர்கள் மாற்ற முயலும். உண்மையில் கன்னி மூலை தான் பூசனைக்கு மிக உகந்த இடம்.

எவர் ஒருவர் வீட்டு ஈசான்யத்தில் மரங்கள் இருந்தாலும் அவை ஈசான்ய சக்தியைத் தான் எடுத்துக் கொண்டு விடுகின்றன. குறிப்பாக தலைமேல் தண்ணீர் கொண்ட காய்களை உடைய தென்னை ஈசான்யத்தில் இருத்தல் தவறு. அப்படி இருந்தால் அந்த மரங்களை அந்த மரத்திடமே அனுமதி கேட்டு அகற்றி விடலாம். மஞ்சள் நூலை ஒன்பது சுற்றி சுற்றி, 'மரமே! நான் உன்னை விலகிக் கொள்ள வேண்டுகிறேன்.' என்று பிரார்த்தித்துக் கொள்ள- ஒரு வாரம் பத்து நாளிலேயே 'அந்த மரத்தை வெட்டட்டுமா' என்று கேட்டுக் கொண்டு யாராவது ஒருவர் வந்து விடுவார். அல்லது வெட்டு என்கிற உத்தரவை உங்களுக்கு அசரீரி யாகத் தருவார். அப்படி நீங்கள் வெட்டிடும் முன் ஒன்றுக்கு ஒன்பது தென்னங்கன்றுகளை நீங்கள் வெளியே ஈசான்ய மற்ற இடத்தில் நட்ட பிறகே வெட்ட வேண்டும். இல்லா விட்டால் விருட்சதோஷம் ஏற்படும். தென்னம்பிள்ளை என்பது ஒரு குடும்பத்தின் தலைப்பிள்ளைக்கு சமமானது. எனவே தென்னம்பிள்ளைக்கு நாம் இழைக்கும் அநீதி



தலைமகன் வாழ்வில் ஒரு பாவமாய் படிந்து விடும் கவனம்.

-வாஸ்து ஞானி பிரம்மானந்த சாஸ்திரி

## 2005–வடக்கன்குளம்

அந்த பாழடைந்த வீட்டின் குதிருக்குள் பல மனிதத் தலைகள் கிடக்க, அவைகளில் பல மண்டை ஓடுகளாய் கண்ணில் பட்டு, ராமகிருஷ்ணனின் பார்வையில் தீப்பற்ற வைத்தன.

அதைப் பார்த்த நொடி அப்படியே குதிரைப் பிடித்திருந்த பிடியை விட்டு சொத்தென்று கீழே விழுந்தான். முகமெல் லாம் வியர்க்க வெலவெலப்பு பரவியிருந்தது.

"ராம்... " ஓடிவந்தாள் சுமதி.

"வசு... வசு..."

"என்னராம்..."

"நோ... நாம இனி இங்க இருக்கக் கூடாது. கமான்... க்விக்!"

"என்னராம்... அந்தக் குதிர்ல அப்படி என்ன இருக்கு? நீ ஏன் ஷாக் ஆயிட்டே...?"

"நோ... இங்க எதையும் நான் பேசத் தயாராக இல்லை. கமான்... இது நம்ம வீடு இல்ல, சுடுகாடு. கமான் ஜிலே..." ராமகிருஷ்ணன் பின்னங்கால் பிடரியில் பட ஓடினான். அவளும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

புதர்களில்கூட முள் குத்துவது பற்றிக் கவலைப்படாமல் ஒரு அசாதாரண வேகத்தைக் காட்டினான் ராமகிருஷ்ணன். தடுக்கி விழுந்தபடி அவனை உரசிக் கொண்டு ஓடி, ஒரு வழியாக அக்ரஹாரத் தெருவைத் தொட்டார்கள். கச்சிதமாய் எதிரில் சிலரோடு பேசியபடியே ஜவஹர். இருவரின் ஓட்டத் தையும் பார்த்து அவனும் ஆடிப்போனான்.

"என்னாச்சு மிஸ்டர் ராமகிருஷ்ணன்...?"

"அது... அது..." ராமகிருஷ்ணனும் தான் பார்த்ததைக் கூறவந்து, பின் ஜவஹரைச் சுற்றி இருப்பவர்களைப் பார்த்து அதை கூறத் தயங்கி, "சார்! உள்ற நீங்க சொன்னமாதிரியே ஒரு பேட் எலிமண்ட் இருக்கு. ஒரு பாழடைஞ்ச வீட்டுக்குள்ள நான் இதுவரை இப்படிப்பட்ட காட்சியையெல்லாம் பார்த்ததேயில்லை..." என்றான் கழுத்தில் வியர்வை பெருகி ஓடியது.

"சரி... சரி... வாங்க. நம்ம வீட்டுக்குப் போய் பேசுவோம்..." ஜவஹர் உடனே தோளில் கை போட்டு இருவரையும் அழைத்துச் செல்லத் தொடங்கினான்.

வீட்டில்...

ஜில்லென்று வெள்ளரிப் பிஞ்சுத் துண்டுகள் மிதக்கும் மோர் கொண்டு வந்து தந்தவன் அதை ஒரு மூச்சில் ராமகிருஷ்ணன் குடித்ததைப் பார்த்து ரசித்தான். வசுமதியும் ஒரு மூச்சில் குடித்தாள்.

"சொல்லுங்க ராமகிருஷ்ணன்... உள்ற என்ன நடந்தது?"

"அதை எப்படி சார் சொல்வேன். அதை எப்படி எடுத்துக்கறதுன்னே தெரியலை எனக்கு..."

"நீங்க அந்த ஆவியைப் பார்த்தீங்களா?"

"இல்ல... ஆனா நீங்க சொன்னீங்களே ஊரைச் சுத்தி முண்டங்களா கிடக்கும். தலை மட்டும் எங்க போச்சுன்னு தெரியலன்னு..."

"ஆமாம். போலீசுக்கே புரியாத புதிராச்சே அந்த விஷயம்..."

"அதெல்லாம் சும்மா. போலீஸ் நாயை எங்க வீட்டுப் பக்கம் கூட்டிக்கிட்டு போங்க. அப்ப தெரியும் அந்த தலைகள்ளாம் எங்க இருக்குன்னு..."



"நீங்க என்ன சொல்றீங்க ராமகிருஷ்ணன். தலைகள்ளாம் அந்த வீட்லையா இருக்கு?"

"வீட்டுக்குள்ள இருக்கற நெற்குதிர்ல தலைகளைப் பார்த்தேன்..."

"நிஜமாவா?"

"இப்படி கை, கால் வெலவெலத்து வந்து பேசற என்னைப் பார்த்தா பொய் சொல்ற மாதிரியா தெரியுது?"

"அடக்கடவுளே... அப்ப எங்க ஊரைச் சுத்தி நடந்த கொலைகளைச் செய்தது அந்த வீட்டு ஆவியா?"

"வாட் டூ யூ மீன்?"

"தலைகள்ளாம் அங்க இருக்குன்னா அந்த ஆவிதானே எல்லாரையும் கொன்னுருக்கணும்?"

"முதல்ல நீங்க ஆவியை எல்லாம் நான் நம்பலைன்னு சொன்னீங்களே...?"

"ஆனா இப்ப நீங்க சொல்றதை எல்லாம் பார்த்தா நம்பித்தானே தீர வேண்டியிருக்கு..."

"எனக்கு ஒரு சந்தேகம். அந்த ஆவி ஏன் அவ்வளவு பேரையும் கொல்லணும்? அப்புறம் போலீஸ் நாய் ஜமீன் பங்களா, ஜமீன்தார் சமாதி கிட்டவரை போனதா சொன்னீங்களே...? அந்த நாய் நியாயமா பாழடைஞ்ச எங்க வீட்டுப் பக்கம்ல வந்துருக்கணும்?"

"சரியான கேள்விதான் கேட்ருக்கீங்க ராமகிருஷ்ணன். உங்கள மாதிரிதான் நானும். நான் இந்த ஜெனரேஷன். ஆனா இதுக்கு விடையை இந்த ஊர்ல இருக்கற தொண்ணூறு வயசுப் பெரியவங்கதான் சொல்ல முடியும்..."

"நீங்க என்ன சொல்றீங்க? இந்த ஊர்ல இருக்கற உங்களுக்கே எதுவும் தெரியாதா?"

"தெரியும். ஒரு பஞ்சாயத்து தலைவரா நானும் சில பெரியவங்ககிட்ட கேட்டு சில விஷயங்களைத் தெரிஞ்சு வெச்சுகிட்டிருக்கேன். அதன்படி பார்த்தா எல்லாத்துக்கும் காரணம், எங்க ஊர்ல முன்பு இருந்த ஜமீன் குடும்பத்தோட புதையல் தான் காரணம்...."

"ஜமீன் புதையலா?"

"ஆமாம். இந்த வடக்கன்குளம் ஒரு காலத்துல ஜமீனா இருந்தது. ஜமீன்தார் ராஜேஸ்வர பூபதிங்கறவர் வெச்சுது தான் சட்டம். அவருடைய சர்வாதிகாரத்துக்கு அவங்க பாட்டியே பலியானதா சொல்வாங்க. அந்தப் பாட்டிக்குத் தான் ஜமீன் கஜானா இருக்கற இடம் தெரியுமாம். ஆனா பாட்டி, ராஜேஸ்வர பூபதியோட மோசமான குணத்தைப் பார்த்து கஜானாவை அவர் கிட்ட ஒப்படைக்காம இந்த ஊர்லையே ஒரு இடத்துல புதைச்சிட்டு இறந்துட்டாங் களாம். அப்படி அன்னிக்கு அவங்க புதைச்ச அந்த புதையல் மதிப்பு மட்டும் இன்றைய கணக்குக்கு குறைஞ்சது இருநூறு கோடி ரூபாய் வரை இருக்குமாம்..."

"அப்படின்னா... அதைத் தேடி வந்தவங்கதான் தலையை இழந்து செத்துப் போனவங்களா...?"

"ஆமாம்... இந்த வடக்கன்குளத்தை நான் ஒருமுன்மாதிரி கிராமமா மாத்திகிட்டு வர்றேன். ஆனா இப்படி புதையல் ஆசைல வர்ற சிலரால இந்த ஊருக்குக் கெட்ட பேர்... அந்தப் புதையல் இருக்கற இடம் தெரிஞ்சா நானே கூட அதை எடுத்து கவர்மெண்ட் கிட்ட ஒப்படைச்சுட்டு அந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வெச்சிடுவேன். ஆனா எங்க இருக்குன்னுதான் தெரியலை..."

-ஜவஹர் முதல்தடவையாக வடக்கன்குளத்தின் பயங்கரத்தை மெல்ல அவர்கள் இருவருக்கும் உணர்த்தத் தொடங்கியிருந்தான்.



"ஆமா... எந்த நம்பிக்கைல எல்லாரும் தேடி வர்றாங்க? எங்கன்னு போய் தேட்றாங்க?" வசுமதி இந்தக் கேள்வியைக் கேட்டாள்.

"அது ஒரு கதை. அந்தக் காலத்துல இந்த ஊருக்கு பிரம்மானந்த சாஸ்திரின்னு ஒருத்தரும் வந்துருக்கார். அவர் ஒரு வாஸ்து பண்டிட். அப்புறம்... அவரும் ஒரு சாமி யார். இந்த ஊர்ல ஒரு மலை இருந்தது. மலை மீன்ஸ் கரடு. அந்தக் கரட்டுல இருந்த குகைலதான் அவர் தங்கி யிருந்தார். அவர்தான் ஜமீன்தாரிணியம்மாவுக்கு இந்த ஊர் வாஸ்துப்படி ஒரு உருப்பட முடியாத ஊர்னு சொன்னாராம். அதனால ஜமீன்தாரிணி அம்மாவை தெற்க இருக்கிற தெற்குப்பட்டில வசிக்கச் சொன்னதாகவும் ஜமீன்தாரிணியும் அங்க போய்ட்டதாகவும் சொல்வாங்க..."

"சரி, இதுல புதையல் விஷயம் மிஸ் ஆகுதே..."

"சொல்றேன். அப்படி தெற்குப் பட்டிக்கு பாட்டி போகவும் ஜமீன்தார் போய் பாட்டியை மிரட்டி வடக்கன் குளத்துக்கே கூட்டிக்கிட்டு வரப் பார்த்துருக்காரு. ஆனா பாட்டி அசைஞ்சு கொடுக்கலையாம். பாட்டியே ஊரை விட்டுப் போகவும், ஊர்ல இருக்கற எல்லாரும் தெற்குப் பட்டிக்குப் போய்ட்டாங்க. இங்க ஜமீன்தார் ராஜேஸ்வர பூபதி மட்டும்தான் இருந்தார். ஆனா அவரை அவரால கெடுக்கப்பட்டு தற்கொலை செய்துகிட்ட சம்பாங்கற பெண் ணோட ஆவி நிம்மதியாவே வாழ விடலையாம். ஒரு கட்டத்துல அவரும் தலை வேற முண்டம் வேறா இறந்து கிடந்தாரம். அதைக் கேட்டு பாட்டியும் மாரடைப்புல இறந்துட்டாங்களாம்." ஜவஹர் சொன்ன சம்பவங்களில் ஒரு முழுமை இல்லை.

"என்ன மிஸ்டர் ஜவஹர்... நீங்க சொல்ற விஷங்கள்ள சரியான ஒரு தொடர்பே இல்லையே. பாட்டி வரைல அவங்க ஏன் ஜமீன் செல்வங்களை புதைச்சு வைக்கணும்?

அப்படியே புதைச்சு வெச்சாலும் அவங்க ஒரு அடையாளம் இல்லாமலா புதைச்சு வெப்பாங்க...?"

"நீங்க கேட்கற கேள்விகளை எல்லாம் நானும் கேட்டுக்கத் தான் செய்யறேன். இரண்டு தலைமுறைக்கு முந்தி நடந்த சம்பவங்கள் இடையில் எவ்வளவோ மாற்றங்கள். ஆகையால யாருக்கும் எதுவுமே சரியா தெரியல..."

"ஸோ... புதையல் விஷயத்துல குழப்பம் இருக்கு. ஆனா இருக்கு, இல்லைங்கறதுல குழப்பம் இல்லை. அப்படித் தானே?"

"ஆமாம். இல்லன்னா இப்பகூட தேடி வருவாங்களா...? தலையை இழந்து முண்டமாவாங்களா?"

"அது சரி... இந்த விஷயத்துல சம்பாங்கற என் அத்தைப்பாட்டிக்கு என்ன சம்பந்தம்?"

"தெரியாது மிஸ்டர் ராமகிருஷ்ணன். எனக்குத் தெரிஞ்ச தகவல்களை நான் உங்களுக்குச் சொல்லிட்டேன். அதே சமயம் இப்ப நீங்க உங்க வீட்டுக்குள்ளே குதிர்ல தலைகள் இருக்குன்னு சொன்னது வேற எனக்கு பெரிய குழப்பத்தைத் தருது. இதுநாள் வரை நான் ஆவி விஷயத்தை நம்பலை. ஆனா நீங்க சொன்னதால எனக்கு இப்ப நம்பிக்கை ஏற்பட்டிருக்கு. இதனால உங்களுக்கு நான் ஒரு விஷயம் சொல்லிக்க விரும்பறேன்..."

"என்ன மிஸ்டர் ஜவஹர்...?"

"தயவுசெய்து நீங்க வந்த சுவடு தெரியாம திரும்பிப் போய்டுங்க. அந்த ஆவிகிட்ட சிக்கி நீங்களும் உயிரை இழக்க வேண்டாம்..."

"என்ன சார் நீங்க... எங்க பூர்விக சொத்தை சரி செய்து பழையபடி இங்க ஒரு வாழ்க்கை வாழ்ந்து பார்க்கறதுதான் எங்க விருப்பம். அதுக்கு உதவி செய்யறேன்னு சொல்லி விட்டு இப்ப பின்வாங்கறீங்களே..."



"நான் பின்வாங்கலை.. உங்களுக்கு எதுவும் ஆயிடக் கூடாதுங்கறதான் என் கவலை. அதான் அப்படிச் சொன்னேன்."

"வாஸ்தவம்தான். இருந்தாலும் எனக்கு ஒரு நம்பிக்கை. சம்பாங்கற என் அத்தைப் பாட்டியோட ஆவி எங்களை நிச்சயமா எதுவும் செய்யாது. சொல்லப் போனா நாங்க இங்க நல்லவிதமா வாழறத பார்த்தாதான் அதோட ஆத்மா வுக்கு சாந்தி ஏற்படும்ன்னு நான் நினைக்கறேன்."

"அப்படின்னா உங்க விருப்பம். எதுக்கும் ஜாக்கிரதை..." ஜவஹர் திரும்பவும் எச்சரித்தான். அந்த நொடி கரட்டு மலையில் வெடி வெடிக்கும் சப்தம். வசுமதி காதுகளை மூடிக்கொண்டபடி கேட்டாள்.

"இது என்ன அப்பப்ப வெடி வெடிக்கற சப்தம்...?"

"இந்த சப்தத்தால தான், இப்ப இந்த வடக்கன்குளம். மக்கள் வாழற குளமா இருக்குது. அதத் தெரிஞ்சுக்குங்க..."

"எப்படி?"

"அந்த மலைல ஒரு முப்பது நாப்பது வருஷமா குவாரிகள் பெருகியிருக்கு. எல்லாமே கவர்மெண்ட் காண்ட்ராக்ட் குவாரிங்க. அவங்க கொஞ்சம் கொஞ்சமா பாறைகளை உடைச்சு மலையையே தகர்த்துட்டாங்க. இந்த ஊர் வரைல ஈசான்யத்துல அந்த மலை தடையாக இருந்தது. இப்ப அந்த தடை நீங்கினதாலதான் ஒரு முன்னுதாரணமான ஊரா இந்த ஊர் இருக்கு."

"அதே சமயம் தலை இல்லாத முண்டங்கள் விழற ஒரு ஊராவும் ஆகிடிச்சு..."

"கொஞ்சநாள் தான். அதுவும் சரியாயிடும்னு நம்பறேன். இப்பதான் நீங்க உங்க வீட்லையே ஒரு கொலைகார ஆவி இருக்கிறதைக் காட்டிக் கொடுத்துட்டீங்களே..."

ஜவஹரின் பேச்சில் அந்தப் பாழடைந்த வீட்டுக்குள் புகுந்து எல்லாவற்றையும் அம்பலப்படுத்தி விடும் ஒரு எண்ணம் இருப்பதை ராமகிருஷ்ணனால் உணரமுடிந்தது.

"சரி மிஸ்டர் ஜவஹர்! வந்த களைப்பு... அப்புறமா எங்க வீட்டோட மர்மத்தால உண்டான களைப்பு எல்லாமா சேர்ந்து எங்களை அமுக்குது. நாங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கறோமே..." என்றான் ராமகிருஷ்ணன். ஜவஹரும், "தாராளமாக" என்று உடனேயே கிளம்பினான். ஜவஹரின் தலை மறையவும் வெளியே சென்று கார்டிக்கியில் இருந்து பெட்டி, படுக்கை என்று சகலத்தையும் எடுத்து வந்தான் ராமகிருஷ்ணன். வசுமதி தீவிர சிந்தனையிலேயே இருந்தாள்.

"என்ன வசு.. நடந்ததை நினைச்சுக் கவலையா? இல்லை நடக்கப் போறதை நினைச்சா...?"

"சார்ர்ர்..." வசுமதி விருட்டென்று எழுந்து நின்றாள். அவனைக் கொஞ்சம் தர்மசங்கடத்துடன் பார்த்தாள். பின் சல்யூட் செய்தாள்.

"என்ன வசுமதி... நான் இப்ப உன் ரிலேடிவ் ராம கிருஷ்ணன் இல்லை. போலீஸ் ஆபீஸர் ராமகிருஷ்ணன் ஆயிட்டேனே..."

"ஆமாம் சார்... நீங்க நடிக்கச் சொன்ன கெடு முடிஞ்சு கால் மணி நேரமாச்சு..." அவள் தன் வலக்கையை நீட்டி கெடிகாரத்தைக் காட்டினாள்.

"பரவால்ல... இன்னும் ஒரு வாரத்துக்கு நீ என் அத்தை மகளா நடிச்சே தீரணும். அதுல திக்கல், திணறல், தடு மாற்றம் துளிகூட கூடாது."

"இதுவரைல எங்க சார். திக்கினேன், திணறினேன்? உங்களை சரிக்கு சரிநான் வரத்தானே சார் செய்தேன்...?"

"அவள் விரைப்பாக நின்றபடியே தான் பேசினாள். அவன் நடந்து சென்று கதவைத் தாழிட்டான். தாழிடும்



முன் வெளியே ஒரு பார்வை பார்த்து முடித்தான். பின் உள்ளே வந்து நாற்காலியில் அமர்ந்தான்.

"சார்..."

"ப்ளீஸ் கால் ராம்..."

"ஓ. கே. சார்... சாரி ராம்! இனி நாம அடுத்து என்ன செய்யப் போறோம்?"

"சாஸ்திரிகளோட குடும்பத்தைச் சேர்ந்தவங்களா நடிக்கறதை கண்டிநியூ பண்ணணும். பாழடைஞ்ச வீட்ல நம்மை காபரா பண்ணின சக்தியைக் கண்டுபிடிக்கணும்..."

"அப்ப நாம அங்க பார்த்தது, நம்ம காதுல விழுந்தது. சம்பா பாட்டி ஆவி இல்லையா ராம்..."

"எந்த ஆவி வசு வீட்டை சுத்தமா கூட்டிப் பெருக்கி வெச்சிருக்கும்? பூஜை அறைல விளக்கெல்லாம் எரிஞ்சதே?"

"அப்ப எல்லாமே செட்டப்பா?"

"ஆமாம். இந்த ஊருக்கு எந்த வகைல யார் வந்தாலும் அவர்களை விரட்ட இங்க ஒரு நெட் ஒர்க்கே இருக்கறதா நினைக்கறேன்..."

"தலையில்லாத முண்டங்கள்?"

"மிரட்டலுக்குப் பயப்படாம இங்க தங்கிட்றவங்களை அப்படி ஆக்கிட்றாங்க..."

"அப்ப நம்ம கதி...?"

"நமக்கும் தலை போகலாம்..."

"அப்படிப் போன தலைகளையே நீங்க பார்த்துட்டீங்க. அந்த நெட்ஒர்க் இந்த விஷயத்துல நம்மகிட்ட தப்பு செஞ் சிட்டாங்களா? இல்ல நாம பாக்கணும்கறது தான் அவங்க எண்ணமா?"

"இதுல சந்தேகத்துக்கெல்லாம் இடமில்லை. நாம பாக்க ணும். பாத்தா பயம் வரும். ஏற்கனவே ஆவி பயம்.

அப்புறமா தலை போகும்கற பயம். அதனால விட்டா போதும்னு நாம ஓடிட முடிவெடுப்போம்ங்கறது அவங்க முடிவா இருக்கலாம்.."

"இன்னொரு சந்தேகம் சார்..."

"தெரியும். நீ என்ன கேப்பேன்னு நல்லா தெரியும் வசு. கிட்டத்தட்ட 80 வருஷத்துக்கு முந்தி நடந்த ஒரு விஷயம். அதுக்கு எப்படி இப்பவும் மௌஸ் இருக்கு? இது உன் முதல் கேள்வி. இவ்வளவு நாளா யாருக்கும் கிடைக்காத அந்தப் புதையல் இனிதானா கிடைக்கப் போகுது? இது உன் அடுத்த கேள்வி. சரிதானே?"

"ரொம்ப கரெக்ட் ராம். மூணாவதாவும் ஒரு கேள்வி இருக்கு..."

"அதுவும் தெரியும். அந்த நெட் ஓர்க் கைல இன்னுமா அந்த ஜமீன் புதையல் கிடைக்கலங்கறது தானே...?"

"ஆமாம். வெளிய இருந்து யாரும் தேடிவரக் கூடாதுன்னு நினைக்கறதுல ஒரு சுயநலம் இருக்கு. இட்ஸ் ஓ.கே. அதேசமயம் இன்னும் அவங்களுக்கு அந்த புதையல் கிடைக்கலேங்கறதையும், அதுக்காக அவங்க தினமும் முயன்றபடி இருக்கறதையும் நினைச்சா, அவங்களுக்காக சிரிக்கிறதா இல்லை அழறதான்னு தெரியல..."

"நான் வேற மாதிரி யோசிக்கிறேன் வசு..."

"எப்படி?"

"புதையல் கிடைச்சாச்சு. அதை காப்பாத்திக்கத் தான் இந்த மிரட்டல்கள், கொலைகள்..."

"வாட்...!" பெரிதாக வாயைப் பிளந்து விட்டாள் வசுமதி.




எப்படிப்பட்ட ஊரையும் வாஸ்து ஞானத்தால் முன்னேற வைக்க முடியும். மண்ணின் சக்தியைப் பயன் படுத்த சொல்லித் தருவதுதானே வாஸ்து. வடக்கன்குளத் துக்கு எல்லா வகையிலும் தெற்குப்பட்டி வலிமையுடைய தாக இருந்தது. ஆனாலும் அந்த ஊரிலும் சில தடைகள். ஊர் எல்லைகளைக் கவனித்தபோது அக்னி மூலை வளர்ந் திருந்தது. அதனால் எல்லோர் மனதிலும் ஒரு எரிச்சல். ஒரு அவநம்பிக்கை. பிறந்து விட்டதற்காக வாழ்கிறோம் என்கிற எண்ணம். அதற்கு மேல் வாழ்க்கையில் பெரிய பற்றுதலே இல்லை. இதைச் சரிசெய்ய ஊரின் மையப் புள்ளியை நான் கண்டறிந்தேன். அங்கே ஒரு கம்பம் நட்டு அதிலிருந்து செங்குத்தாக நான்குபுறமும் சமதூரங்களில் நான்கு கம்பங்கள் நட்டேன். பின் ஒரு கம்பத்துக்கும் அடுத்த கம்பத்துக்குமான தூரத்தை அளந்து அந்த அளவிற்கு நான்கு மூலைகளிலும் கம்பம் நட்டு ஊரை ஒரு சற்சதுரம் ஆக்கினேன். இதனால் வளர்ந்திருந்த அக்னிமூலை நேரமானது. அந்த அளவுகளை வைத்து ஒரு படம் வரைந்து இதுதான். தெற்குப்பட்டி என்று எல்லோர் மனதிலும் அதைப் புதைத்தேன். எழுத்தில் காகிதத்தில் எழுதி வைப்பதுகூட காலத்தால் அழிந்து விடும் என்று தெற்குப்பட்டி மாதவ பெருமாள் கோவில் கொடிமரத் தூணிலேயே ஊர் வரை படத்தைச் செதுக்கி விட்டேன்.

'நம் ஊர் இதுதான்' என்பது ஊர் மக்கள் மனதில் பதிய வேண்டியது மிக முக்கியம். அடுத்து ஈசான்யத்தில் ஒரு பெரிய கிணறு தோண்டும்படி கூறி அந்த நீரில்தான் ஊரே வாழ வேண்டும் என்று கட்டளையிட்டேன். அதற்கும் அடுத்து நைருதியில் உயரமாக வளரும் தென்னைமரங்களை நட்டு தென்னந்தோப்பை உருவாக்கினேன். அந்தத் தோப்புக் குள்ளேயே ஊர்க்காவல் தெய்வமான அய்யனாருக்கு கோயில் கட்டச் செய்தேன். இதனால் கன்னி மூலைக்கு எல்லா வகையிலும் பலம் ஏறியது. ஊர் மையத்தில் உள்ள இடத்தில் யாருடைய காலடியும் படக்கூடாது என்பதற்காக ஒரு ஏற்பாடு செய்து அங்கே பெருமாள் கோயில் தேரைக் கொண்டு சென்று நிறுத்திவிட்டேன். தேரும் இரண்டு

சக்கரங்களுக்குக் கீழே காலடி படாதபடி இடத்தைப் பாதுகாத்தது.

இதெல்லாமே பெரிய அளவில் வேலை செய்யத் தொடங்கியது.

-வாஸ்து மேதை பிரம்மானந்த சாஸ்திரி

## 1922–வடக்கன்குளம்

**ஒ**ரு கறுப்புப் போர்வையை முட்டாக்கு போட்டு போர்த்திக் கொள்வது போல போர்த்திக்கொண்டு, மை இருக் கிறது என்கிற தெம்போடு விறுவிறுவென்று ஜமீன் மாளிகை நோக்கி நடக்கத் தொடங்கி விட்டான் மருதன்.

வழியில் சாஸ்திரிகளின் மகளுடைய பிணம் ஊர்வலமாக வந்து கொண்டிருந்தது. தீச்சட்டியும் கையுமாக சாஸ்திரி களைப் பார்த்தபோது மருதனின் கண்களிலும் கண்ணீர் பீறிட்டது.

மானம் உள்ள பெண்- உயிரை விட்டுவிட்டாள்.

வாழ வேண்டும் என்று அவள் விரும்பியிருந்தாலும் ஊர் அவளை வாழ விட்டிருக்காது. கெட்டுப் போனவள் என்று பேசிப் பேசியே அவளைச் சாகடித்து விடும். அது என்னவோ தெரியவில்லை, மண்ணுக்கும் பெண்ணுக்கும் ஒரே ராசி. ஒரு வீட்டிலோ இல்லை நிலத்திலோ பேய் இருக்கிறது என்று புரளியைப் பரப்பி விட்டுவிட்டால் அதன்பின் அந்த இடத்தைச் சும்மா கொடுத்தாலும் யாரும் வாங்கத் தயார் இல்லை. அதே போல ஒரு பெண்ணும் கெட்டுப் போனவள் என்று கிளப்பி விட்டுவிட்டால் அவ ளையும் யாரும் கணக்கில் எடுத்துக் கொள்வதேயில்லை.

யார் எவ்வளவு மிதித்தாலும் தாங்கிக் கொண்டு பொறுமையாக இருக்க வேண்டும் என்பதுதான் இரண்டுக் குமே சாபமோ என்னவோ?



மருதன் சம்பாவின் பிணம் போகும்போது இப்படி எல்லாம் நினைத்துக் கொண்டான். விழியோரம் துளிர்த்த கண்ணீரையும் துடைத்துக் கொண்டான். அப்படியே நடந் தான். என்னதான் புருவத்துக்கு மை பூசியிருந்தாலும் பயம் இருக்கத்தான் செய்தது.

கம்பளத்தான் என்று ஒருவன் இருக்கிறான். இப்படித்தான் போர்வையைப் போர்த்திக் கொண்டு ஒரு கம்புடன் கெந்திக் கெந்தி நடப்பான். ஜமீனுக்குள் அவன் வருகிறான் என்றாலே தாதிகள் முதல் வேலைக்காரர்கள் வரை ஒதுங்கிப் போவார்கள். கிட்டே போனால் வசியம் செய்து பிடித்துக் கொண்டுபோய் ஏதாவது செய்து விடுவான் என்கிற பயம். மருதனுக்கு ஞாபகம்தான் வந்தது.

எனவே, அவனைப் போலவே நடையை மாற்றிக் கொண்டு நடந்தான். அது என்னவோ தெரியவில்லை மலைக்காட்டு சாமி சொன்னது போல ஒருவர் கூட மருதனைக் கவனிக்கவே இல்லை.

ஜமீன் வீட்டுக்குள் கால் வைக்கும் போது மட்டும் கொஞ்சம் பயமாக இருந்தது. அதுவும் வளைவான படிகளில் ஏறி நைருதி அறைக்குப் போனபோது போய் விட்டது.

மருதனின் அதிர்ஷ்டம்- பாட்டி பாண்டிமாதேவி நல்ல தெளிவோடு இருந்தாள். அவளைப் பார்த்தபோது, கண்களை மூடிக் கொண்டு தியானம் செய்கிற மாதிரி இருந்தது. உடன் இருக்க வேண்டிய தாதியையும் காணவில்லை.

மருதன் உற்சாகமானான்.

"ராணிம்மா..." என்றான் மெலிந்த குரலில். அவளும் கண் மலர்த்தினாள். மெல்ல முட்டாக்கை விலக்கியவனாக, "நான்தான் ராணிம்மா மருதன். உங்க பார்வைக்கு நான் தெரியறேனா?" என்று கேட்டான்.

"என்னடா கேள்வி இது? எனக்கென்ன கண்ணு அவிஞ்சா போச்சு...?" என்று பதிலுக்கு அவள் கோவிக்க, அப்போது அவனுக்கு எப்படி தன் உருவம் ராணி கண்ணுக்கு மட்டும் தெரிகிறது என்கிற ஒரு சந்தேகமும் ஆச்சரியமும் ஏற்படத்தான் செய்தது.

"இல்ல ராணிம்மா... அது வந்து..."

"வளவளங்காதே. உன்னைப் பிடிச்சு இழுத்துக்கிட்டு வரச் சொல்லி உத்தரவு போட்ருக்கானாமே என் பேரன்..."

"அ... ஆமாம் ராணிம்மா. அது உங்களுக்கும் தெரியுமா?"

"எனக்கு எதுதான் தெரியாது. எல்லாத்தையும் பாப்பம்மா சொன்னா..."

"பாப்பம்மா... ஓ... செல்லக்கிளிக்குப் பதிலா வந்திருக்கற தாதியா? பாப்பம்மா நல்ல பெண்ணாச்சே.."

"அதுதான் எல்லாத்தையும் சொல்லிட்டா. அப்படியே மதுப்பாத்திரத்தையும் தூக்கிப் போட்டுட்டு என் காலை பிடிச்சுகிட்டு அழுதா. அவளாலதான் நான் இப்ப இவ்வளவு தெளிவா பேசிக்கிட்டிருக்கேன்..."

"எல்லாம் கடவுள் செயல். உங்களை நான் இப்ப இவ்வளவு தெளிவா பார்ப்பேன்னு நினைக்கவேயில்லை."

"அதுசரிடா. நீ எப்படி உள்ள வந்தே? ராஜேஸ்வரன் உன்னை ஒண்ணும் பண்ணலையா?"

"இல்ல ராணிம்மா. நான் இப்ப யார் கண்லையும் படாம புருவத்துல மைய பூசிக்கிட்டு வந்துருக்கேன்..."

"மையா... அடப்பாவி! நீயும் கம்பளத்தானைப் போய்ப் பார்த்தியா?"

"நானா? நான் எதுக்கு ராணிம்மா அவனை எல்லாம் போய்ப் பார்க்கறேன். இது கரட்டு மலைல ஒரு சாமியார் கொடுத்தார்."



"சாமியாரா... அது யாருடா புதுசா?"

"புதுசாதான் வந்திருக்கார். ஆனா ரொம்ப நல்ல மனசு அவருக்கு. நம்ம ஊரைப் பத்தி அப்படியே புட்டுப்புட்டு வைக்கறார்..."

"என்னத்தைபுட்டு வச்சு என்னடா பிரயோஜனம்? என் பேரன் திருந்தப் போறதில்லை. இந்த ஊரும் நல்லபடியா இருக்கப் போறதில்லை..." பாட்டி பாண்டிமாதேவி கன்னத்தில் கண்ணீர் பெருகத் தொடங்கியது.

"அதான் இல்லை. எப்ப நீங்க இவ்வளவு தூரம் வருத்தப் பட ஆரம்பிச்சுட்டீங்களோ, அப்ப பிரச்சனை இல்ல. இந்த ஊர்ல இருக்கற வரை உருப்பட முடியாதுன்னுதான் அவரும் சொன்னார். தெற்குப்பட்டி எல்லாவிதத்துலையும் நம்ம ஊருக்கு நேர்மாறான ஊராம். அங்க போய்ட்டா எல்லாம் சரியாயிடும்னும் சொன்னார்."

"எங்க போனாலும் அவன் இப்ப பண்ணிக்கிட்டிருக்கிற பாவங்க விடாது. கோயில் சாஸ்திரிகளோட பொண்ணையே கெடுத்து வெச்சிருக்கானே. அய்யோ... பிராம்மண சாபம் சும்மா விடுமா...?"

"கவலையை விடுங்க ராணிம்மா. நான் இப்ப உங்களைப் பார்க்க வந்தது, இன்னொரு விஷயத்தைச் சொல்லவும் தான்..."

"அது என்னடா இன்னொரு விஷயம்? என் பேரன் இன்னிக்கு எவளையாவது கெடுத்து வெச்சிருக்கானா?"

"அதெல்லாம் அவர் தப்புல ரொம்ப சாதாரணம். ஆனா உங்களையே போதைல வெச்சிருக்கார் பாருங்க... அதுதான் கொடுமை."

"வேண்டாம்டா... தயவுசெய்து அதை மட்டும் ஞாபகப் படுத்தாதே. பாப்பம்மாவுக்கு செய்து கொடுத்த சத்தியத்தை எங்க நான் மீறிடுவேனோன்னு பயமா இருக்கு..."

"இங்க இருக்கறவரை நீங்க நிச்சயமா மீறிடுவீங்கன்னு தான் தோணுது ராணிம்மா.."

"முதல்ல நீ விஷயத்தைச் சொல்லுடா..."

"ராணிம்மா... அதுவந்து..."

"கிண்டாம கிளறாம நேரா விஷயத்துக்கு வா..."

"நம்ம ஜமீன் கஜானா சம்பந்தமா..."

"மருதன் கஜானா என்று ஆரம்பிக்கும் முன்பே பாட்டி பாண்டிமாதேவி முகம் சிவந்து போனது.

"நிறுத்துடா..." இடையிலேயே கத்தரித்தாள்.

அவனுக்கும் அவள் அடுத்து என்ன சொல்வாள் என்பது தெரிந்தது.

"நீ எல்லாம் என்கிட்ட கஜானாபத்தி பேசற அளவுக்கு ஆகிப் போச்சு...? யார் எதைப் பத்தி பேசணும்னு ஒரு கணக்கு இருக்குடா இந்த ஜமீன்ல..."

பாட்டி அலறத் தொடங்கி விட்டாள்.

நெளிந்தான் மருதன். தன் காதில் விழுந்ததை அவளுக்கு எப்படிப் புரிய வைப்பது என்கிற குழப்பத்துடன் அப்படியே பாட்டியின் காலில் விழுந்தவன், "பதட்டமோ, அவசரமோ படாம நான் சொல்றதக் கேளுங்க. முழுசா கேட்ட பிறகு, எந்த முடிவுக்கும் வாங்க ராணிம்மா. நான் கஜானா பத்திச் சொல்லவந்த விஷயமே வேற... நம்ம ஜமீன் கஜானா எங்க இருக்கு. அதுல என்ன இருக்குங்கறது எல்லாம் உங்களுக்கு மட்டும்தான் தெரியும். சொல்லப்போனா அந்த ரகசியம்தான் இப்ப உங்க உயிரைக் காப்பாத்திக்கிட்டு இருக்குது. அந்தத் தாதி செல்லக்கிளி எதுக்கு இப்படி சாராயத்தைக் கொடுத்து உங்களை போதைலயே வெச்சிருக்கணும்னு கேட்டப்போ ஜமீன்தார்தான் 'பாட்டி கிட்ட இருந்து கஜானா ரகசியம் தெரியற வரை பாட்டி உயிரோட இருக்கணும். நடுவில எதுவும் ஆகிடாம பாத்துக்கோ.'ன்னு சொன்னார். நான் அதை



என் காதால கேட்டேன் ராணிம்மா. அதைத்தான் சொல்ல வந்தேன்" என்று கழிவிரக்கமாய் பேசி, பாண்டிமாதேவி முன் இரு கைகளையும் மார்புமுன் கட்டிக் கொண்டான்.

பாண்டிமாதேவி முகம் அதைக்கேட்டு வெலவெலத்து விட்டது. கண்களில் மளுக்கென்று கண்ணீர் தேங்கி சுருக்கம் விழுந்த கன்னக் கதுப்பில் உருண்டு ஓடியது.

கட்டிக் காப்பாற்ற வேண்டியவன், பாசம் காட்டி பரிவுடன் நடத்த வேண்டியவன், ஜென்ம விரோதியைப் போல நடந்து கொள்வதை என்ன வென்பது?

"எல்லாம் இந்த ஜமீன் போட்ட ஆட்டம். ஆட்டம் போட்ட போது வேடிக்கை பார்த்தேன் பாரு... அதுக்கு நான் இப்ப அனுபவிக்கிறேன். ஏழை, பணக்காரன்கற வித்யாசமெல்லாம் பொறக்கும்போதே அமையற விஷயங்கள். யாரா பொறந்தாலும் பாவபுண்ணியம் பொதுதான். அதுல கவனமில்லாததால தான் என் வம்சத்துலயே ஒரு கருநாகம் பேரப்பிள்ளையா வந்து பொறந்துடிச்சு..."

பாட்டி பேச்சோடு பேச்சாகப் பொங்கி அழ ஆரம்பித்தாள்.

"ராணிம்மா... அழாதீங்க. அடுத்து ஆக வேண்டியத பாருங்க. இங்க நீங்க இருக்கற ஒவ்வொரு நொடியுமே ஆபத்து. பேசாம நான் சொன்ன மாதிரி மலைக்கரட்டுல இருக்கற சாமியாரை வந்து பாருங்க. அவர் நல்ல வழிய காட்டுவாரு..."

பாட்டியும் அவன் பேச்சைக் கேட்டவளாக சட்டென்று நிமிர்ந்தாள்.

"நீ முன்ன போ... நான் வர்றேன். இனி இந்த கஜானா செல்வம் இந்த ஜமீனுக்குப் பயன்படவே கூடாது. இந்தச் செல்வம் இருக்கற திமிருலதான் என் பேரன் பண்ணக்கூடாத தப்பெல்லாம் பண்றான். நான் இப்ப எடுக்கப்போற நடவடிக்கை அவனை ஒரு கூலிக்காரன் அளவுக்கு மாத்தப்

போறத நீ பார்க்கப் போறே. வேலை செஞ்சாதான் சோறுன்னு இவனை எல்லாம் வெச்சிருந்தா தான் இவன்லாம் வழிக்கு வருவான்..."

கண்ணீருக்கு நடுவில் பாட்டி பாண்டிமாதேவியிடம் ஒரு பெரிய தீர்மானமும் வெளிப்பட்டது. அதைக் கேட்டபடியே, "அப்படிமட்டும் நடந்துட்டா என்னைவிட சந்தோஷப்படற வன் எவனும் இல்லை..." என்று திரும்பவும் முட்டாக்குக் குள் புகுந்து கொண்டு நடக்கத் தொடங்கினான் மருதன்.

இடைவழியில் அவனுக்கொரு சோதனை.

அவனைக் கம்பளத்தான் என்று நினைத்துக் கொண்டு ஒருவன் பின்னால் இருந்து குரல் கொடுத்தான். "என்ன கம்பளத்தான்... ஜமீன்தாரைப் பாத்துட்டியா? இப்பத்தான் வந்தே... அதுக்குள்ளே கிளம்பிட்டே?"

அவன் கேட்ட விதம் கம்பளத்தான் ஜமீன் மாளிக்கைக்கு வந்திருப்பதை ஊர்ஜிதம் செய்தது.

'அய்யோ... எதற்காக இருக்கும்?' என்கிற கேள்வியோடு அவனுக்குப் பதிலேதும் கூறாமல் அப்படியே குனிந்த தலையும் கோல் பிடித்த நடையுமாக விறுவிறு வென்று நடந்து வெளியேறி விட்டான் மருதன்.

**அது** ஒரு தனியறை!

பர்மா தேக்கை கப்பலில் வரவழைத்து செய்த கட்டில்கள். விடிந்து எழும்போது தன் முகத்தில் தானே விழிக்க வேண் டும் என்பதற்காக கட்டிலின் இருபுறமும் கண்ணாடிகள் என்று அந்த அறைக்குள் ஆடம்பரத்துக்குப் பஞ்சமில்லை.

அந்த அறைக்குள்தான் ராஜேஸ்வர பூபதியார் கம்பளத் தானிடம் கிசுகிசுத்துக் கொண்டிருந்தார்.

"ஏய் கம்பளத்தான்... நான் எவ்வளவு கேட்டாலும் என் பாட்டி கஜானா பத்தி வாயைத் திறக்க மாட்டேங்கறா.



ஆனா, எனக்குப் புத்தி சொல்ல வாயைத் திறந்தா மூடமாட் டேங்கறா. என்ன பண்ணலாம்?"

"என்ன ராஜா இது? என்ன பண்ணலாம்னு என்கிட்ட போய் கேட்டுக்கிட்டு? சொல்லுங்க ராஜா... நான் என்ன செய்யணும்?"

"உன்கிட்ட நான் என்னத்தடா கேப்பேன்? எனக்கு கஜானா இருக்கற இடம் தெரியணும். என் குடும்பத்துல எப்பவும் அது ஒருத்தருக்குத் தெரிஞ்ச விஷயமாவே இருந்திருக்கு. இரண்டு பேருக்குத் தெரிஞ்சா இரண்டு பேர்ல ஒருத்தர் இறந்துடுவாங்கன்னு ஒரு பயமும் இருக்கு..."

"அப்ப உங்க பாட்டி மண்டைய போட்டுட்டா அந்த ரகசியம் அவங்களோடல்ல போயிடும்...?"

"அதுதான் நானும் பயப்படறேன். என்கிட்ட சொல்லு சொல்லு ன்னு நான் என் பாட்டி கிட்ட கெஞ்சறேன். ஆனா பாட்டி 'நேரம் வரும், சொல்றேன்' னு தான் சொல்றா விஷ யத்தைச் சொல்ல மாட்டேங்கறா..."

"அவ்வளவுதானே ராஜா. நான் ஒரு பொடி தரேன். அதைப் பால்ல போட்டுக் கொடுங்க. அப்புறம் பாருங்க..."

"உண்மையைச் சொல்லிடுவாளா? எனக்கு அந்த கஜானா இருக்கற இடம் தெரிய வந்துடுமா?"

"நீங்க முதல்ல குடுத்துப் பாருங்க. அப்புறமா சொல் வீங்க..."

"உன் பொடிக்கு அப்படி ஒரு சக்தியா?"

"இல்லீங்களா பின்னே...? பன்னெண்டு வேர், பன் னெண்டு கிழங்கு, பன்னெண்டு உசுரோட தலைமுடின்னு தேடித்தேடி எடுத்துச் செஞ்ச பொடி ஆச்சுங்களே..."

"என்னென்னவோ சொல்றே...! நல்லது, உடனே அந்தப் பொடியைக் கொண்டு கிட்டு வா..."

"இப்பவே போறேங்க. பொடியோடதான் வருவேனுங்க..."

"போ... போ..." ராஜேஸ்வரபூபதி, கம்பளத்தானை பிடித்துத்தள்ளாத குறை. அவன் தலை மறையவும் மெல்ல செல்லக்கிளி எட்டிப் பார்த்தாள்.

"ராஜா..." மேலாக்கைச் சரிய விட்டபடியே குழைந்து கொண்டு வந்தாள்.

"என்ன...?"

"கவலைப்படாதீங்க. கஜானா இருக்கற இடம் தெரிஞ்சிடும்..."

"தெரியாட்டி யார் விட்டா?"

"ஒருவேளை பொடிக்கு மயங்கலேன்னாலும் ராணிம்மா எனக்கு கட்டாயம் மயங்குவாங்க..."

"என்ன செல்லக்கிளி.. கஜானா விஷயம் பேசும் போதெல்லாம் கிட்டக் கிட்ட வர்றே..."

"கஜானா வந்துட்டா நீங்க பூரணமான அதிகாரத்துக்கு வந்துடுவீங்க. நானும் உங்க நிழல்...."

அவள் முடிக்கும் முன், "வாயை மூடு" என்று சினத்துடன் சீறினார் ராஜேஸ்வர பூபதி.

"ராஜா..."

"என்ன ராஜா...? நீ எல்லாம் நான் குடிச்சுட்டு எறியற கள் கலயம் மாதிரி. தங்கப்பாத்திரம் இல்ல. உன்னை எடுத்து பத்ரமா வெச்சுக்க. இனி நீ என் எதிர்லையே வரக்கூடாது..."

"ராஜா..."

"மூச்... நான் ஒரு தடவை சொன்னா சொன்னதுதான்... ஓடிப்போ..."

"போயிட்றேன். ஒரு அஞ்சு ஏக்கர் நிலமாச்சும் கொடுங்க ராஜா..."



"ஒரு அங்குலம்கூட தரமாட்டேன். எனக்கு எப்பவும் கேக்கறவங்களக் கண்டாலே பிடிக்காதுன்னு தெரியும்ல.."

ஜமீன்தாரின் அதட்டல் செல்லக்கிளியை அப்படியே முடக்கி விட்டது. கண்களிலும் கண்ணீர் வந்து முட்டியது.

தொலைவில் லஸ்தர் விளக்கை சுத்தம் செய்தபடி இருந்த தாதி ஒருத்தி தன் மனதுக்குள், 'பாம்போட பழகினா விஷம் தான் மிச்சம்கறது செல்லக்கிளிக்குப் புரிஞ்சிருக்கும்.' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

செல்லக்கிளியும் சேலைத் தலைப்பை இழுத்து மூடிக் கொண்டு அங்கிருந்து ஓடிப் போனாள்.




***மண் பேசும்... நாம் கட்டும் மனையும் பேசும்...!***

அது எப்படி? அது ஜடமாயிற்றே... அது எப்படி பேசும் என்று உங்களுக்குத் தோன்றலாம். பேசுவது என்றால் அதற்கு நம்மைப் போல ஒரு மொழியும், நமக்கிருப்பது போல ஒரு குரலும் இருக்கிறது என்பதல்ல. அது பேசாமல் பேசக் கூடியதாகும். எந்த ஒரு மண்ணையும் ஒரு சதுரத்துக்குள் (அ) செவ்வகத்துக்குள் ஒன்பது கோள்களை, அதன் திசைகளுக்கேற்ப உள்ளடக்கிப் பார்க்கலாம். அப்படிப் பார்ப்பதில்தான் இருக்கிறது சூட்சுமம். ஒரு காலி மனையின் முன் நின்று அதன் சதுரத்தை (அ) செல்வகத்தை, பார்க்கும்போது ஒன்பது கிரகங்களுக்கான இடங்களின் வழியாக அவை தங்கள் சக்தியை வெளிக்காட்டும். உதாரணமாக நைருதி எனப்படும் மூலைதான் ராகுவுக்கு உரியது. அங்கே பாம்போ, பாம்புப் புற்றோ அமைந்திருந்தால் அந்த இடம் மிகவும் சக்தியோடு உள்ளதாக பொருள். இப்படி மண்ணானது அந்த இடத்தில் தனக்கிருக்கும் சக்தியை ஏதோ ஒரு விதத்தில் ஒவ்வொரு நொடியும் காட்டிக் கொண்டே இருக்கிறது. அதை நமக்கு படிக்கத் தெரிய வேண்டும். இப்படி ஒன்பது கிரகங்களையும் ஒரு மனையில்

பொருத்திப் பார்த்து அதன் பலத்தை அறியலாம். அப்படியே பறவைகள் மற்றும் தவளை, பட்டாம்பூச்சி போன்ற உயிரினங்களைக் கொண்டும் அந்த நிலத்தின் நன்மை, தீமையை உணரலாம்.

எந்த மனையாக இருந்தாலும் சரி. அந்த மனைக்கு வடக்கும் கிழக்கும் பெரிதாக விரிந்து கிடப்பது அவசியம். வடக்கும் கிழக்கும் பாதை கொண்ட ஒரு மனையிடம் கிடைப்பதும் அபூர்வம். அந்த மனைக்கான நற்சக்தி வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் வந்த வண்ணமே இருக்கும். தெற்கு சுருங்கியிருப்பதும் நல்லது.

-வாஸ்து ஞானி பிரம்மானந்த சாஸ்திரி

## 2005–வடக்கன்குளம்

**வ**சுமதியின் முகத்தில் திகைப்பு!

'புதையல் எடுக்கப்பட்டு விட்டது. இது தெரியக் கூடாது என்பதற்காகக் கூட இங்கே கொலைகள் நடக்கலாம்' என்று ராம் சொன்னது அவளை அப்படியே திகைப்பில் ஆழ்த்தி விட்டிருந்தது.

"என்ன வசு... இப்படி ஒரு கோணத்துல நீ பார்க்கவே இல்லையா?"

"அ... ஆமாம்..."

"போலீஸ்ல சேர்ந்த பிறகு ஒரே கோணம் கூடாது. இப்படி பல கோணங்கள்ள பார்க்கத் தெரியணும்..."

"அஃப்கோர்ஸ். ஆனா ராம், உங்க கோணத்தை என்னால ஏத்துக்க முடியலை.."

"ஏன்?"

"இல்ல... புதையல்ங்கறது ஒரு பெரிய பொக்கிஷம். அதைத் தேடி பலர் வருவதும். அவர்களுக்கு மோசமான முடிவு ஏற்பட்றதும் ஒண்ணும் புது விஷயம் இல்ல. ஆனா ஒருத்தர் புதையல் எடுத்துட்டா அவர் தேடல் முடிஞ்சு போச்சு. அதன் பிறகு அவருக்கு என்ன கவலை? எத்தனை



பேர் தேடி வந்தாலும் அந்த புதையல் கிடைக்கப் போறதில்ல. தான் எடுத்த புதையலை அமுக்கமா வெச்சுக்கிட்டு அவர் பாட்டுக்கும் இருக்கலாம் இல்லையா?"

"ரொம்ப யூஷுவலாவே யோசிக்கிறே நீ. புதையல் எடுக்கறது பெரிசில்ல... எடுத்த புதையலை எப்படி பணமாக்கறதுங்கறது தான் பெருசு. பல பேர் புதையலை பூமியில் இருந்து தோண்டி எடுத்தப்பவிட, புதையல் தங்கத்தை மாற்ற முயற்சி செய்யும்போது மாட்டியிருக்காங்க. அந்தக் கதை உனக்குத் தெரியும்தானே?"

"அப்படின்னா?"

"நம்ம கேஸ் ஃபைல் படி இந்த வடக்கன்குளத்துல இது வரை நடந்துருக்கற கொலைகள் எவ்வளவுன்னு தெரியுமா?"

"எனக்குத் தெரிஞ்சு ஏழு பேர்னு நினைக்கறேன்."

"ஒரு போலீஸ் இப்படி நினைக்கறேன், பாக்கறேன், வைக்கறேன்னே பேசக் கூடாது. அஞ்சும் மூணும் எட்டுங்கற மாதிரி பதில்ல ஒரு தெளிவு ரொம்ப முக்கியம்..."

"சரி ராம்..."

"ஓ. கே. இப்ப சரியா சொல்..."

"சரியா ஏழு பேர்..."

"ஏழு பேருக்கும் ஒரு ஒற்றுமை இருக்கறதா நம்ம டிபார்ட்மெண்ட்ல நோட் பண்ணி வெச்சிருக்கற விஷயம் எதுன்னு தெரியுமா?"

"ஏழு பேருமே தங்க நகை வியாபாரிகள். இதுல ஒருத்தர் வியாபாரி மட்டுமில்ல... புரோக்கரும்கூட..."

"கரெக்ட். அவ்வளவு பேருடைய பேங்க் அக்கவுண்ட்லையும் அவங்க சாகறதுக்கு முதல்நாள் லட்சக்கணக்குல பணமும் எடுக்கப்பட்டிருக்கு. இது நான் தேடிக் கண்டுபிடிச்சிருக்கற இன்னொரு விஷயம்..."

ராமகிருஷ்ணன் சொன்ன அந்தத் தகவல் வசுமதியின் வில் புருவத்தை நிமிர்த்தியது போல நேராக்கியது.

"அது மட்டுமில்ல... ஏழு பேருமே ஏழு மாநிலத்தைச் சேர்ந்தவங்க. இது அடுத்த தகவல்..."

"வெவ்வேற மாநிலமா?"

"ஆமாம். சாந்திலால் குப்தா குஜராத், பத்நாப பட் கர்னாடகா, வீரேந்தர் நாயக் மகாராஷ்டிரா, எலியாஸ் கேரளா, நாராயணன் ரெட்டி ஆந்திரா, பல்பீர்சிங் டெல்லி, இவங்களோட சேர்ந்து மதுரை நகைக்கடை தெருவுல புரோக்கரா சுத்திக்கிட்ட இருந்த நடராஜன்னு மொத்தமும் ஏழு பேர்! இதனால் தான் நம்ம டிபார்ட்மெண்ட்லையும் ஸ்பெஷலா இதைக் கவனிக்க நம்மை இங்க அனுப்பி யிருக்காங்க..."

"எல்லாம் சரி ராம். இந்த ஏழு பேரும் புதையல் இருக்கறது தெரிஞ்சு இங்க தேடி வந்து, வந்த இடத்துல அந்த ஆவி நிஜமாலுமே இருந்து அடிச்சு கொன்னுருக்கலாம் இல்லையா?"

"இப்படி ஊரும் உலகமும் நம்பணும்கறது இந்தக் கொலைகளை எல்லாம் செய்தவன் விருப்பம். அதையே நீயும் சொன்னா எப்படி வசுமதி...?"

"சரி... அவங்க இந்தப் புதையல் நகையையோ இல்லை தங்கத்தையோ வாங்க வந்தவங்களா?"

"நிச்சயமா..."

"அப்படின்னா வாங்கிட்டுப் போகாம ஏன் கொலை செய்யப்பட்டாங்க?"

"ரொம்ப கவனமா யோசிக்க வேண்டிய கட்டம் அது. புதையல் பத்தி தெரிஞ்சு வெளிய போய் அதப்பத்தி பேசி வெச்சா என்ன பண்றதுன்னு அவங்களக் கொன்னுருக்கலாம். இல்லைன்னா புதையல் தொடர்பா நிலவற பயத்தைப்



பயன்படுத்தி அவங்கள கொன்னுட்டு பணத்தை அபகரிச் சிருக்கலாம். புதையல் தங்கமும் அப்படியே இருக்கும். அதை விக்காமலே பணத்தையும் அடைய இதுல ஒரு வழி இருக்கே..."

"இல்ல ராம். இந்த இடம் ரொம்ப குழப்புது. அப்படியே கொன்னாலும் ஒருத்தரைக் கொல்லலாம், இரண்டு பேரைக் கொல்லலாம். வரிசையா ஏழு பேரைக் கொன்னதை என்னால ஒத்துக்க முடியலை..."

"இந்த விஷயத்துல இருக்கற குழப்பம் நாளைக்கு நீங்கிடும் வசு. கவலையை விடு..."

"எப்படி?"

"பொறுத்திருந்து பார். இன்னும் கொஞ்ச நேரத்துல போலீஸ் வரும். நம்மைக் கூட்டிகிட்டு அந்த பாழடைஞ்ச வீட்டுக்குப் போகும். அங்க குதிர்ல எந்த தலைகளும் இருக்காது. நான் பயத்துல உளறிட்டதா சொல்வாங்க பார்..."

ராமகிருஷ்ணன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கதவுதட்டப்பட- போய்த்திறந்தான். வெளியே ஜவஹர்...

"என்ன சார்..."

"சாரி.. உங்களை நான் சொந்தரவு பண்ணிட்டேன்..."

"விஷயத்தைச் சொல்லுங்க..."

"எப்ப கொல்லப்பட்ட நபர்களோட தலைகள். அந்த பாழடைஞ்ச வீட்டுல இருக்குன்னு நீங்க சொல்லிட்டீங் களோ, அப்பவே நான் போலீசுக்குத் தகவல்தர முடிவு செய்துட்டேன். ஒரு பஞ்சாயத்து பிரசிடெண்ட்டா இது என் கடமை. இப்ப போலீஸ் வந்துருக்கு. நாம அவ்வளவு பேரும் அந்த வீட்டுக்குப் போறோம். வீட்டு உரிமையாளர் நீங்க. நீங்க எதிர்க்க இருக்கணும்கறது போலீஸ் விருப்பம். அப்படியே உங்க வாக்குமூலமும் ரொம்ப முக்கியம்னு சொல்லிட்டாங்க..."

ஜவஹர் பேசவும், ராமகிருஷ்ணன் ஒரு சுழிந்த சிரிப்புடன் வசுமதியைப் பார்த்தான். அவன் அவளிடம் சொன்ன அதே விதத்தில் விஷயம் செல்வதால் வந்த சிரிப்பு அது.

"நீங்க ரொம்ப சின்சியரான பிரசிடென்ட்டுங்கறத ப்ரூஃப் பண்ணிட்டீங்க..." என்றபடியே ஜவஹருடன் புறப்பட்டான்.

அக்ரஹாரம். இடிந்த வீடு.

எல்லோரும் எட்ட நின்று பார்க்க, சப்-இன்ஸ்பெக்டரும், ஒரு போலீஸ்காரரும் ராமகிருஷ்ணனைத் தான் பார்த்தனர்.

"என்ன சார்..."

"நீங்க உள்ற போங்க. நாங்க பின்னால வர்றோம்..."

"ஆவி பயம் உங்களுக்குமா...?"

"நோ... நோ... இது ஒரு எச்சரிக்கை தட்ஸ் ஆல்."

-ராமகிருஷ்ணன் அவர் பதிலைத் தொடர்ந்து வீட்டு பின் கொல்லை வழியாக உள்ளே நுழைந்தான். எல்லோரும் பின்தொடர்ந்தனர். உள்ளே நிலவிய சுத்தமான சூழல் சப்-இன்ஸ்பெக்டருக்கே ஆச்சரியம்.

"ரொம்ப சுத்தமான ஆவி..." என்று ராமகிருஷ்ணன் கமெண்ட் அடித்தபடியே குதிரைக் காட்டினான்.

சப்-இன்ஸ்பெக்டரும் எட்டிப் பார்த்தார். முகத்தில் வெல வெலப்பு கூட, கலங்கிய விழிகளில் சிகப்பு வர்ணத்தைப் பூசிக் கொண்டவர் போலானார்.

"என்ன சார்... உள்ள எதுவும் இருக்காதே..."

ராமகிருஷ்ணன் நக்கலாகக் கேட்ட கேள்விக்கு, "என்ன சார்... உள்ற நீங்க பார்த்த தலைகள் அப்படியே கிடக்கு..." என்றார். ராமகிருஷ்ணனுக்குப் பகீர் என்றது.



அடுத்த சில நிமிடங்களில் போலீஸ் சம்பிரதாயம் தொடங்கிவிட்டது. ராமகிருஷ்ணன் சிந்தனையோடு வெளியில் வந்தான். வசுமதி நெருங்கிச் சென்றாள்.

"ராம்... இது என்னு புதுக்குழப்பம்?"

"அதான் எனக்கும் புரியல..."

"உங்க அவ்வளவு கால்குலேஷனும் தப்பாயிட்டிச்சே..."

"ஆமாம். திரும்ப ஜீரோவுல இருந்து ஸ்டார்ட் பண்ணணும். புதையலைக் கூட இன்னமும் எடுக்காம இருந்துருக்கலாம்..."

ராமகிருஷ்ணன் துப்புரவாக குழம்பியவனாக நெற்றியைத் தேய்த்துக் கொண்டான். அப்படியே கூட்டத்தைப் பார்த்தான். ஊர் முகங்கள்!

ஒரு வயதான கிழவன் மட்டும் வெறித்து வெறித்துப் பார்த்தபடி இருந்தான். பிறகு மெல்ல நெருங்கிய ஜவஹரை நோக்கி வந்தவன், "இங்க இருந்த பேயைப் பிடிச்சிட்டாங்களா?" என்று கேட்டான்.

"ஆமா... பிடிச்சிட்டாங்க தாத்தா. நீ போ" என்றான் ஜவஹரும்.

"நினைச்சேன்" என்றபடியே அங்கிருந்து சிறுவர்கள் 'டிர்ர்ர்' என்று வாயால் சப்தமிட்டபடி கார் ஓட்டுவது போல ஓட்டிக் கொண்டும் போனான்.

"யார் அவர்?" ராமகிருஷ்ணன் கேட்க, "சின்னான் தாத்தா..." என்ற ஜவஹர் அப்படியே, "பாவம், பைத்தியம்..." என்று அந்த நபருக்கான ஒரு சிறு குறிப்பும் கொடுத்தான்.

"பைத்தியமா?"

"ஆமாம். இவனோட குடும்பமே மாய மந்திரம்னு மாந்திரீகத்துக்குப் பேர்போன குடும்பம். ஊருக்கு செய்வினை செய்யற இவனையே ஒரு செய்வினை திருப்பித் தாக்கி

இப்படி பைத்தியம் ஆயிட்டதா சொல்வாங்க..." என்றும் விளக்கமளித்தான் ஜவஹர்.

"இவ்வளவு முன்மாதிரியான ஊர்ல எப்படி இப்படி ஒரு பைத்தியத்தை விட்டு வெச்சிருக்கீங்க...?"

"எங்க... ஒத்துழைச்சா குணப்படுத்தலாம். இப்பக்கூட 'மாயம் பண்றேன், மந்திரம் பண்றேன்' னு சுடுகாட்டுலதான் இருப்பான். சாப்பிடற நேரத்துக்கு ஊருக்குள்ள வருவான். பிச்சை சாப்பாடுதான். சாப்ட்டு முடிச்சா, ஐயா நேரா சுடுகாட்டுக்குப் போயிடுவார். இல்லேன்னா ஜமீன்தார் சமாதிக்கு..."

-ஜவஹர் ஜமீன்தார் சமாதி என்று குறிப்பிட்டதும் 'அடடே, அந்தப் பக்கமே போகாமல் இருக்கிறோமே' என்று தான் முதலில் தோன்றியது.

நடுவில் ஜவஹரை ஊர்க்காரர்கள் சிலர் கூப்பிட்டு கூப்பிட்டு ஏதோ கேட்டார்கள். இவனும் சொன்னான்.

"என்ன கேக்கறாங்க?"

"இந்த வீட்டு விஷயம் புதிரா இருந்துச்சு. இவ்வளவு கொலைகளைப் பண்ணின ஆவி உங்களை எல்லாம் சும்மாவிடுமான்னு கேட்டு பயப்படறாங்க..."

"உங்களுக்குப் பயமில்லையா?"

"பயம்தான். அதேசமயம் கடமைன்னு ஒண்ணு இருக்கே. எதுக்கும் நீங்க எச்சரிக்கையா இருங்க. மொத்தத்துல இந்த பிரச்சினையை எப்படியாவது முடிவுக்குக் கொண்டுவர இப்ப நேரம் வந்துருக்கு. நான் அப்படித்தான் நினைக்கிறேன்..."

-ஜவஹர் மிடறு விழுங்கி சமாளித்தான். அவன் பேசுவதை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்த வசுமதி, ராமகிருஷ்ணன் காதருகே வந்து, "ராம்... எனக்கு இவன் மேலதான் சந்தேகம்..." என்றாள்.



"அவசரப்படாதே..." என்று அவள் வாயையும் அடைத்தான். திரும்பவும் ஜவஹரை நெருங்கியவன், "ஆமாம்... ஜமீன்தார் சமாதி எங்க இருக்குன்னு சொல்ல முடியுமா?"

"எதுக்கு கேக்கறீங்க...?"

"சும்மா பாக்கத்தான்..."

"இந்த ஊருக்கு வடக்கதான். குறிப்பா வடகிழக்கு மூலைல! ஈசான்யத்துல மாளிகை அமைஞ்சா அது தழைக்காதும்பாங்க. அது நிரூபணமாயிடிச்சு. ஆனா அந்தப் பக்கமா இருக்கற கரட்டு மலையை இப்ப காலி பண்ணிட்டதால தான் ஊர் இந்த அளவு முன்னேறியிருக்கு..."

"சரி, நாங்க கிளம்பறேரம்..."

"இருங்க, எஸ்.ஐ. உங்ககூட நிறைய பேசணும்னு சொன்னார். உங்ககிட்ட இன்னும் ஸ்டேட் மெண்ட்டே வாங்கலையே..."

-ராமகிருஷ்ணனை ஜவஹர் சரியான காரணம் கூறி தடுக்க, எதிரிலையே ஒரு ஓலைக் கூடையில் அவ்வளவு தலைகளையும், மண்டை ஓடுகளையும் எடுத்துக் கொண்டு அவைகளை ஃபார்ன்ஸிக் லேபிடம் ஒப்படைக்கக் கிளம்பினார்கள்.

எஸ். ஐ. யும் வந்தார். "நாம கொஞ்சம் அப்படிப் போய் உட்கார்ந்து பேசுவோமா?" கேட்டார்.

"தாராளமா..."

இருவரும் நகர்ந்தனர். ஜவஹரும் உடன் சென்றான். எஸ். ஐ யின் விசாரணை ஆரம்பமானது.

"உங்க பேர்?"

"ராமகிருஷ்ணன்."

"இந்த வீட்டுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?"

"இது எங்க பூர்வீக வீடு. அதாவது கொள்ளுத்தாத்தா, தாத்தா இவங்களோட வீடு, டோட்டலா தாத்தா சொத்து பேரனுக்குங்கற சட்டப்படி என் சொந்தம்..."

"இந்த ஊருக்கு வந்த நோக்கம்...?"

"இந்த வீட்டை புதுப்பிக்க, இங்க கொஞ்சநாள் தங்கற துக்காக..."

"உங்க வேலையை விட்டுட்டா...?"

"என் வேலையே இனி இதுதான்..."

"சரி. இங்க இப்படி ஆவி இருக்கு, பேய் இருக்குன்ன சொல்லும்போது உங்களுக்குப் பயமா இல்லையா?"

"சாரி சப் -இன்ஸ்பெக்டர்! நான் அதை நம்பலை..."

"அப்ப உங்க முடிவு...?"

"இது ஒரு நெட்ஓர்க்கோட சதி..."

"நெட்ஓர்க்... யூ மீன், ஒரு குரூப்போட சதிங்கறீங்களா?"

"நிச்சயமா...?"

"காரணம்?"

"அவ்வளவு பேரும் புதையல் தேடி வந்தவங்களா இருக் கணும். இல்லை, புதையல் தங்கத்தை வாங்க வந்து செத்துப் போயிருக்கலாம்..."

"ஒரு வாதத்திற்கு அது உண்மைன்னாலும் கொன்னவங் களோட தலையை உங்க பாழடைஞ்ச வீட்டு குதிர்ல ஏன் கொண்டு வந்து போடணும்?"

"ரொம்ப சிம்ப்பிள். இந்த வீட்ல என் அத்தைப்பாட்டி ஒருத்தி தூக்குப் போட்டு செத்துப் போனா. அதன் பிறகு இந்த வீட்ல என் முன்னோர்கள் தங்கல. காலப்போக்குல தூக்குல தொங்கின வீடு ஆவி வீடாகி, தப்பு செய்யறவங்க பதுங்கி வாழத் தோதாமாறிடிச்சு.."



"சரி... கொலைகாரங்க இங்க பூஜை பண்ணியிருக்காங்க. ஒரு ஆசாரமான குடும்ப வாழ்க்கைல்ல வாழ்ந்த மாதிரி தெரியுது..."

"ஆசாரமான கொலைகாரனா இருக்கலாம்..."

"கொலைக்கான நோக்கம்...?"

"நான்தான் சொன்னேனே.. தங்கம் வாங்க வந்துருக்கணும், இல்ல தங்கம் தேடி வந்துருக்கணும்..."

"அப்ப இப்படி இறந்தவர்களைக் கொன்னவங்க கிட்டதான் புதையல் இருக்கா?"

"இருக்கலாம். இல்லாமலுமிருக்கலாம். என்னால இவ்வளவு தான் யோசிக்க முடியுது. மிச்சத்தை நீங்கதான் கண்டுபிடிக்கணும்..."

ராமகிருஷ்ணனின் பதில் ஜவஹரையே ஒரு உலுக்கு உலுக்கி விட்டது.

"சார்! இது ரொம்ப அமைதியான ஊர். இவர் நெட்ஓர்க் அது இதுங்கறதெல்லாம் டூ மச்" என்று வக்காலத்து வாங்கிப் பார்த்தான்.

"அப்படின்னா உங்க கருத்து...?"

"நிச்சயமா இந்த வீட்டு ஆவியோட வேலை தான்..."

"அந்த ஆவி இப்ப நம்ம எதுக்க ஏன் வரலை...?"

"நிச்சயம் வரும். அதோட வழில குறுக்க வர்றவங்கள அது விடாது. செத்துப்போன அவ்வளவு பேரும் அதோட வழில குறுக்கிட்டாங்க. நாங்க ஒதுங்கி வாழறவங்க. அதனால எங்களுக்கு எந்த இடைஞ்சலும் இல்லை..."

-ஜவஹர் சொன்னது ராமகிருஷ்ணனைச் சிரிக்க வைத்தது. ஜவஹரும் கவனித்தான்.

"சார் சிரிக்காதீங்க. உங்க அத்தைப்பாட்டி தான் பழிவாங்கிக்கிட்டு வர்றாங்க. நீங்களே அதை மறுக்காதீங்க. அப்புறம் உங்களுக்கும் ஆபத்து வரலாம்..."

"மிஸ்டர் ஜவஹர்! நீங்க ஒரு நாணயமான பஞ்சாயத்துத் தலைவர்தானே?"

"நிச்சயமா..."

"அப்ப இப்படி முட்டாள்தனமான நம்பிக்கையை மூட்டை கட்டி வெச்சுட்டு என்கூட ஒத்துழையுங்க. புதையலையும் சரி, அதை வெச்சிருக்கறவனையும் சரி... நான் கண்டுபிடிக்கறேன்..."

ஆவேசமாகப் பேசிய ராமகிருஷ்ணன், "ஒரு நிமிடம்" என்று சப்-இன்ஸ்பெக்டரோடு சென்றுவிட்டுத் திரும்பி வரவும் சப்-இன்ஸ்பெக்டரிடம் பெரிய அளவில் மாற்றம்.

"மிஸ்டர் ஜவஹர். இவருக்கு ஒத்துழைப்பு தாங்க. இப்போதைக்கு என் பதில் இவ்வளவுதான்..." என்றபடியே ஜீப்பில் ஏறிப் போனார்.

ஜவஹருக்கே அது ஆச்சரியமாகி விட்டது.

"உங்களுக்கு நான் என்ன ஒத்துழைப்பு தரணும்?"

"ரொம்ப சிம்ப்பிள். இதுக்கு முந்தி வரிசையா இறந்து போன ஏழு பேரும் இங்க வந்தப்ப எங்க தங்கினாங்கன்னு தெரியுமா?"

"தெரியாது. இறந்து பிணமா கிடக்கும் போதுதான் பார்த்தேன்..."

"அவங்கள்ள ஒருத்தரைக் கூடவா நீங்க பார்க்கல?"

"மதுரைக்காரர்னு சொல்லிக்கிட்டு ஒருத்தர் அடிக்கடி இந்த ஊருக்கு வருவார். கடைசில அவரையும் கொன்னுட்டாங்க. அவரை மட்டும் தெரியும்..."

"அவர் பேர் நடராஜன்தானே?"



"ஆமாம்..."

"அவர்தான் ஏழாவது கொலை செய்யப்பட்டாரா?"

"எக்ஸாக்ட்லி"

"மீதி உள்ள ஆறு பேரும் அமாவாசை நாளா பார்த்து கொல்லப்பட்டிருக்காங்க இல்லையா?"

"ஆமாம். இது எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"சப்-இன்ஸ்பெக்டர் தான் சொன்னார். போகட்டும் இந்த நடராஜன்ங்கறவன் இந்த ஊர்ல யாரோட தொடர்பு வெச்சிருந்தான்னு சொல்ல முடியுமா?"

"அவன் என்கூட மட்டும்தான் பேசியிருக்கான். அதுவும் அவனை சந்தேகப்பட்டு விசாரிச்சதால. மற்றபடி இந்த ஊர்ல அவனுக்கு யாரையும் தெரியாது..."

"நான் சொல்றேன். அவன் தொடர்பு வெச்சிருந்த நபர் நீங்கன்னு..."

"என்ன சார் இது...? விட்டா நான்தான் கொலைகாரன்னு சொல்வீங்களா?"

"நிச்சயமா. புதையல் உங்க கிட்டதான் இருக்கு. அதை காசா மாத்த நடராஜனைப் பிடிச்சு தங்க வியாபாரிகளை வரவழைச்சீங்க. நடராஜன் உதவியோட அவங்களைக் கொலையும் செய்தீங்கன்னு நான் சொல்றேன்..."

"கடைசியா நடராஜனையும் நானே கொன்னுட்டேனா?" ஜவஹர் பதட்டமே இல்லாமல் கேட்டான்.

"ஆமாம்..."

"நினைச்சேன்... இப்படித்தான் உங்களால யூகிக்க முடியும்னு. நான் இப்ப உங்களுக்கு சில விஷயங்களைச் சொல்லவா?"

ஜவஹர் பதிலுக்குக் கேட்ட தோரணையே ஒரு தினுசாக இருந்தது.

"என்ன சொல்லப் போறீங்க?"

"நீங்க ஒரு போலீஸ் ஆபீசர்னு..."

-ஜவஹரின் குத்துவெட்டு பதிலில் ராமகிருஷ்ணனிடமே ஒரு தடுமாற்றம்.

"வாட்... நான் போலீஸ் ஆபீசரா...?"

"இன்னும் சொல்றேன் கேளுங்க. உங்க டிபார்ட்மெண்ட் ஹெட்டுக்கு கடிதம் போட்டு எங்க ஊர் மர்மத்துக்கு ஒரு விடை கண்டுபிடியுங்கன்னு எழுதினவனே நான்தான். ஐ.ஜி.யே என்கூட பேசி ஏற்பாடு செய்யறதா சொன்னார். அதனாலதான் நீங்க வீடு கேட்ட உடனே நான் எந்த மறுப்பும் சொல்லலை..."

வசுமதி உடனேயே ராமகிருஷ்ணனின் முகத்தைத்தான் பார்த்தாள்.

"சார்... நாம இரண்டாவது தடவையா ஜீரோ பாய்ண்டுக்குப் போறோம்..." என்றாள் வருத்தமாக.

"மிஸ்டர் ஜவஹர்! எங்க டிபார்ட்மெண்ட் உதவியைக் கேக்கத் தெரிஞ்ச உங்களுக்கு உங்க ஊர்ல யார் கொலைகாரன்னு கண்டுபிடிக்க முடியலையா?"

"சத்யமா முடியல. எல்லாரும் நல்லவங்களாதான் தெரியறாங்க. மொத்தம் நாலாயிரத்து சொச்சம் பேர். இதுல ஒருத்தன் பைத்தியம். மத்த அவ்வளவு பேரையும் நான் வேவு பார்த்துட்டேன்..."

"அப்ப உங்க தீர்மானம்?"

"சொல்லட்டுமா?"

"சொல்லுங்க..."

"சந்தேகத்துக்கு இடமில்லாம ஆவிதான் செய்திருக்கணும்..."

"ஜவஹர்! நீங்களா இப்படிச் சொல்றது...?"



"சார்! நான் ஒரு சாதாரண பிரஜை. நீங்க போலீஸ் அதிகாரி. உங்க பார்வையே வேறயா இருக்கும். வேணும்னா தங்கி இருந்து நோட்டம் போட்டுப் பாருங்க. ஆனா திரும்பவும் சொல்றேன். நீங்க, இப்ப நான் மூணு பேருமே அந்த ஆவி விஷயத்துல குறுக்க நுழைஞ்சிட்டோம். அதாவது புதையல் விஷயத்துல மூக்கை நுழைச்சிட்டோம் ஆகையால இதுவரை நடந்த கொலைகளைப் போல நாமளும் கொல்லப்படலாம். என் கருத்துப் படி ஆவிதான் இந்தக் கொலைகளைச் செய்திருக்குன்னா நமக்கும் அதுதான் முடிவு. மனுஷன்னாதான் நாம தப்பிப்போம். இதுதான் என் தீர்மானமான பதில்..."

-ஜவஹர் பதில் மிரட்டலாக இருந்தது.

"அப்ப நாம காலியா?" -வசுமதி கூட கையை உதறினாள்.

"வசு... ஒரு போலீஸ் மாதிரி பிஹேவ் பண்ணு. என்ன இது உளறல்..."

"சாரி சார். உங்க கன்க்ளுஷன் ஒண்ணுகூட ஒர்க் அவுட் ஆகலை. நீங்க யாரை வில்லன்னீங்களோ அவர் ஒரு ஹீரோவா இருக்கார். ரொம்ப ரொம்ப பிளைண்டா இந்தக் கேஸ்ல நாம மாட்டிக்கிட்டு முழிக்கிறோம். அதாவது அப்படிச் சொன்னேன்..." என்று வெகுவேகமாக சமாளிக்கவும் செய்தாள் வசுமதி.

ராமகிருஷ்ணனுக்கே என்னமோ போலாகி விட்டது. கையை உதறிக் கொண்டான்.

மனக்கண்ணில் அந்தப் பைத்தியக்கார முகம் திருகிக் கொண்டு எட்டிப்பார்த்தது.



திசைகளில் ஒரு பழுதும் இல்லை. திசைகளில் கிழக்கு உயர்ந்தது. வடக்கு உயர்ந்தது மற்றது தாழ்ந்தது. என்பது போல் சிந்திப்பது பிழையாகும். எந்தத் திசை பார்த்து வாசல் இருந்தாலும் அந்த மண்ணில் நீரை எங்கிருந்து எடுக்க வேண்டும். எங்கே தேக்க வேண்டும் எந்த இடத்தை சுத்தமாக பவித்ரமாக பாதுகாக்க வேண்டும் எங்கே எப்படிப் பட்ட மரங்களை வைத்து வளர்க்க வேண்டும் என்பதில்தான் வாழ்க்கை வெற்றி உள்ளது.

நட்டநடுவில் திறப்பு உள்ள வீட்டுக்கு தோஷம் மிக மிகக் குறைவாக இருக்கும். உச்சி சூரியனின் கதிர் நடுவீட்டில் பட்டு அப்படியே நாலாபுறமும் தெறிப்பதில்தான் அதன் சிறப்பு உள்ளது.

வெளியே சென்றுவிட்டு வீட்டுக்குள் நுழையும் போது எத்தனை முறை நாம் திரும்புகிறோம் என்பதில்கூட பெரிய அளவில் பொருள் உள்ளது. மேற்குவாசல் உள்ள வீட்டில் குடியிருக்கும் ஒருவர் மேற்கில் இருந்து நேராக கிழக்கில் புகாமல் தெற்கே சென்று பின் திரும்பி வடக்கு நோக்கி ஏறி பிறகு மேற்கு வாசலில் நுழைவது ஒரு விதம். அதுவே அப்படியே நேராக நுழைவது ஒரு விதம்.

ஒரு ஊருக்குள் நுழையும் பாதை, அந்த ஊரின் சச்துரத் தில் எந்த கிரக கட்டத்தில் நுழைகிறது என்பதில் தான் அந்த ஊருக்குள் நுழைபவர்களின் சந்தோஷமும் துக்கமும் அமைகிறது.

சூரியனுடைய கட்டத்தில் பாதை புகுந்தால் அதில் நுழைபவர்கள் அந்த ஊருக்கு மிக பயன்படுவார்கள். குறிப்பாக அந்த ஊர் அரசாங்கத்தின் திட்டங்களால் எல்லா நன்மைகளையும் பெற்றிருக்கும்.

இப்படி பாதை புகும் கட்டங்களுக்கு ஏற்பவே பயன்கள். வடக்கன்குளத்துக்குள் வெளியில் இருந்து உள் நுழையும் பாதை எமன் வசிக்கும் கட்டப்பகுதியில் அமைந்திருப்பதால் பலிகள், கொலைகள் மிகுதியாக நடக்க வாய்ப்பு உண்டு.

*-வாஸ்து ஞானி பிரம்மானந்த சாஸ்திரி*



## 1922–வடக்கன்குளம்

கரட்டு உச்சியில் அந்தச் சாமியாரை மருதன் சந்தித்தபோது அவர் தியானத்தில் இருந்தார். பாம்பு ஒன்று அவர்மேல் ஏறி விளையாடியபடி இருந்தது. இருந்தும் அவர் சட்டை செய்யாமல் தியானத்தில் தான் இருந்தார்.

மருதன் சிலிர்ப்புடன் பார்த்தான். இப்படி தியானத்தில் இருப்பவர்களைக் கலைக்கக்கூடாது என்று கேள்விப்பட் டிருக்கிறான். பேசாமல் திரும்பினான். போனமுறை இப்படித் திரும்பிய போதுதான் அவரும் அவனைக் கூப்பிட்டு பேசினார். இந்த முறையும் அப்படிச் செய்வாரோ...? என்ற படியே திரும்பினான்.

ஆனால், அவர் கூப்பிடவில்லை. வெளியே வந்தான். கரட்டு மேல் இருந்து ஊரைப் பார்த்தான். துல்லியமாகத் தெரிந்தது.

கீழே சிவன் கோயில். கோயிலை ஒட்டி குளம். கரட்டு மேல் எலுமிச்சை குழி என்று ஒரு இடம் உள்ளது. அதில் ஒரு எலுமிச்சம் பழத்தைப் போட்டால் அது கீழே குளத்தில் வந்து சேர்ந்து மிதக்கும். கரட்டில் பெய்யும் மழைநீர் குளத் தைச் சேர இயற்கையே செய்த ஏற்பாடா, இல்லை யாராவது திட்டமிட்டு செய்ததா என்பதெல்லாம் பெரிய புதிர்.

சிலர் போட்ட எலுமிச்சம்பழம் குளத்து நீரில் வந்து சேர்ந்ததே இல்லை. நடுவழியில் அது என்னாகிறது என்ப தும் தெரியாது.

மருதன் எலுமிச்சை குழியிடம் சென்று நின்று பார்த்தான். எலுமிச்சம் பழம் இருந்தால் அதை ஊருக்கான வேண்டுத லோடு போட்டுப் பார்க்கலாம் என்று தோன்றிற்று.

பழத்தை வாங்காமல் வந்துவிட்டதற்காக வருத்தப்பட்டு திரும்பியவன் எதிரில், பாட்டி பாண்டிமாதேவியும், பாப்பம்

மாளும் மெல்ல மெல்ல கரட்டின் பாறைகள் நடுவே ஏறி வந்து கொண்டிருந்தனர்.

"ராணிம்மா..." கத்திவிட்டான் மருதன். பாண்டிமாதேவி யும் ஒரு வழியாக மூச்சிளைக்க அங்கே வந்து சேர்ந்தாள்.

"இது... இது... எலுமிச்சங்குழி தானே?" என்று பெரு மூச்சோடு கேட்டாள்.

"ஆமாம் ராணிம்மா... மனசுல நினைச்ச காரியம் நடக் கணும்னு இங்க எலுமிச்சம்பழத்த போடுவாங்க. அது கீழ குளத்துல மிதக்கும்..." அவன் சொல்லியபடி பாண்டிமா தேவி கையைப் பார்த்தான். அவள் கையில் ஒரு எலுமி ச்சம்பழம்.

அங்கே நின்று கீழே குளத்தைப் பார்த்தவள் அப்படியே கைகளைக் கட்டிக் கொண்டு எலுமிச்சம்பழத்தைக் குழியில் போட்டாள். போட்ட நொடிதிடுதிடு வென்று ஓடி அது மறைந்தும் போயிற்று.

"டேய்! கீழ் போய் பார்த்துட்டு வா... அது மிதக்குதா, மிதக்கலையான்னு..."

"ராணிம்மா... இறங்கி ஏற நேரம் பிடிக்குமே..."

"பரவால்ல. போய்ட்டு வா. நான் நினைச்சது பலிக் கணும்..."

"பலிக்கும் ராணிம்மா. உங்க நல்ல மனசுக்கு நிச்சயமா பலிக்கும். வாங்க, முதல்ல சாமியாரைப் பார்க்கலாம். அப் புறம் கீழ போகும் போது குளத்துல எலுமிச்சம் பழம் மிதக்குதான்னும் பாக்கலாம்..."

மருதன் பேச்சு பாப்பம்மாவுக்குள் எரிச்சலை மூட்டியது.

"ஏ மருதா... எவ்வளவு கஷ்டப்பட்டு யாருக்கும் தெரி யாம இங்க வந்திருக்கோம் தெரியுமா? அங்க கம்பளத்தான் வேற வந்துருக்கான். அவன் என்ன மாய மந்திரத்தைப்



பண்ணப் போறானோ தெரியலை. நீ என்னமோ நிதானமா பேசிக்கிட்டிருக்கே..." என்று சீறி விழுந்தாள்.

"ஆமாண்டா... என் பேரன் தன் சுயபுத்தியை இழந்து ரொம்ப நாளாச்சு. எது வேணும்னா எப்ப வேணும்னா நடக்கலாம். என்னையும் இந்த ஊரையும் அந்த ஆண்டவன் தாண்டா காப்பாத்தணும்..."

"ராணிம்மா... முதல்ல சாமியாரப் பாருங்க. அவர்தான் இப்ப நமக்கு கடவுள்..." என்று இருவரையும் சாமியார் முன் அழைத்துச் சென்றான்.

தொடர்ந்து அவர் தியானத்தில்தான் இருந்தார். கழுத்தில் சிவபெருமான் கழுத்துப் பாம்பு போல அந்த சர்ப்பம்! ராணி பாண்டிமாதேவிக்கு அந்த கைலாசத்து சிவனைப் பார்க்கின்ற மாதிரியே இருந்தது. தன்னையுமறியாமல் கைகளைக் கூப்பினாள். கண்கள் கலங்கிட நின்றாள். அவரும் மெல்ல கண் மலர்ந்தினார்.

"சாமி..."

"வா மருதா... இவங்கதான் ஜமீன்தாரிணியா?"

"ஆமாம் சாமி. நான்தான் அந்த பாவி. திக்குதிசை தெரியாம தடுமாறிய படி நின்னுகிட்டிருந்கேன்..."

"பல தலைமுறைக்கு அனுபவிக்கிற அளவு செல்வம் இருக்கிற நீயா இப்படி பேசறே?"

"செல்வமா பெருசு. அதைக் குற்ற உணர்ச்சியில்லாம அனுபவிக்கிற அம்சம் இல்லையே..."

"சரியா சொன்னே. நல்லவிதமா வாழறவங்களுக்கு மட்டுமே அம்சம் சித்திக்கும்..."

"சாமி! இப்ப நீங்கதான் ஒரு நல்ல வழி காட்டணும். தெக்குப்பட்டில ராணிம்மா குடி ஏறிட்டா எல்லா பிரச்சனை யும் தீர்ந்திடுமா...?"

"அங்க குடி ஏறினாதான் அவங்களுக்கு ஒரு மதிப்பு வரும். அவங்க பேச்சை ஊரும் கேட்கும்..."

"அதுவரை ஜமீன்தார் சும்மா இருப்பாரா?"

"இப்பவே அவர் உங்க புத்தியை வசியப்படுத்தற மருந்தை உங்களுக்கான உணவில் கலந்தாச்சு. உங்க எச்சரிக் கைல தான் எல்லாம் இருக்கு..."

"நான் இந்த நிமிஷம் எச்சரிக்கையாதான் இருக்கேன். ஜமீன் சொத்தைக் கூட ஊருக்கு சொந்தமாக்கிடணும்னு நினைக்கறேன். என் பேரன் திருந்தி நல்லவிதமா வாழ்ந்தா மட்டுமே ஜமீன் சொத்தை அவன் அனுபவிக்கலாம். இல்லன்னா அவ்வளவும் ஊர் சிவன் கோயிலுக்குப் போயிடணும்கறது தான் என் உயிலோட சாராம்சம்..."

"ரொம்ப நல்ல முடிவு."

"என் முடிவு நல்ல முடிவா இருக்கலாம். அது ஈடேறுமா? என் பேரன் திருந்துவானா? இந்த ஊரும் நிம்மதியா வாழுமா...?"

பாட்டி நாதழுதழுக்க கேட்டபோது எங்கிருந்தோ ஒரு கட்டாரி! அது நேராக ஒரு சிவயோகி போல அமர்ந்திருந்த அந்த சன்யாசியின் மார்பைத்தான் தைத்தது.

"ஐயோ..." அலறி விட்டாள் பாட்டி.

அடுத்து ஒரு காட்டாரி. அது மருதன் மீது! எறிந்தது ஜமீன்தார்தான். இருவருமே சுருண்டு விழுந்தனர். சாமி யார் மட்டும் கீழே விழுந்து துடித்த நிலையில் முணுமுணுத் தார்.

"பேராசை பெருநஷ்டமாகி விடும். எந்த கஜானா செல் வத்துக்கு ஆசைப்பட்டு இந்தப் பாதகத்தை நீ செய்தியோ... அது உனக்குக் கிடைக்காது. யாருக்கும் எந்தக் காலத்துலை யும் பயன்படாது. இது என் சாபம்..." அதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை. உயிர்போனதுதான் மிச்சம்.



சிரித்தபடியே கிட்டே வந்து பார்த்த ராஜேஸ்வர பூபதி, "என்ன பாட்டி! என்னைக் கவுக்க கரட்டு மேல ஏறி வந்து ஒரு சாமியாரைப் பாக்கற அளவு உனக்கு தைரியம் வந்துடிச்சா?" என்று கேட்டவன், "இனி உன் தயவே தேவை இல்லை. கஜானா எங்க இருக்குன்னு கண்டுபிடிச்சிட்டேன். அதிர்ஷ்டம் என் பக்கம் பாட்டி, அதான் கஜானா அறைக் கான அச்சுப்பொறி என் கண்ணுல பட்டது. என்னன்னு திருகிப் பார்த்தா உள்ள கஜானாவுக்குப் போற வழி, உள்ளேயும் போய்ப் பார்த்தேன். இனி உன் உதவி எனக்குத் தேவை இல்லை. இந்த சாமியாரோட சேர்ந்து நீயும் போய்ச் சேர். உன்னை இனியும் விட்டுவெச்சா அந்த கஜானாவை எடுத்து நீ கோயிலுக்கு கொடுத்துடுவே. அப்புறம் நான் நடுத்தெருவுல தான் நிக்கணும்." என்றபடியே தன் இடுப்புத் துப்பாக்கியால் அவள் மார்பை ரத்தச்சகதி யாக்கினான். அடுத்து துப்பாக்கி பாப்பம்மாள் பக்கம்தான் திரும்பியது.

அவள் அடுத்த நொடி காலில் விழுந்தாள்.

"ராஜா... நீங்க சொல்றபடி எல்லாம் கேக்கறேன். என்னைக் கொன்னுடாதீங்க. 'மருதன்தான் ராணியம்மாவைக் கொலை செய்தான். பதிலுக்கு அவனை நான் கொன்னேன்'னு சொல்றேன். எந்த பழிபாவமும் உங்க மேல வராது..." என்று ராஜேஸ்வர பூபதிக்கே ஒரு புதுக்கோணம் காட்டினாள் பாப்பம்மாள்.

ஜமீன்தார் ராஜேஸ்வர பூபதியும் ஒரு புன்னகையுடன் துப்பாக்கியை இடுப்பில் செருகிக் கொண்டார்.

**ஊ**ரே துக்கம் அனுஷ்டிக்க, பாட்டி பாண்டிமாதேவி சடலம் ஜமீன் நந்தவனத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. மருதன் ஒரு குற்றவாளி போல சித்தரிக்கப்பட்டான். ஆனால், செல்லக்கிளி நம்பவில்லை அதை. கம்பளத்தானும் நம்ப வில்லை.

வசிய மருந்தைத் தயார் செய்ததுதான் மிச்சம். ஆனால் அதற்கு வேலையே இல்லாமல் போய்விட்டது. கம்பளத் தானே வந்து கேட்டான். "ராஜா... மருந்து தயாரா இருக்கு. ஆனா பாட்டியம்மா போயிட்டதாலே கஜானா ரகசியம் தெரியாமலேயே போய்டுச்சே...?"

"போடா பைத்தியக்காரா... அது அவ சொல்லாமலே எனக்குத் தெரிஞ்சு போச்சுடா. அதான் அவளைப் போட்டுத் தள்ளிட்டேன்..."

"அப்ப உங்களுக்கு என் உதவி தேவை இல்லையா?"

"யார் தயவும் இனி எனக்குத் தேவை இல்லை. நீயும் இனி அடிக்கடி அரண்மனைக்குள்ள வராதே. சொல்லி விட்டா மட்டும் வா. உன்னை மாதிரி சுடுகாட்டுல கிடக்கற பசங்கள்லாம் இந்த மாளிகைல காலடி வைக்கவே கூடாது..." -ராஜஸ்வர பூபதியிடம் கித்தாப்பு கொடிகட்டி பறந்தது. கம்பளத்தான் முகம் சிவந்து போனது.

காலில் கிடக்கும் செருப்பைக்கூட பதவிசாகத்தான் கழட்டிவிட வேண்டும். ஆனால் ஜமீன்தாரின் ஆணவம் யாராக இருந்தாலும் உதறித் தள்ளுவேன் என்கிற மாதிரிதான் இருந்தது. எதுவும் பேசாமல் திரும்பத் தொடங்கினான்.

வழிமறித்தாள் செல்லக்கிளி.

"என்ன செல்லக்கிளி...?"

"நேத்து நான். இன்னிக்கு நீ. நாளைக்கு இன்னொருத் தனை இந்த ஜமீன்தார் நம்மை உதறின மாதிரி உதர்றதுக் குள்ள இந்த ஆளுக்கு சரியான பாடம் கத்துக் கொடுத்துட ணும் கம்பளத்தான்..."

"எப்படி?"

"அந்த வசிய மருந்தை இப்படிக் கொடு. அப்புறம் கவனி..."

"புரியுது. அவனை நம்ம கைல எடுத்துக்க சொல்றே..."



"ஆமா... நில்லுன்னா நிக்கணும். உக்காருன்னா உக்கார ணும்..."

"வசியத்தால ரொம்ப நேரம் கட்டுப்படுத்த முடியாது. அதான் யோசிக்கறேன்..."

"வேண்டாம். கஜானா ரகசியம் தெரிஞ்சா போதும். அள்ளிக்கிட்டு நாம கம்பி நீட்டுவோம். மீசையில்லாத வீரன் மாதிரி காசில்லாத ராஜாவா கிடந்து இவன் சாகட்டும்..."

"நல்ல யோசனைதான்... இந்தாபொடி. பால்ல கலக்கிக் கொடு. அப்புறம் பார்... எதைக் கேட்டாலும் உளறிடு வான்...." என்றபடியே பொடியைத்தர, ஆவலாக வாங்கிக் கொண்டாள் செல்லக்கிளி. சிறிது நேரத்தில் அழகிய மயக்கும் தோற்றத்திற்கு தன்னை மாற்றிக் கொண்டாள். ஒருதட்டில் மதுக்கோப்பையுடன் ஜமீன்தார் முன் போய் நின்றாள்.

"நீயா..." அவரும் சீறினார்.

அவள் கண்கள் கசிந்தன. அப்படியே மதுவைக் கீழே வைத்தவள் காலைப் பிடித்தாள். முதலில் உதறினாலும் பிறகு 'சரி சரி' என்று இழுத்து கட்டிக் கொண்டார். மதுவும் உள்ளிறங்கியது.

கம்பளத்தானின் மாயச்சரக்கு நன்றாகவே வேலை செய்தது. அவனும் செல்லக்கிளி பின்னாலேயே வந்து அந்த அறையில் ஒளிந்திருந்தான்.

செல்லக்கிளி ஆரம்பித்துவிட்டாள்.

கஜானா அறைக்குச் செல்லும் வழியை ஜமீன்தாரும் உளறி முடிக்க, கையைச் சொடுக்கிக் கொண்டாள். நிறைய ஊற்றிக் கொடுத்து போதையில் தள்ளிவிட்டு வேகமாக கிளம்பினாள். அரை மணியில் ஒரு தாழிப்பானைக்குள் அவ்வளவு தங்கம், வைரத்தையும் அள்ளிப் போட்டுக்

கொண்டு அதைத் தலையில் சுமந்தபடியே வெளியேயும் வந்துவிட்டாள்.

இரவு நேரம் வேறு வசதியாகக் கை கொடுத்தது. கஜானா அறைக்கு வெளியே உள்ள பாதை வடக்குப்பக்கம் அய்யனார் கோயில் பக்கம் போனது. அந்த கோயில் வரைதான் அந்த தாழிப்பானையை அவளாலும் சுமந்து செல்ல முடிந்தது.

கோயிலில் அய்யானார் காலடி அகல்விளக்கு வெளிச்சம் அவளுக்கு ஓரளவு வழிகாட்டியது. அதே சமயம் தூரத்தில் நாய்கள் குரைக்கும் சப்தமும், முயல் வேட்டைக்காக ஊரார் உள்ளேறி வரும் அரவமும் கேட்டது.

அவர்கள் கண்ணில் தாழிப்பானை தங்கம் பட்டால் கதை கந்தல்தான்... சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவள், அய்யனார் கை வேலாலேயே அவருக்குப் பக்கத்திலேயே ஒரு குழியைத் தோண்டத் தொடங்கினாள். பானையை உள்ளே வைத்து மண்ணைப் போட்டு மூடியவள், அதன் மேல் ஒரு குதிரைச் சிலையை இழுத்து வந்து நிறுத்தினாள்.

இனி கவலையில்லை. ஜமீன் செல்வத்துக்கு அய்யனார் தான் காவல்.

தேவைப்படும் போது வந்து கொஞ்சம் கொஞ்சமாக தங்கத்தை எடுத்துக் கொள்ளலாம் என்கிற முடிவுடன் கையை உதறிக் கொண்டு வந்தவள் எதிரில் கம்பளத்தான். மேலெல்லாம் ரத்தம் வேறு.

"கம்பளத்தான்... என்ன இது மேனி பூரா ரத்தம்...?"

"ஜமீன்தாரைக் கொன்னுட்டேன். நீ கிளம்பவும் அந்த ஆளுக்கு போதை தலைக்கேறிடிச்சு. மயக்கத்துல கிடந்த வனை ஒரே குத்தா குத்தி கொன்னுட்டேன். தப்பித்தவறி தெளிஞ்சு எழுந்தா உன்னையும் என்னையும் விடமாட்டான் பாரு... அதான்!"



"என்னய்யா காரியம் பண்ணுனே நீ? அவசரப்பட்டுட்டியே..."

"என்ன செல்லக்கிளி சொல்லுறே..."

"ஜமீன்தார் கஜானாவுல எதுவுமே இல்லை. அந்த ஆள் வேற எங்கையோ இடம் மாத்திட்டான். இப்ப ரகசியம் அவனோட போச்சு பார்..."

"செல்லக்கிளி... " கம்பளத்தான் கறுவினான்.

"ஆமாய்யா... என்னை நம்பு..."

"அப்புறம்..."

"அட, சத்யமாய்யான்னா..."

"வேண்டாம். வெளயாடாதே. ஆளுக்குப் பாதி பிரிச்சுக்குவோம். சொன்னாக் கேளு..."

"அட, இருக்கற இடம்தான் தெரியாதுங்கறேனே..."

"செல்லக்கிளி... நீ அந்த ஜமீன்தாரையே நல்லவனாக் கறே..."

"கம்பளத்தான்! அவசரப்படாதே. நான் சொல்றத கேள். என்னை நம்பு..."

"உன்னை நம்பறதா? நீ பெரிய கைகாரி." என்றபடி தன் இடுப்பு கட்டாரியைக் கையில் எடுத்தான் கம்பளத்தான்.

அவளிடமும் பதில் வேகம். சட்டென்று குனிந்து காலடி மணலை அள்ளி அவன் முகத்தில் அடித்துவிட்டு ஓடத் தொடங்கினாள்.

அவள் ஓடிய பாதை அக்ரஹாரத்தில் முடிந்தது. அதிலும் சாஸ்திரிகள் வீட்டுக் கொல்லைப்புறமாகப் பார்த்து முடிந்தது. சாஸ்திரிகள் பெரிய அளவில் வைக்கோல் போரை போட்டிருந்தார். அதன்மேல் போய் விழுந்து வைக்கோலால் மூடிக் கொண்டாள். நெடுநேரம் வரை அசையாமல் படுத்துக் கிடந்து விட்டு, ஆளரவமே இல்லை என்பதை உறுதிப்

பதுக்கிக் கொண்டுதான் எழுந்தாள். அப்படியே கொல்லைக் கதவருகே போய் நின்றாள். அது திறந்தே இருந்தது ஆச்சரிய மாகவும் இருந்தது.

உள்ளே எட்டிப் பார்த்தாள். பின்மெல்ல காலடி வைத்து உள்ளே சென்றாள். ஒருவரும் இல்லை. ஆச்சரியமாக இருந் தது. சாஸ்திரிகள் இனி இந்த ஊரில் வாழ்வதில் அர்த்தமே யில்லை என்று புறப்பட்டு விட்டது அவளுக்கு அப்போது தான் தெரிந்தது. சுவரில் அவரது படம்... அங்கங்கே சில பொருட்கள். அவைகளை விட்டுவிட்டு அற்ப சொற்ப பொருட்களோடு தெற்குப்பட்டிக்கும் அவர் போய் விட்டிருந்தார். செல்லக்கிளிக்கு தனக்கு தற்காலிகமாக ஒளிந்துகொள்ள ஒரு இடம் கிடைத்ததுபோல் இருந்தது. கம்பளத்தான் எப்படியும் தன்னைத் தேடி அலைவான். அவன் கண்ணில் படாமல் தப்பிக்க இந்த மனைதான் சரியான இடம் என்று தீர்மானித்தாள்.

ஊரிலும் இந்த இரவில் ஜமீன்தார் சாவின் எதிரொலியாக தமுக்குப் போட்டு ஊருக்கு தகவல் சொல்லும் சப்தம் லேசாக தேய்ந்து வந்து காதில் விழுந்தது.

அய்யனார் கோயிலில் புதைத்து வைத்த அவ்வளவு தங்க நகைகளும் அவள் மனக்கண்ணில் மின்னின. எப்படியாவது சில நாட்கள் இங்கே தள்ளிவிட்டு ஒரு இரவில் அந்தப் புதையலோடு கம்பி நீட்டிவிட வேண்டும். இதுதான் அவளது முடிவாக இருந்தது. அப்படியே தொண்டையை வறட்டியது. கொல்லைப்புறம் கிணற்றடி நோக்கி நடந்தாள்.

வாழ்க்கையைத் துணிச்சலாக வசப்படுத்தி விட்டது போல ஒரு எண்ணம். கிணற்றடியில் வாளி கயிறு இல்லை. கிணற்றுக்குள் இறங்கினால்தான் தண்ணீர் குடிக்கலாம் என்பது புரிந்தது. மேலே சந்திரன் இருந்து நீரில் தெளிவாகத் தெரிந்தான். பக்கவாட்டில் சில படிகள். துணிச்சலாக அதில் இறங்கினாள். புடவையை இழுத்து இடுப்பில் செருகிக்



கொண்டு... கிணற்று உள்கட்டுக்குள் அடர்வாக புதர். ஒரு கையை நுழைக்க முடிந்த அளவுக்கு அதில் துவாரம் வேறு. அதில் நல்லபாம்பு ஒன்று மெல்ல தலையை நீட்டியபடி இருந்தது. கச்சிதமாக அதன் அருகே கல்படியில் செல்லக் கிளி காலை வைக்கவும், அதற்கு உயிர்பயம் ஏற்பட்டதில் சீற்றத்துடன் ஒரே போடு...

"ஐயோ..." அலறலுடன் தண்ணீரில் விழுந்தாள். ஒருபுறம் விஷம்- மறுபுறம் மூச்சுத்திணறல், சர்ப்பம் கல்படி மேல் உடம்பை வளைத்துப் போட்டுக் கொண்டு அவள் தத்தளிப் பதை பார்த்தபடியே இருந்தது.

சில நிமிடங்களில் செல்லக்கிளி செல்லாப் பிணமாகி அப்படியே கட்டை போல மிதக்கத் தொடங்கினாள்.

மகாராணி போல் வாழப்போவதாகக் கற்பனை செய்தவள்... மரக்கட்டையை விடக் கேவலமாகி விட்டாள்.

அதன்பின் இரண்டு மூன்று நாள் கழித்துதான் ஊருக்கு விஷயம் தெரிந்தது. அதுவும் துர்நாற்றமெடுத்ததால் மெல்லச் சென்று எட்டிப் பார்த்தனர். அவர்களில் கம்பளத்தானும் இருந்தான். செல்லக்கிளியைப் பார்த்து ஏமாற்றத்தை அப்ப டியே முகத்தில் எதிரொலித்தான்.

"ஒட்டுவதுதான் ஒட்டும்-கிட்டுவதுதான் கிட்டும்" என்று கேள்விப்பட்ட பழமொழிகள்தான் ஞாபகத்திற்கு வந்தது. ஊருக்குள்ளேயோ வேறு மாதிரி பேச்சு .'சம்பாவின் ஆவி ஒவ்வொருவரையாகப் பழிவாங்கிக் கொண்டு வருகிறது. ஜமீன்தாரை மட்டுமல்ல, அவரது ஆசைநாயகிகளைக் கூட அது விடவில்லை, விடாது' என்றுதான் பேசினார்கள்.

கஜானா தங்கம் எங்கே போயிற்று என்பதும் கடைசிவரை தெரியவில்லை. நிச்சயம் அதையும் சம்பாவின் ஆவிதான் பாதுகாத்து வருவதாக காலப்போக்கில் நம்பிக்கை உருவாகி விட்டது. கம்பளத்தானும் தேடித் தேடி களைத்து விட்டான்.

அவனது மாயத்தில் குதிரை தெரியும் போதெல்லாம், அது அய்யனார் கோவில் குதிரை என்று அவனால் யூகிக்க முடியவில்லை. ஜமீன்தாரின் குதிரைலாயம் என்று அங்கெல்லாம் போய் தேடினான். அவனால் செல்லக்கிளி ஏமாற்றியதை ஜீரணிக்கவே முடியவில்லை. நாட்கள் கழிந்ததுதான் மிச்சம். அவனும் தாடி மீசையுடன் உருமாறியதுதான் மிச்சம். அமைதியாக ஜமீன்தாரின் சமாதி அருகே போய் உட்கார்ந்து கொள்வான். பயங்கரமாக வெறிப்பான், திரும்பி வருவான். ஊரும் அவனை ஒரு மனநோயாளியாகவே பார்க்கத் தொடங்கி விட்டது.

அவனைப் போலவே அவனது ஒரே மகன் சின்னானும் ஏதோ ஒரு நம்பிக்கையில் ஊரைச் சுற்றி வருகிறான். நடுவில் கம்பளத்தானை மரணம் நெருங்கிவிட்டபோது, "மவனே... எனக்குத்தான் இந்த செல்வம் கிடைக்கல. உனக்காவது அது கிடைக்கட்டும். அந்த அய்யர் பொண்ணு ஆவியை வசப்படுத்தி அதுகிட்டையே கேட்டுப் பாரு. அது வழிகாட்டும். உனக்கு எப்ப புதையல் கிடைக்குதோ அப்பதான் என் ஆத்மா சாந்தியடையும். அதுவரை இந்த ஊரை சுத்திச் சுத்திதான் என் ஆவி அலையும், என்னை ஆளுக்கு ஆள் ஏமாத்திட்டாங்கடா, நீயும் ஏமாந்துடாத... உனக்கு கிடைக்காட்டி போனாகூட பரவால்ல... அதை வேற யாரும் நெருங்கிடக்கூடாது... நெருங்க விட்டா நீ என் மவனே இல்லை..." என்று சாகும்போது அவன் மனதில் ஒரு சபதத்தை விதைத்து விட்டுத்தான் செத்துப் போனான்.

சின்னானும் அப்பன் இடத்தில் இருந்து வேட்டையைத் தொடங்கிவிட்டான். மந்திர சாஸ்திரப்படி ஆவி வசியம் அது இது என்று அவன் போக்கே மாறித்தான் போனது. அதுவே விபரீதமாகி அவனை சித்தப்பிரமையிலும் பிடித்துத் தள்ளிவிட்டதாக, அப்போது சரி, இப்போதும் சரி ஊர் நினைக்கிறது.



எது எப்படியோ... இந்த நொடி வரை கரட்டு மலையில் உயிரை விட்ட சாமியாரானவர் சாபம் இட்டது மட்டும் வீண்போகவில்லை. அந்தப் புதையலால் யாருக்கும் ஒரு பயனுமில்லை.

புதைத்து வைத்த இடத்தில் குதிரைகள் பல காலப் போக்கில் சிதைந்து இடம் மாறி விட்டன. கால மாற்றத்தில் அந்த இடத்தின் மேல் பேச்சி என்கிற பெண் தெய்வத்தின் சிலை வந்து உட்கார்ந்துவிட்டது.

இனி...?




எப்பொழுதும் தெய்வ உருவங்கள் யந்திரத் தகடுகளின் மேல் நவரத்னக் கற்களின் மேல்தான் அமர்த்தப் பெறும். வாயில் நிலைகாலும் தெய்வம் போலத்தான். அங்கும் நவரத்னம் பதிப்பார்கள். ஒன்பது ரத்தினங்கள் என்றால் ஒன்பது கிரகங்கள் என்று பொருள். ஒன்பது கிரகங்களை ஒன்றாக்கி அதன்மேல் மரம், சிலை, விக்ரகம் போன்றவைகளை நிறுவும் போது, அதற்கு ஒரு தனித்த சக்தி ஏற்படுகிறது. அந்தச் சக்திக்கு ஒரு ஊரையே தலைகீழாக மாற்றும் ஆற்றல்கூட உண்டு. அதன் கதிர்கள் மனித மனங்களில் புகுந்து எண்ண வரிசையையே மாற்றும்.

-வாஸ்து ஞானி பிரம்மானந்த சாஸ்திரி

## 2005–வடக்கன்குளம்

ராமகிருஷ்ணன் முற்றாக மாறி இருந்தான். அச்சு அசல் ஒரு வடக்கத்தியான் போல... பேச்சிலும் கோணலான தமிழ். நிறைய இந்தி வார்த்தைகள். வசுமதி அவன் உரு மாற்றத்தைப் பெரிதும் ரசித்தவளாக, "இப்படியே காலம் பூரா இருங்க சார்... அழகா இருக்கு..." என்று நையாண்டி

செய்தான். அதை அலட்சியப்படுத்தி விட்டு நேராக ஜமீன்தார் சமாதி நோக்கிப் புறப்பட்டு விட்டான். ஒரு பிரீஃப்கேஸ் சகிதம் சமாதிக்குச் சென்றவனை, அங்கே படுத்துக்கிடந்த சின்னான் உற்று உற்றுப் பார்த்தான். பிறகு தாடையைச் சொறிய ஆரம்பித்துவிட்டான்.

ராமகிருஷ்ணன் சட்டையே செய்யவில்லை. சமாதியில் கற்பூரம் கொளுத்தினான். பிறகு கைகளைக் கூப்பியவனாக, "ஜமீன்தார்ஜி! நான் இதுவரை பல புதையல் எடுத்தவன். ஆனா எல்லாமே சோட்டாபுதையல். இந்த ஊர்ல உங்க சமஸ்தான புதையல்தான் அச்சா புதையல்னு கேள்விப்பட்டு இங்க வந்துருக்கேன். இனி அதைக் கண்டு பிடிக்காம திரும்ப மாட்டேன். உங்க ஆத்மா எனக்கு வழிகாட்டட்டும்." என்று சின்னானின் காதில் விழும்படி வேண்டிக் கொண்டு விட்டு கிளம்பினான்.

சின்னானிடம் எந்த ரீ ஆக்ஷனும் இல்லை. பைத்தியம் போல் தாடையைச் சொறிந்து கொண்டே கிடந்தான். வெகு தொலைவில் ஜவஹரும், வசுமதியும் கவனிப்பது தெரியாமல் கவனித்துக் கொண்டே இருந்தனர்.

ராமகிருஷ்ணனும் திரும்பி வந்தான். ஊருக்குள் நடந்தான். சின்னான் திரும்பிக்கூட பார்க்கவில்லை. அதை ஜவஹரும் கவனித்தான். வசுமதியிடம் தன் கருத்தைச் சொல்லத் தொடங்கினான்.

"சின்னான் மேல சாருக்கு வந்திருக்கற சந்தேகம் அர்த்தமே இல்லாதது. அவன் மென்ட்டல், நானும் பலமுறை சந்தேகப்பட்டு கவனிச்சிருக்கேன். இந்த முயற்சியில அவர் ஜெயிப்பார்னு தோணலை" என்றான்.

வசுமதியால் அதற்கு ஒரு சரியான பதிலைக் கூற முடியவில்லை. மௌனித்தாள். ராமகிருஷ்ணனுக்கு வடக்கன்குளம் வந்ததில் இருந்தே பின்னடைவுதான். அவன் யூகம்



ஒரு விஷயத்தில்கூட மெய்யாகவில்லை. இப்பொழுதும் அப்படி ஆகிவிடுமோ என்று தோன்றியது.

ஊருக்குள் நுழையும்போது கண்ணில் பட்டிருந்த நொண்டிச்சாமி தாத்தாவிடமும் ஊர்க்கதை முழுக்க கேட்டாகிவிட்டது. அவர் காட்டிய கோணம் முழுக்க முழுக்க சின்னானைத்தான் குற்றவாளியாகக் காட்டியது.

ஆனால் அவனிடம் இவ்வளவு களேபரத்திலும் துளியும் கலங்கியிராத ஒரு அசராத்தன்மை.

அச்சு அசல் மனப்பிராந்திக்காரன் போலத்தான் தெரிகிறான். ஒருவேளை இரவில்தான் தன் சுயரூபத்தைக் காட்டுவானோ?

"எதுக்கு சந்தேகம்... நீங்க இன்னிக்கு ராத்திரி ஜமீன்தார் சமாதியில ஒரு பூஜை செய்யற மாதிரி அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பாருங்க. அவன் உங்களை வெட்ட வந்தா, அவன்தான் கல்ப்ரிட்" என்று ஜவஹர் சொன்னதும், ராமகிருஷ்ணனுக்கும் சரியாகத்தான் பட்டது. ஆமோதித்தான்.

"சரி... நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க. வந்துடறேன்..." என்று வெளியே அவனும் புறப்பட்டுவிட, வசுமதி குழப்பமாக ராமகிருஷ்ணனைப் பார்த்தாள்.

"என்ன வசு...?"

"கொக்கு தலைல வெண்ணெயை வெச்சுப் பிடிக்கற மாதிரி இருக்கு ராம்..."

"எனக்கும் அப்படித்தான் தோணுது. ஆனா வேற வழி எதுவும் தெரியல. ஊர்லையே புதையல் புதையல்னு அலையற ஒரே ஆத்மா இவன்தான். பைத்தியம்கற முகமூடியில ஒளிஞ்சுக்கிட்டு ஆவிகள் மேல பழிபோட்டு தப்பிச்சுகிட்டிருக்கலாம்னு நினைக்க நிறைய இடம் இருக்கு. இல்லியா...?"

"சரி... அந்த பாழடைஞ்ச வீட்ல சம்பா பாட்டியோட பெண் குரல் கேட்டதே... அது எப்படி?"

"ரொம்ப சிம்பிள். இவனே குரல் மாத்தி பேசியிருக்கலாம்..."

"எப்படி... அங்க நாம பார்த்தப்போ யாரும் இல்லையே..."

"நீ அவசரப்பட்டுறே. உள்ளே சமையல்கட்டு மேல ஒரு பரண் இருந்தது. அதுல ஒளிஞ்சிருக்கலாம். நாம அங்கெல்லாம் ஏறி கவனிக்கத் தவறிட்டோம்..."

"ஸோ... இந்த சின்னான்தான் உங்க வரைல புதையல் சாத்தான்."

"இப்போதைக்கு ஐம்பது பர்சன்ட். இன்னைக்கு நைட் நிச்சயம் அது நூறு பர்சன்ட் ஆயிடும்னு நம்பறேன்..." ராமகிருஷ்ணனிடம் நம்பிக்கை வெளிப்பட்டது.

"ஹ்ூம்...! இந்த விஷயத்துலையும் கிட்ட போனா ஏதாவது திருப்பம் ஏற்படலாம். அது என்ன திருப்பமோ?" வசுமதி அங்கலாய்த்தாள்.

"வசு! நிச்சயம் எந்தத் திருப்பமும் இன்னிக்கு ஏற்படாது. கிட்டத்தட்ட எண்பது வருஷமா இந்த ஊரையே ஒரு புதிரா வெச்சிருக்கற இந்த ஊர் ஜமீனோட புதையல் ரகசியத்துக்கு இன்னிக்கு முடிவு தெரிஞ்சே தீரும். இந்த எண்பது வருஷத்துல சமீபமா சில வருடங்கள்லதான் கொலைகள் நடந்திருக்கு. நடுவுல ஒரு அமைதி இருந்ததையும் யோசிச்சுப் பார்..."

"அப்படின்னா?"

"அந்த அமைதியான காலகட்டத்துக்கு ஒரு காரணம் இருக்கு. இந்த கொலைகளுக்கும் ஒரு சரியான காரணம் இருக்கு. அதையும் நான் தெரிஞ்சிக்க விரும்பறேன்..."



"உண்மைதான் சார். இந்த கால்குலேஷன் ரொம்பச் சரியாவே இருக்கு..." என்று வசுமதியும் ஒத்து ஊத, ஜவஹரும் திரும்பிவந்தான்.

"சார்! உங்க சந்தேகத்துக்கு என் வரைல ஒரு பதில் இருக்கு..." என்றான்.

"சொல்லுங்களேன். என்னன்னு பாக்கறேன்..."

"எங்க ஊர் மலைக்கரட்டுல எப்ப வெடிவெடிச்சு அந்த மலை சிதற ஆரம்பிச்சதோ அப்ப இருந்துதான் கொலைகள் நடக்க ஆரம்பித்தன. கிட்டத்தட்ட எண்பது வருஷமா மலை உச்சிக்கு யாருமே போறதில்லை. ஜமீன்தாரால கொல்லப் பட்டதா சொல்லப்படற சாமியார் ஆவி அங்க இருந்துகிட்டு ஆடு, மாடு மேய்க்கற பல பேர் கண்ணுல அது பட்டதாகவும் ஒரு புரளி பரவவும் மலைப்பக்கமே யாரும் போறதில்லை... அந்த மலை தகர்க்கப்படும் போது டெண்டர் எடுத்தவர்தான் எண்பது வருஷத்துல முதல்முதலா அந்த கரட்டுக்கு மேல போனவர்..."

-ஜவஹர் சொன்ன விளக்கம் ராமகிருஷ்ணன் முதுகை அப்படியே நிமிர்த்தியது.

"மிஸ்டர் ஜவஹர்! இது என்ன புதுசா இன்னொரு ஆவி..."

"ஏன் சார்?"

"இதப்பத்தி யாரும் இதுக்கு முந்தி ஒரு வார்த்தைகூட சொல்லலியே...?"

"எதைப் பத்தியும் நினைச்சுப் பார்க்க ஒரு அவசியம் வேணும் இல்லையா?"

"அதுவும் சரிதான். அதேசமயம் ஒரு கிராமம்னு இருந்தா இந்த ஆவிக் கதைகளும், காவல் தெய்வம் குதிரைல வந்து ஊரைக் காவல் காக்கற கதைகளும் ரொம்ப சகஜம்தான்..."

"அப்படித்தான் நானும் நினைக்கறேன். அதேசமயம் வாஸ்துப்படி அந்த மலை கொஞ்சம் கொஞ்சமா தகர்க்கப்பட ஊருக்குள்ளேயும் நல்ல மாற்றங்கள். அவ்வளவுக்கவ்வளவு தெக்குப்பட்டி இப்ப பின்னடைவுல இருக்கு. நான் முதல்ல இந்த வாஸ்துவை எல்லாம் நம்பலே. இப்ப நம்பறதுல தப்பில்லன்னு தோணுது..."

"எப்பவும் ஜோசியம் சிறந்தது. ஜோசியன் தப்பானவன்னு ஒரு கணக்கு உண்டு. இது வாஸ்துவுக்கும் பொருந்தும். வாஸ்துன்னா என்ன சார்? மண்ணோட சக்தியை எப்படி பயன்படுத்தணும்னு சொல்ற ஒரு மண் விஞ்ஞானம்தானே அது. அதை ஒரு மாய மந்திரம் போல சித்திரிக்கப் பார்த்ததால், பலருக்கு அதன்மேல் ஒரு அவநம்பிக்கையே ஏற்பட்டது."

"சரி சரி... இது இப்படிப்பட்ட விஷயங்களை விஸ்தாரமா பேசற நேரம் இல்ல. நீங்க இப்ப புதையல் தேடி வந்திருக்கற வட இந்தியர், வந்த வேலையைப் பாருங்க..." வசுமதி 'பேச்சு போதும்' என்று சொல்லாமல் சொன்னாள். ராமகிருஷ்ணனும் அவளது பொறுப்புணர்ச்சியைப் பெரிதும் ரசித்தான்.

அப்படியே, "இன்னிக்கு நான் ஜமீன்தார் சமாதிக்குப் போகப் போறதில்லை." என்று பொடி வைத்தான்.

"அப்படின்னா...?"

"நான் போகப் போற இடம் வேற. நிச்சயம் அந்தக் கொலைகாரன் அங்க இருந்தே தீரணும்." என்று சஸ்பென்சாகவே பேசினான்.

"எங்க சார்... அந்த பாழடைஞ்ச வீட்டுக்கா?" ஜவஹர் கச்சிதமாக கேட்கவும். அவன் யூகத்தை மெச்சுவது போல ஒரு பார்வை மட்டும் பார்த்தான்.



இரவாகிவிட்டது.

ஊரே தூங்கி விட்டது. மணியும் பத்தைக் கடந்தாச்சு!

ராமகிருஷ்ணன் அந்த வடக்கத்தியன் வேடத்தில் பூனை போல அந்த பாழடைந்த சாஸ்திரிகள் வீட்டுக்குள் புகுவதை ஜவஹரும், வசுமதியும் பயத்தோடும் பரபரப்போடும் தான் பார்த்தார்கள்.

"ஒரு சிறு சப்தம் கேட்டா கூட போதும்... நாங்க ஓடி வந்துட்றோம்." என்று கூறியுமிருந்தனர்.

ஆனால், உள்ளே நுழைந்த ராமகிருஷ்ணனிடம் இருந்து எந்த சப்தமும் இல்லை. மாறாக கையில் ஒரு கடிதமுடன் அவனே வெளியில் வந்தான். அவன் முகத்தில் இறுக்கம்.

"சார்! என்னாச்சு? அது என்ன கடிதம்? ஜவஹர் கேள்விக்குப் பதிலாக கடிதத்தை நீட்டினான்.

கடிதத்தில்...

பிரம்மானந்த சாஸ்திரி எழுதுவது...

காலத்தை வென்று வாழ நினைத்தேன். முடியவில்லை! எனது யோகத்தால் முதுமையை ஓரளவு வெல்ல முடிந்தது. ஆனால் பொருளாசை விடவில்லை. நான் இந்த ஊருக்கு வந்ததே ஜமீன் செல்வத்தை அபகரிக்கத்தான். ஆனால் ஒரு கட்டாரி என் உயிரைக் குடிக்கப் பார்த்தது. நல்லவேளை, தப்பிவிட்டேன். ஆனால் பயனில்லை. அதற்குள் ஜமீன் செல்வம் எங்கோ போய்விட்டது.

எண்பது ஆண்டுகளாக அதைத் தேடிய எனக்கு மலைக் கரடு வீடாகப் பயன்பட்டது. அந்த மலையின் மேலேயே அழிவு தொடங்கவும்தான் சாஸ்திரிகள் வீட்டுக்கு இடம் மாறினேன். இனியும் பொறுக்கக் கூடாது என்றே பலிகள் கொடுத்து புதையலை அடைய முடிவு செய்தேன். எட்டு திசைக்கு எட்டு பலி, எட்டு பேரும் நல்ல செல்வந்தனாக இருக்க வேண்டும். மதுரைக்கார பேராசைக்கார தரகன்

நாராயணன் பயன்பட்டான். ஏழாவது பலிக்கு நபரை அழைத்துவர வேண்டியவன் என்னிடமே பேரம் பேசினான். அதனால் அவனே ஏழாவது பலி ஆனான்.

எட்டாவதற்கு காத்திருந்தேன். அது எட்டாது என்பது புரிந்துவிட்டது. போலீஸ் வந்துவிட்டது. வாஸ்து பலமும் மிக உருவாகிவிட்டது. மலை இருந்தவரை ஊரில் தீயதே நடக்க வேண்டும். மலை முற்றாக தகர்ந்து விட்டதால் இன்று ஊரே பலமாகி விட்டது. இதன் பலத்தை வெல்ல முடியாது என்பதே என் தீர்மானம். வீணாக மோதி அவமானப்படுவதைவிட, எட்டாம் பலியாக என்னையே தருகிறேன். புதையல் இருக்குமிடம் தெரிந்து விட்டால் அதை அரசு நல்லதற்கே பயன்படுத்தி நன்மை செய்யட்டும்...'

-கடிதத்தைப் படித்த ஜவஹருக்கு வயிற்றில் அமிலமே சுரந்தது. பாழடைந்த வீட்டுக்குள் நுழைந்து பார்த்தபோது உள்ளே அந்தச் சாமியாரின் வற்றி உலர்ந்த சரீரம் தலைவேறு உடல் வேறாக...

முற்றும்